




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:78 | 03-10-2025 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

03.10.2025 புரட்டாசி 17
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.02

திதி:
இன்று மாலை 3.26 வரை ஏகாதசி பின்பு துவாதசி.

நட்சத்திரம்:
இன்று காலை 6.22 வரை திருவோணம் பின்பு அவிட்டம்.

யோகம் :
இன்று இரவு 8.19 வரை திருதி பின்பு சூலம்.

கரணம் :
இன்று அதிகாலை 3.36 வரை வணிசை பின்பு மாலை 3.26 வரை பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.01 வரை சித்த யோகம் பின்பு காலை 7.22 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 7.22 வரை திருவாதிரை பின்பு புனர்பூசம் .

நல்ல நேரம்
காலை 9.15 – 10.15.
மாலை 4.45 – 5.45
இராகு காலம்
காலை 10.30 – 12.00.
எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

குளிகை
காலை 7.30 – 9.00

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# 5 ஆண்டுகளுக்குப் பின் இந்தியா - சீனா இடையே நேரடி விமான சேவை!

## அக்.26 முதல் தொடக்கம்

**புது டில்லி, அக்.3:**

இந்தியா - சீனா இடையே கடந்த 5 ஆண்டுகளாக நீடித்த பதற்றங்களுக்குப் பின்னர் முதல் முறையாக வருகிற 26 ஆம் தேதி நேரடி விமான சேவை துவங்கப்படவுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு ஜூன் 15, 16-ஆம் தேதிகளில் இமயமலைத் தொடரில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில் இந்தியா ராணுவத்தினர் மற்றும் சீன ராணுவத்துக்கு இடையேயான சண்டையில் இந்திய வீரர்கள் 20 பேரும், சீனத் தரப்பிலும் 35 பேர் உயிரிழந்தனர்.

அதனைத் தொடர்ந்து கரோனா பெருந்தொற்று, லடாக் பிரச்சினை உள்ளிட்ட காரணங்களால், இந்தியா - சீனா இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டு இந்தியாவில் சீன செயலிகளுக்கு தடைவிதிக்கப்பட்டு, விமான போக்குவரத்து தடைசெய்யப்பட்டது.

2024 அக்டோபரில் ரஷியாவின் கசானில் பிரதமர் நரேந்திர மோடியும், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதன்பின்னர், அவரின் அழைப்பின் பேரில் கடந்த ஆகஸ்ட் மாதம் சீனாவில் நடைபெற்ற ஷாங்காய் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி அங்கு சென்றிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, இருநாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்தும் முயற்சியாக சீன அதிபரின் வரவேற்பை ஏற்று பிரதமர் நரேந்திர மோடி, ஷாங்காயில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் கலந்துகொண்டார்.

அப்போது, பிரதமர் மோடி மற்றும் சீன அதிபர் ஜின்பிங் ஆகியோர் நேரில் சந்தித்து உரையாடினர்.

சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி கடந்த மாதம் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த போது விமான சேவை குறித்தும் பேச்சுவார்த்தைநடத்தியிருந்தார்.

அப்போது நேரடி விமான சேவைகளை மீண்டும் தொடங்குவது தொடர்பான முதல் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இண்டிகோ நிறுவனம் விமான சேவைகளை இயக்க ஏர்பஸ் ஏ320நியோ விமானங்களைப் பயன்படுத்த உள்ளது.

**இருநாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்தும் முயற்சியாக சீன அதிபரின் வரவேற்பை ஏற்று பிரதமர் நரேந்திர மோடி, ஷாங்காயில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் கலந்துகொண்டார். அப்போது, பிரதமர் மோடி மற்றும் சீன அதிபர் ஜின்பிங் ஆகியோர் நேரில் சந்தித்து உரையாடினர். சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி கடந்த மாதம் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த போது விமான சேவை குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.**

இந்த நிலையில், இந்தியாவிலிருந்து சீனாவுக்கு நேரடி விமான சேவையை வருகிற அக்டோபர் 26 முதல் துவங்கும் என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிவிப்பு வெளியான சில நிமிடங்களிலேயே இண்டிகோ விமான போக்குவரத்து நிறுவனம், கொல்கத்தாவில் இருந்து குவாங்சோ இடையே தினசரி சேவைகளைத் தொடங்கவிருப்பதை தெரிவித்துள்ளது.

மேலும், தில்லியில் இருந்து குவாங்சோவுக்கு விரைவில் விமான போக்குவரத்து தொடங்கும் என்றும் தெரிவித்துள்ளது.

முன்னதாக, ஏர் இந்தியா, இண்டிகோ, ஏர் சீனா, சீனா சதர்ன் மற்றும் சீனா ஈஸ்டர்ன் ஆகியவை நேரடி விமானங்களை இயங்கி வந்த நிலையில், அது மீண்டும் படிப்படிப்பாக தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.




# இந்திய ஜனநாயக கட்டமைப்பை முழுமையாக தாக்கி வருகிறது பாஜக

## கொலம்பியாவில் ராகுல் காந்தி பேச்சு

**கொலம்பியா, அக்.3:**

கொலம்பியாவில் உள்ள இஐஏ பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடம் உரையாற்றிய ராகுல் காந்தி, "இந்தியாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் இடையிலான உரையாடல் தேவை. அதேபோல, இந்தியாவில் வெவ்வேறு மரபுகள், மதங்கள், கருத்துகளுக்கும் இடம் தேவை. அந்த இடத்தை உருவாக்குவதற்கான சிறந்த வழி ஜனநாயக அமைப்புதான். தற்போது, ஆளும் பாஜக அரசில் ஜனநாயக அமைப்பின் மீது முழுமையாக தாக்குதல் நடத்தப்படுகிறது. இந்தியாவில் நடைபெறும் ஜனநாயகத்தின் மீதான தாக்குதல்தான் மிகப் பெரிய ஆபத்து.

சீனா செய்வதை நாங்கள் செய்ய முடியாது. அந்த நாடு மக்களை அடக்கி ஒரு சர்வாதிகார அமைப்பை நடத்துகிறது. எங்கள் நாட்டின் அமைப்பு அதை ஏற்றுக்கொள்ளாது. 2016-இல் பாஜக அரசாங்கத்தின் பணமதிப்பிழப்பு கொள்கை மிகப் பெரிய தோல்வியடைந்தது. கருப்பு பணத்தை ஒழித்துவிடுவோம் என்ற எண்ணத்துடன் அவர்கள் பணமதிப்பிழப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். கொள்கையாக அது தோல்வியை தழுவியது.

அதிகாரப் பரவலாக்கல்தான் ஊழலை ஒழிப்பதற்கான ஒரு பயனுள்ள வழி. ஆனால், இந்தியாவில் ஆளும் பாஜக அரசாங்கத்தில் பரவலான ஊழல் உள்ளது. இந்தியாவில், இப்போது மிகவும் மையப்படுத்தப்பட்ட மட்டத்தில் மிகப் பெரிய அளவிலான ஊழல் உள்ளது. பிரதமருடன் நேரடி உறவைக் கொண்ட மூன்று, நான்கு வணிகங்கள் முழு பொருளாதாரத்தையும் கைப்பற்றுகின்றன. இந்தியாவில் இப்போது ஊழல் பரவலாக உள்ளது" என்று ராகுல் காந்தி பேசினார்.



# இந்தியா வருகிறார் தலிபான் வெளியுறவு அமைச்சர்!

**புது டில்லி, அக்.3:**

ஆப்கானிஸ்தான் தலிபான் அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் அமிர் கான் முத்தாகி, அடுத்த வாரம் இந்தியா வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், தலிபான் அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் அமிர் கான் முத்தாகி, வரும் அக்டோபர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் இந்தியா வருகின்றார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கெனவே, கடந்த ஆகஸ்ட் மாதம் தலிபான் அமைச்சர் முத்தாகி இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளதிட்டமிட்டிருந்தார். ஆனால், சர்வதேச பாதுகாப்பு ஆணையம் அவர் பயணம் செய்ய விதித்திருந்த தடையானது நீக்கப்படாததினால், அந்தப் பயணம் ரத்து செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# 6 மாவட்டங்களில் இன்று கனமழை வாய்ப்பு

**சென்னை,அக்.3:**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் இன்று (அக்.3) முதல் 8-ம் தேதி வரை ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் நாளை காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம் மாவட்டங்களிலும், 4-ம் தேதி திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிபேட்டை, வேலூர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களிலும், 5-ம் தேதி மதுரை, விருதுநகர், சிவகங்கை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் 3 செமீ, செஞ்சி, வளத்தி ஆகிய இடங்களில் தலா 2 செமீ, புதுச்சேரி, ராணிப்பேட்டை மாவட்டம் கலவை, திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு, விழுப்புரம் மாவட்டம் மயிலம், கோவை மாவட்டம் சின்கோனா ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தங்கம் விலை பவுன் ரூ.88,000-ஐ நெருங்கியது



**சென்னை,அக்.3:**

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று (அக்.2) காலை கிராமுக்கு ரூ.70 குறைந்த நிலையில் மாலையில் ரூ.70 உயர்ந்தது. அதன்படி தற்போது, சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.70 உயர்ந்து ஒரு கிராம் ரூ.10.950-க்கும், பவுனுக்கு ரூ.560 உயர்ந்து ஒரு பவுன் ரூ.87,600-க்கும் விற்பனையாகிறது.

சர்வதேச பொருளாதாரச் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதிப்பு, டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பில் சரிவு, உக்ரைன் - ரஷ்யா போர், இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் உள்ளிட்ட காரணங்கள் தங்கம் விலை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

கடந்த 26-ம் தேதி முதல் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வந்த நிலையில் இன்று காலை சற்றே குறைந்தது. ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரு நாள் முழுமைக்கும் கூட நீடிக்காமல் மாலையிலேயே கிராமுக்கு ரூ.70 உயர்ந்துள்ளது. ஒரு கிராம் ரூ.11,000-ஐ நெருங்கியுள்ளதால் நகை வாங்குவோர் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளனர். வெள்ளி ஒரு கிராம் ரூ.163-க்கு விற்பனையாகிறது.

# காசாவுக்கு உதவிப்பொருட்கள் கொண்டு சென்ற கப்பல்கள் தடுத்து நிறுத்தம்

## கிரேட்டா தன்பெர்க் சிறைபிடிப்பு

**பாலஸ்தீனம்,அக்.3:**

பாலஸ்தீன நகரமான காசா மீது தொடர் தாக்குதல் நடத்திவரும் இஸ்ரேல், அங்குள்ள மக்களுக்கு உணவு மற்றும் உதவிப்பொருட்கள் கிடைப்பதையும் கட்டுப்படுத்தி வருகிறது.

இதனால் ஒரு புறம் இஸ்ரேலின் வெடிகுண்டு, பீரங்கி, துப்பாக்கிகளுக்கு இரையாகும் மக்கள் மறுபுறம் பட்டினியாலும் உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில் காசாவிற்கு அத்தியாவசிய பொருட்களை ஏற்றிச் சென்ற குளோபல் சீ ஃப்ளோட்டிலா (ஜிஎஸ்எஃப்) கப்பல்களை இஸ்ரேலிய கடற்படை தடுத்து நிறுத்தியுள்ளது.




மனிதாபிமான உதவிகளை வழங்கும் நோக்கில், ஸ்பெயினின் பார்சிலோனாவிலிருந்து குளோபல் சீ ஃப்ளோட்டிலா புறப்பட்டது. இந்த ஃப்ளோட்டிலா 44 நாடுகளைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறிய கப்பல்களைக் கொண்ட குழுவாகும்.

ஆனால் காசாவில் இருந்து 70 கடல் மைல் தொலைவில் கப்பல்கள் தடுத்து நிறுத்தப்பட்டது. அதில் வருகை தந்த ஸ்வீடிஷ் சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரெட்டா துன்பெர்க் மற்றும் பிறரை இஸ்ரேல் இராணுவம் தடுத்து நிறுத்தி சிறைபிடித்துள்ளது.

குளோபல் சுமுட் கப்பல்கள் பாதுகாப்பாக தடுத்து நிறுத்தப்பட்டு, அதில் இருந்த மக்கள் இஸ்ரேலிய துறைமுகத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டதாக இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மோதல் பகுதிக்குள் நுழைய வேண்டாம் என்று இஸ்ரேலிய கடற்படை எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும், அவர்களின் பாதையை மாற்றுமாறு கேட்டுக் கொண்டதாகவும் அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.


பல லட்சம் வாசகர்களை கொண்ட தமிழ்நாடு இ-பேப்பரை https://epaper.tamilnaduepaper.com/ இணையதளத்தில் படித்து பயன்பெறுங்கள்






## திருக்குறள் குறள்-398

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து



ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழுபிறப்பிறப்பிலும் உதவும் தன்மை உடையது.

## சிந்திக்க ஒரு நொடி



தன்னை நல்ல வராக
காட்டிகொள்ள
அடுத்தவரை
கெட்டவனாக
சித்தரிக்கும் எவரும்
நீண்ட நாள் நல்லவர்
வேடத்தில் இருக்க
முடியாது

**ராஜகோபாலன் .J**
சென்னை 18

## கோலியனூர் ஸ்ரீவரதராஜ பெருமாள் ஸ்ரீசிக்குதாடை கொண்டை ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலிப்பு!



**விழுப்புரம், அக்.3–:** விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், கோலியனூர் அருள்மிகு ஸ்ரீவரதராஜ பெருமாள் ஸ்ரீசிக்குதாடை கொண்டை ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

நீளா நாயகி, பூமி நாயகி சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோலியனூர் பெருமாள் கோவில் தெருவில் மேற்கு நோக்கி எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார் .

இந்த கோயில்ஸ்ரீநரசிம்ம பல்லவர் காலத்தில் கட்டப் பட்டது. சுமார் 1000 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த இந்த ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவிலில் நவராத்திரியை முன்னிட்டு தினந்தோறும் ஒரு அலங்காரத்தில் வரதராஜ பெருமாள் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார்.

அந்த வகையில் மூலவர் ஸ்ரீ வரதராஜ பெருமாள் ஸ்ரீசிக்குதாடை கொண்டை ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு புரட்டாசிக்கான சிறப்பு பூஜைகள், சிறப்பு ஆராதனைகள் நடந்தது.

இதை தொடர்ந்து பிற்பகல் சிறப்பு வழிபாடு நடந்தது. இரவு சிறப்பு சொற்பொழிவு டாக்டர் அரவிந்தன் ஸ்ரீ வரதராஜ பெருமாளின் வரலாற்று கதைகளை விரிவாக பக்தர்களுக்கு விளக்கி கூறினார்.

பூஜையில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால் அர்ச்சகர் வெகு விமரிசையாக செய்திருந்தார்.

இந்த கோயிலில் ஒன்பது சனிக்கிழமைகள் தோறும் தீபம் ஏற்றி வழிபட்டால் நினைத்த காரியங்கள் நிறைவேறும் என்பது ஐதீகம்.

## சமூக நல்லிணக்க மீலாதுன்நபி விழா



கல்லிடைக்குறிச்சியில் சமூக நல்லிணக்க மீலாதுன்நபி விழா நடந்தது.

## காமராஜர் சிலைக்கு அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை



நாகர்கோவில் வேப்பமூட்டில் காமராஜர் சிலைக்கு தளவாய் சுந்தரம் எம்எல்ஏ தலைமையில் நேற்று அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

## அதிமுக வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்



நாகை மாவட்டம் திருமருகலில் நேற்று நடந்த அதிமுக வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ஓ.எஸ்.மணியன் எம்எல்ஏ. பேசினார்.

## குலசை பத்தாம் திருநாளன நேற்று சம்ஹாரத்திற்கு முன்பு அன்னை மற்றும் சூலத்திற்கு மஹா அபிஷேகம்





குலசை முத்தாரம்மன் கோவிலில் பத்தாம் திருநாளன நேற்று சம்ஹாரத்திற்கு முன்பு அன்னை மற்றும் சூலத்திற்கு மஹா அபிஷேகம் நடந்தது. கொலு மண்டபத்திலிருந்து கோவிலுக்கு அம்மன் எழுந்தருளிய காட்சி.

## தீபாவளி கதர் சிறப்பு தள்ளுபடி விற்பனை



சேலம் அண்ணா பட்டு மாளிகையில் காதி கிராப்ட் விற்பனை அங்காடியில் தீபாவளி கதர் சிறப்பு தள்ளுபடி விற்பனையை கலெக்டர் பிருந்தாதேவி துவக்கி வைத்தார்.

## திமுக மூத்த முன்னோடிகள் 100 பேருக்கு அசோக்குமார் எம்எல்ஏ சால்வை, பதக்கம்



பேராவூரணி தொகுதியில் திமுக மூத்த முன்னோடிகள் 100 பேருக்கு அசோக்குமார் எம்எல்ஏ சால்வை, பதக்கம் அணிவித்து, கேடயம், பொற்கிழி வழங்கினார்.

## காஞ்சிபுரம் காமாட்சி கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்பு விற்பனையை அமைச்சர் காந்தி துவக்கி வைத்தார்



**காஞ்சிபுரம், அக்.3:** காஞ்சிபுரம் காமாட்சி கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்பு விற்பனையை அமைச்சர் காந்தி துவக்கி வைத்தார்.உடன் அரசு செயலாளர் அமுதவல்லி, கோ ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் கவிதா ராமு, கைத்தறித்துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், கலெக்டர் கலைச்செல்வி, எம்எல்ஏக்கள் சுந்தர், எழிலரசன் உள்ளனர்.

**ஈரோடு, அக். 3:** மொடக்குறிச்சி வட்டம், குளூர் ஊராட்சி, செங்கரைப்பாளையத்தில் 02.10.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் காந்தி ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது.

பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவியர்களுக்கு சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்த உண்டியல்கள் வழங்கப்பட்டது. தோட்டக்காட்டு நல்லப் பகவுண்டர் அறக்கட்டளையின் 19-ம் ஆண்டு தொடக்கவிழாவை முன்னிட்டு 100 மாணவ மாணவியர்களுக்கு தலா ஒரு உண்டியல் வீதம் இலவசமாக வழங்கப்பட்டது.

விழாவில் அறக்கட்டளை தலைவர் வி.பொன்னுசாமி அவர்கள் தலைமையில் அறக்கட்டளை உறுப்பினர்கள் எஸ்.பி.சுந்தரம், சி.தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் அறக்கட்டளை செயலாளர் எஸ்.கிருஷ்ணன் அவர்கள் வரவேற்றார்.



குளூர் ஊராட்சி முன்னாள் தலைவர் ஜி.செல்வராஜ் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு 100 மாணவ மாணவியர்களுக்கு உண்டியல்களை வழங்கி, "உண்டியலில் பணம் சேர்த்து புத்தகத் திருவிழாவில் அதிக அளவு புத்தகங்கள் வாங்கினீர்கள்" என்றால், "அடுத்த ஆண்டு 500 உண்டியல்கள் நமது ஊராட்சி முழுவதும் உள்ள மாணவச் செல்வங்களுக்கு வழங்கப்படும்" என உறுதி கூறினார்.

விழாவில் அறக்கட்டளை தாய்மார்கள் மற்றும் உள்ளூர் பெற்றோர்கள், பள்ளி ஆசிரியை எம்.வசந்தா உட்பட பெண்கள் அதிக அளவில் கலந்து கொண்டனர். அறக்கட்டளை உறுப்பினர் சி.மனோகரன் அவர்கள் நன்றி உரையுடன் விழா இனிதே நிறைவுற்றது. நன்றி! வணக்கம்!

## தேமுதிக தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் ஆயுத பூஜை



சென்னை தேமுதிக அலுவலகம் கேப்டன் ஆலயத்தில், தேமுதிக தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் ஆயுத பூஜை, கொண்டாடப்பட்டது.

## தேமுதிக தலைமை அலுவலகத்தில் காந்தி, காமராஜர் படத்துக்கு பிரேமலதா மலர்தூவி மரியாதை



காந்தி ஜெயந்தி மற்றும் காமராஜர் நினைவு நாளையொட்டி. சென்னை கோயம்பேடு, தேமுதிக தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவர்களது படத்துக்கு கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் பொருளாளர் சுதீஷ் மற்றும்நிர்வாகிகள்.

## திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி சட்டமன்றத் தொகுதி திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்று உதவிகளை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

## பட்டுநூல் நிறுவனத்தில் ஆயுதபூசை விழா

**கிருஷ்ணகிரி, அக்.3:** போச்சம்பள்ளி, வடமலம்பட்டி ஸ்ரீஅம்மன் சில்க் யூனிட் பட்டு நூல் தயாரிக்கும் நிறுவனத்தில் நேற்று ஆயுத பூஜை விழா கொண்டாடப்பட்டது.

சிறப்பு விருந்தினர்களாக நல்லாசிரியர் முத்து லட்சுமணன், பட்டுநூல் நிறுவனர் வெங்கடாசலம் ஆகியோர் கலந்துக்கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழாவில் பணியாளர் களுக்கு இனிப்பு, பட்டாசு,



யூனிபார்ம் மற்றும் போனஸ் ஆகியவற்றை நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர்கள் சேகர் மற்றும் சாலம்மாள் ஆகியோர் வழங்கினர்.

இந்நிறுவனம் தமிழகத்தின் சிறந்த பட்டு நூல் தயாரிக்கும் நிறுவனத்திற்கான மாநில விருதுகளை தமிழக முதலமைச்சர் அவர்களிடம் தொடர்ந்து பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## கர்ப்பிணிகளுக்கு நலத்திட்ட உதவி



சென்னை கொரட்டூரில் கர்ப்பிணிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கீதா ஜீவன், கல்யாண மாலை மீரா நாகராஜன் வழங்கினர்.



## காமராஜர் சிலைக்கு மாலை

**பெரம்பலூர், அக்.3:** பெரம்பலூர் மாவட்ட மக்கள் சக்தி இயக்கத்தின் சார்பில் நேற்று அக்டோபர் 02 காந்தி ஜெயந்தி பெருந்தலைவர் காமராசர் நினைவு தினத்தை முன்னிட்டு அண்ணல் காந்தி மற்றும் கர்ம வீரர் காமராசரின் திரு உருவ சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்திய போது எடுத்த படம். உடன் மாநில துணைத் தலைவர் முனைவர் க. பெரியசாமி, மாவட்ட செயலாளர் சிவக்குமார் ஜி, மாவட்ட ஆலோசகர் செ. வைரமணி ஆகியோர் உள்ளனர். நாள்:02.10.2025 இடம் : பழைய, புதிய பேருந்து நிலையம் பெரம்பலூர்.

## காந்தி சிலைக்கு பீட்டர் அல்போன்ஸ் மாலை அணிவித்து மரியாதை



சென்னையில் காந்தி ஜெயந்தி அன்று அவரது சிலைக்கு பீட்டர் அல்போன்ஸ் மற்றும் காங்கிரஸ் முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# கரூர் சம்பவம் வதந்தி பரப்பிய யூடியூபர் கைது

**அரியலூர், அக்.3:**

கரூர் வேலுச்சாமிபுரத்தில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்யின் பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக வதந்தி பரப்பியதாக பிரபல யூடி யூபர் பெலிக்ஸ் ஜெரால்ட் செவ்வாய்க்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார். சமூக வலைதளங்களில் வதந்தி பரப்பினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் ஸ்டாலி னும் காவல்துறையினரும் எச்சரித்திருந்த நிலையில், ரெட் ஃபிக்ஸ் சேனலின் பிரபல யூடியூபரான பெலிக்ஸ் ஜெரால்டை காவல்துறையினர் செவ்வாயன்று அதி காலை கைது செய்தனர். பெலிக்ஸ் ஜெரால்டிடம் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் விசா ரணை நடைபெறுகிறது. வதந்தி பரப்பிய 25 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, ஏற்கனவே மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# எம்.பி.,க்கள் குழு ஆய்வு

**கரூர், அக்.3:**

கரூரில் விஜய் பிரச்சாரம் மேற்கொண்ட போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்ப டுத்திய நிலையில், காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் செவ்வாய்க்கிழமை (செப்.30) நேரில் ஆய்வு செய்தார். அவருடன் மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, மக்களவை உறுப்பினர்கள் ஜோதிமணி, விஜய் வசந்த், ராபர்ட் புரூஸ் ஆகியோ ரும் கூட்ட நெரிசல் பகுதியை ஆய்வு செய்தனர். இதனை தொடர்ந்து கரூர் கூட்ட நெரிசலில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை யும் நேரில் சந்தித்து கே.சி.வேணுகோபால் ஆறுதல் கூறினார். இதேபோல், ஹேமமாலினி தலைமையில் என்டிஏ கூட்டணி எம்.பி.,க்கள் குழுவும் ஆய்வு செய்தது.

# புதிய தமிழகம் உட்பட 10 கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ்

**சென்னை, அக்.3:**

தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை சமர்ப்பிக்காததால் புதிய தமிழகம் உட்பட பத்து அரசியல் கட்சிகளுக்கு இந்திய தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி யுள்ளது. தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை ஆண்டு தோறும் சமர்ப்பிக்க வேண்டும் என்பது விதி. ஆனால் அனைத்து இந்திய எம்ஜிஆர், மக்கள் முன்னேற்ற கழகம், கிறிஸ்துவ ஜனநாயக முன்னணி, ஜெபமணி ஜனதா, காம ராஜர் தேசிய காங்கிரஸ், மக்கள் சக்தி கட்சி, என் இந்தியா கட்சி, புதிய தமிழகம், இந்திய குடியரசு கட்சி - சிவ்ராஜ், தமிழக முன்னேற்ற காங்கிரஸ், வளமான தமிழக கட்சி ஆகிய பத்து அரசியல் கட்சிகள் 2021 முதல் கணக்குகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்கவில்லை. இதனால் இந்த கட்சிகளை பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் முடிவு செய்து உள்ளது. அதற்கு முன்னதாக கருத்து தெரிவிக்க வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது. இக்கட்சிகள் குறிப்பிட்ட தேதிக்குள் எழுத்துப்பூர்வ மான அறிக்கை மற்றும் ஆவணங்களுடன் தமிழக தலைமை தேர்தல் அலுவலர் முன் ஆஜராக வேண்டும். பதில் வரா விட்டால் அக்கட்சிகளிடம் கருத்து இல்லை என கருதி, பதிவு பட்டி யலில் இருந்து நீக்கப்படும் என தேர்தல் ஆணைய வட்டா ரங்கள் தெரிவித்தன.

# மாற்றுத் திறனாளிகளுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு அரசாணை

**சென்னை, அக்.3:**

மாற்றுத் திறனாளிகளுக்கு நான்கு சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படும் என ஏற்கனவே தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த நிலையில் அவர் கள் பணிபுரிவதற்கான ஏற்ற பதவிகள் குறித்த தகவலையும் தமிழக அரசு வெளியிட்டுள்ளது. ஏ, பி, சி, டி என்று நான்கு நிலைகளிலும் 119 பதவி கள் மாற்றுத் திறனாளி களுக்கு ஏற்றவை என அரசாணையில் குறிப் பிடப்பட்டுள்ளது. இந்த அரசாணை மாற்றுத் திற னாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் சமத்துவத்தை உறுதி செய்யும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது

# 98ஆவது பிறந்தநாள்: நடிகர் சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் ஸ்டாலின் மரியாதை



**சென்னை, அக்.3:**

நடிகர் சிவாஜி கணேசன் சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

நடிகர் சிவாஜிகணேசனின் 98-வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி அரசியல் தலைவர்கள், திரை பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் உள்ளிட்ட பலரும் சிவாஜி கணேசனின் சிலைக்கு மரியாதை செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நடிகர் சிவாஜி கணேசன் பிறந்தநாளையொட்டி, சென்னை அடையாறில் உள்ள அவரது மணிமண்டபத்தில் உள்ள சிவாஜி கணேசனின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாலைஅணிவித்துமலர்தூவி மரியாதை செலுத்தினார். அப்போது அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ். ரகுபதி, மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, வைரமுத்து, சிவாஜி கணேசனின் மகன்கள் ராம்குமார், நடிகர் பிரபு, விக்ரம் பிரபு உள்ளிட்ட குடும்பத்தினர் உடனிருந்தனர்.

சிவாஜி கணேசனின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் தமது நடிப்பாற்றலால் உலகையே வியக்க வைத்து வரலாறாக வாழ்ந்து மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்தநாளில் அவரது நினைவுகளைப் போற்றுகிறேன் என கூறியுள்ளார்.

# த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்தை கைது செய்ய 3 தனிப்படைகள் அமைப்பு





**சென்னை, அக்.3:**

கரூர் கூட்டநெரிசலில் சிக்கி 41 பேர் பலியான சம்பவம் தொடர்பாக த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்தை கைது செய்ய 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

கரூர் கூட்டநெரிசலில் சிக்கி 41 பேர் பலியான சம்பவம் தொடர்பாக கரூர் டவுன் போலீசார் த.வெ.க. கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் (வயது 49), பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், மாநில இணை செயலாளர் நிர்மல்குமார் மற்றும் சிலர் என குறிப்பிட்டு 5 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இதில் திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை அருகே உள்ள கிராமத்தில் உறவினர் வீட்டில் பதுங்கி இருந்த மதியழகனை நேற்றுமுன்தினம் தனிப்படை போலீசார் கைது செய்தனர். மேலும், மதியழகனுக்கு கடந்த 2 நாட்களாக அடைக்கலம் கொடுத்ததாக தவெக கரூர் நகர பொறுப்பாளர் மாசி என்ற பவுன்ராஜையும் (34) கைது செய்தனர்.

இந்த நிலையில், தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், இணை பொதுச்செயலாளர் நிர்மல் குமார் ஆகியோரை கைது செய்ய தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஏற்காட்டில் உள்ள மலை கிராமத்தில் ஆனந்த் தங்கியிருப்பதாக வெளியாகியிருக்கும் தகவலைத் தொடர்ந்து அவரை கைது செய்வதற்காக காவல்துறை ஐஜி ஜோஷி நிர்மல் தலைமையில் 3 தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. ஏற்காடு மட்டுமின்றி சென்னையிலும் ஆனந்தை தேடும் பணியைக் காவல்துறையினர் முடுக்கிவிட்டுள்ளனர்.

இதனிடையே, புஸ்ஸி ஆனந்த் மற்றும் நிர்மல் குமார் தாக்கல் செய்துள்ள முன் ஜாமீன் மனு சென்னை ஐகோர்ட் மதுரைக் கிளையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மேம்படுத்தப்பட்ட தொல்காப்பியப் பூங்கா: ஸ்டாலின் பார்வையிட்டார்





**சென்னை, அக்.3:**

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில், 42.45 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய நுழைவு வாயில், கண்காணிப்பு கோபுரம், பார்வையாளர் மாடம், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட தொல்காப்பியப் பூங்காவினை பார்வையிட்டார்.*

*சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் தொல்காப்பியப் பூங்காவின் மறுமேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு 42.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக அனுமதி வழங்கியது.*

*தொல்காப்பியப் பூங்காவின் மறுமேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் நவீன வசதிகளுடன் கூடிய புதிய நுழைவு வாயில், கண்காணிப்பு கோபுரம், பார்வையாளர் மையம், பார்வையாளர் மாடம், நடைபாதை, சிற்றுண்டியகம், புதிய கழிப்பறை, திறந்தவெளி அரங்கம், இணைப்புபாலம், கண்காணிப்பு கேமராக்கள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் தொல்காப்பியப் பூங்கா பகுதி 1 மற்றும் பகுதி 2 இணைத்து சாந்தோம் சாலையில் உயர்மட்ட நடைமேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது மற்றும் டாக்டர் டி.ஜி.எஸ்.தினகரன் சாலையின் குறுக்கே இருக்கும் குழாய் கால்வாய்க்கு மாற்றாக மூன்று வழி பெட்டகக் கால்வாய் அமைக்கும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.*

*குறிப்பாக, 'தொல்காப்பியப் பூங்கா', சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு வருகிறது. சுற்றுச்சூழல் கல்வியினை சமுதாயத்திற்கு, குறிப்பாக மாணவர்கள் பயன்பெற்றிடும் வகையில் சுற்றுச்சூழல் கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. இதுவரை, 1,446 பள்ளிகளைச் சேர்ந்த, 1,12,826 மாணவர்கள் மற்றும் 6,070 ஆசிரியர்கள், இப்பூங்காவில் நடத்தப்பட்டு வரும் சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சியில் பங்குபெற்று பயனடைந்ததுடன், நகர்ப்புர ஈரநில சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அவசியத்தினை உணர்ந்துள்ளனர். இதுவரை, இப்பூங்காவினை 32,973 பொதுமக்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர்.*

*நடைபயிற்சி பாதை*

*இயற்கை சூழ்நிலை நிறைந்துள்ள தொல்காப்பியப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள 3.20 கிலோ மீட்டர் தூர நடைப்பயிற்சி பாதையில் பொதுமக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ள முதலமைச்சர் 12.05.2022 அன்று அனுமதி வழங்கி, இதுவரை 24,528 நபர்கள் பயனடைந்துள்ளனர்.*

*முதலமைச்சர் இன்றையதினம் தொல்காப்பியப் பூங்காவில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை பார்வையிட்டு, கொன்றை மரக்கன்றினை நட்டு வைத்தார். மேலும், தொல்காப்பியப் பூங்காவினை மக்களின் முழு பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவர வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.*

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

## நலம் தரும் மருத்துவம்

# இரவில் வைஃபை ரூட்டரை அணைக்காமல் தூங்குறீங்களா?



இன்றைய டிஜிட்டல் உலகில் இணையம் என்பது தினசரி தேவைகளில் முக்கியமான ஒன்று. ஸ்மார்ட்போன், லேப்டாப், டிவி போன்ற பல சாதனங்களை ஒரே நேரத்தில் இணையத்துடன் இணைக்க வைஃபை ரூட்டர் பெருமளவில் உதவுகிறது. பணி இடங்களில் மட்டுமே இருந்த நிலை மாறி தற்போது பெரும்பாலான வீடுகளில் அலுவலகப் பணிகளுக்கும், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை ரசிப்பதற்கும் வைஃபையின் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

இத்தகைய சூழலில், இரவில் வைஃபை ரூட்டரை ஆன் நிலையில் வைத்திருப்பது சரியா? அது நம் உடல், நரம்பியல் அமைப்பு, மூளை ஆகியவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்துமா? என்ற கேள்விகள் பலரிடமும் எழுகின்றன. அந்த சந்தேகங்களுக்கான விடையை இந்த பதிவில் வாசித்து தெரிந்து கொள்வோம்.

வைஃபை என்றால் என்ன?

வைஃபை என்பது கம்பிகள் இல்லாமல் மின்னணு சாதனங்களை இணையத்துடன் இணைக்கும் ஒரு தொழில்நுட்பம். சிலர் "WIRELESS FIDELITY" என்பதே அதன் விரிவாக்கம் என்று கூறினாலும், உண்மையில் அதற்கு எந்த ஒரு விரிவாக்கமும் கிடையாது. எளிமையாகச் சொன்னால், இது கம்பிகள் இன்றி தகவல்களை அனுப்பி, பெற உதவும் ஒரு முறையாக பயன்படுகிறது.

மூளை தூண்டுதல்கள் என்றால்?

மனித மூளை செயல்படுவதற்கு மின்சார சிக்னல்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நாம் சிந்திப்பது, உணர்வுகளை வெளிப்படுத்துவது, உடலை இயக்குவது ஆகியவை அனைத்தும் இந்த சிக்னல்களின் மூலம் தான் நடக்கின்றன. அதேபோல், வைஃபை மற்றும் மொபைல் போன்களும் மின்காந்த அலைகளை பயன்படுத்துகின்றன. எனவே சிலர் இது மூளையில் பாதிப்பை ஏற்படுத்துமா என சந்தேகப்படுகிறார்கள். ஆனாலும், இதற்கான தெளிவான மருத்துவ ஆதாரங்கள் இதுவரை இல்லை.

இரவு நேரம் என்பது உடலும் மூளையும் முழுமையாக ஓய்வு எடுக்கும் நேரம். தூக்கத்தின் தரத்தை மேம்படுத்த சில நிபுணர்கள் ரூட்டரை படுக்கை அறையில் வைக்காமல் இருக்கவும், தூங்கும் போது அணைத்து விடவும் பரிந்துரைக்கிறார்கள். அதேபோல், மொபைல் போனையும் படுக்கை அருகில் வைக்காமல் சிறிது தூரத்தில் வைப்பது நல்லது.

வைஃபை ரூட்டரை தொடர்ந்து ஆன் நிலையில் வைத்திருப்பதால் உடலுக்கு நேரடியாக தீங்கு விளைவிக்கும் என்று உறுதிப்படுத்தும் ஆய்வுகள் இதுவரை இல்லை. ஆனாலும், எந்தவொரு அலைகளின் தாக்கம் நீண்ட காலத்திற்கு ஏற்படும் போது விளைவுகளை ஏற்படுத்தலாம். எனவே பாதுகாப்புக்காக இரவில் தூங்கும் போது ரூட்டரை அணைத்து விடுவது, மொபைலை தூரத்தில் வைப்பது போன்ற எளிய முன்னெச்சரிக்கைகள் உடல் நலத்திற்கும் ஆரோக்கியமான தூக்கத்திற்கும் உதவும்.

# விஜய்யின் பிரச்சாரம் அடுத்த 2 வாரங்களுக்கு ரத்து: தவெக அறிவிப்பு

**சென்னை, அக்.3:**

கடந்த சனிக்கிழமை கரூரில் நடந்த விஜய்யின் பிரச்சாரத்தின் போது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த நிலையில், அடுத்த 2 வாரங்களுக்கான மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்படுவதாக தவெக அறிவித்துள்ளது.



இதுகுறித்து தவெக தலைமை நிலையச் செயலகம் வெளியிட்ட அறிவிப்பில், 'நம் சொந்தங்களை இழந்த வேதனையிலும் வருத்தத்திலும் நாம் இருக்கும் இச்சூழலில், நம் கழகத் தலைவரின் அடுத்த இரண்டு வாரங்களுக்கான மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியானது தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது. இந்த மக்கள் சந்திப்பு தொடர்பான புதிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்பதை நம் கழகத் தலைவரின் ஒப்புதலோடு தெரிவித்துக்கொள்கிறோம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தவெக தலைவர் விஜய், சனிக்கிழமை தோறும் பிரச்சாரம் மேற்கொள்ளவர் என அக்கட்சி அறிவித்தது. அதன்படி சுற்று பயண விவரங்கள் குறித்த அறிவிப்பும் வெளியானது.

திருச்சி, அரியலூர், நாகை, திருவாரூர் உள்ளிட்ட பகுதிகளை முதல் 2 வாரங்கள் அவர் சுற்றுப்பயணம் செய்திருந்தார். இந்நிலையில், கடந்த சனிக்கிழமை (செப்.27) அன்று நாமக்கல் மற்றும் கரூரில் அவர் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இந்த சூழலில்தான் கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்துக்கு பிறகு விஜய்யின் சுற்றுப்பயணம் 2 வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தவெக அறிவித்துள்ளது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528


## ஹுருன் இந்தியா பணக்காரர் பட்டியல்: முகேஷ் அம்பானி முதலிடம்!

மும்பை: 2025-ம் ஆண்டுக்கான ஹுருன் இந்தியா பணக்காரர் பட்டியலில் முகேஷ் அம்பானி முதலிடம் பிடித்துள்ளார்.

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைவராக உள்ளார் 68 வயதான முகேஷ் அம்பானி. இந்நிலையில், அவர் மற்றும் அவரது குடும்பத்தினரின் சொத்து மதிப்பு ரூ.9.55 லட்சம் கோடியாக உள்ளது என ஹுருன் இந்தியா பணக்காரர் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் கவுதம் அதானி மற்றும் அவரது குடும்பத்தினர் ரூ.8.15 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் இரண்டாம் இடத்தில் உள்ளனர்.

இந்திய நாட்டின் பணக்கார பெண்மணியாக ரோஷினி நாடார் உள்ளார். அவர் மற்றும் அவரது குடும்பத்தினரின் சொத்து மதிப்பு ரூ.2.84 லட்சம் கோடியாக உள்ளது.

இதே போல இந்தியாவில் நூறு கோடிக்கு மேல் சொத்துமதிப்பு கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ஹுருன் இந்தியா பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்தியாவில் நூறு கோடிக்கு மேல் சொத்து வைத்துள்ள பில்லியனர்களின் எண்ணிக்கை 350-னை கடந்துள்ளது. இவர்களின் ஒட்டுமொத்த சொத்துமதிப்பு ரூ.167 லட்சம் கோடி என தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே பில்லியனர்கள் அதிகமானோர் வசிக்கும் நகரமாக மும்பை அமைந்துள்ளது.

## நடப்பு அரையாண்டில் ரூ.995 கோடி சொத்து வரி வசூல்




சென்னை: சென்னை மாநகராட்சியில், நடப்பு அரையாண்டில் ரூ.995 கோடி சொத்து வரி வசூல் செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியில் கடந்த 2024-25-ம் நிதியாண்டில் ரூ.2,023 கோடி வரி வசூலிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து, நடப்பு நிதியாண்டின் (2025-26) முதல் அரையாண்டுக்கான வரி செலுத்துவதற்கு கடைசி நாள் நேற்றுடன் நிறைவடைந்தது.

அதன்படி, ஏப்ரல் 1-ம் தேதியில் இருந்து செப்.30-ம் தேதி வரை, சென்னை மாநகராட்சியில் ரூ.930 கோடி வரி வசூலாகி உள்ளதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது. இதில், 75 சதவீதம் பேர் இணையம் மூலம் வரி செலுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னை மாநகராட்சியில் தற்போது 13.50 லட்சம் கட்டிடங்கள் சொத்து வரி செலுத்த வேண்டும் என்கிற நிலை இருந்து வருகிறது. இதில், 8 லட்சம் கட்டிடங்களுக்கு வரி வசூலிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நடப்பு வருவாய் ஆண்டில் ரூ.2,300 கோடிக்கு மேல் வரி வசூலிக்க திட்டமிட்டுள்ளதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆதவ் அர்ஜுனாவின் பதிவு உச்சக்கட்ட பொறுப்பின்மை திமுக எம்.பி., கனிமொழி விமர்சனம்

**சென்னை, அக்.3:**

கரூர் நெரிசல் சம்பவம் தொடர்பாக தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனா இடும் பதிவு உச்சக் கட்ட பொறுப்பின்மையை காட்டுகிறது என திமுக எம்.பி., கனிமொழி கடுமையாக விமர்சித்துள்ளார்.





செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த கனிமொழி, கட்சித் தலைவர், நிர்வாகிகள் என ஒருவர் கூட இன்னும் கரூர் மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறாமல் இருப்பது வருத்தமளிக்கிறது என்றார். சம்பவம் நடந்த நாளன்று மக்களைச் சந்தித்து ஆறு தல்கூட சொல்லாமல் அங்கிருந்து கிளம்பியிருக்கிறார்.

ஆனால் தமிழக அரசும், திமுக நிர்வாகிகளும்தான் சம்பவம் நடந்ததில் இருந்து இப்போது வரை மக்க ளுக்கு ஆறுதலாக நிற்கிறார்கள் என்றார்.

இது குறை சொல்லும் நேரம் கிடையாது. முதல மைச்சர் ஸ்டாலின் கூட இப்போதும் மக்களுக்கு துணையாகவே பேசி வருகிறார். தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜு னாவின் பதிவு உச்சக்கட்ட பொறுப்பின்மையை காட்டு கிறது என்று கனிமொழி கூறியுள்ளார்.

முன்னதாக தனது எக்ஸ் பதிவில் சர்ச்சைக்குரிய வகையில் பதிவிட்ட தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனா, சில நிமிடங்களில் அந்த பதிவை நீக்கியிருந்தார்.

சாலை யில் நடந்து சென்றாலே தடியடி, சமூக வலை தளங்களில் கருத்து பதிவிட்டாலே கைது, இப்படி ஆளும் வர்க்கத்தின் அடிவருடிகளாக காவல்துறை மாறிப் போனால், மீட்சிக்கு இளைஞர்களின் புரட்சி தான் ஒரே வழி என்று அவர் பதிவிட்டிருந்தார்.

# செங்கோட்டையன் ஆதரவாளர்கள் மேலும் 40 பேரின் பொறுப்புகள் பறிப்பு

**சென்னை, அக்.3:**

அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டை யன் ஆதரவாளர்கள் மேலும் 40 பேரின் கட்சிப் பொறுப்புகளை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பறித்துள்ளார்.





அதிமுகவில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த செங்கோட்டையன், இது தொடர்பான நடவடிக்கையை பத்து நாட்களுக்குள் எடுக்க வேண்டும் என்று எடப்பாடி பழனி சாமிக்கு கெடு விதித்தார்.

செங்கோட்டையன் கெடு விதித்த மறுநாளே, அவரது கட்சி பொறுப்புகளை எடப்பாடி பழனி சாமி பறித்தார். இதையடுத்து அவரது ஆதரவாளர்களின் பொறுப்புகளும் பறிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கோபிச்செட்டிப்பாளையத்தில் உள்ள தன் இல்லத்தில் செங்கோட்டையன் தொடர் ஆலோசனையில் ஈடுபட்டு வருகிறார். இந்த நிலையில், செங்கோட்டையன் ஆதரவா ளர்கள் மேலும் 40 பேரை அதிமுகவின் பொறுப்புகளில் இருந்து எடப்பாடி பழனிசாமி நீக்கியுள்ளார்.

## 'அரசியல் விளையாட்டைத் தொடங்கிவிட்டது பாஜக'

**சென்னை, அக்.3:**

விடு தலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தனது எக்ஸ் பக்கத்தில், "கரூர் கொடுந்துயரத்தில் தனது அரசியல் விளையாட்டை வெளிப்படையாகத் தொடங்கிவிட்டது பாஜக. கரூரில் நடந்த கொடூ ரத்தைப் பற்றி 'உண்மை கண்டறியும் குழுவை' அமைத்திருப்பது அரசி யல் உள்நோக்கம் கொண்டதே ஆகும். பாஜகவின் சதியை முறி யடிக்க காங்கிரஸ் கட்சியின் தலையீடு உடனடி தேவையாகவுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஆம்னி பேருந்துகளுக்கு எச்சரிக்கை



**சென்னை, அக்.3:**

ஆயுத பூஜை, விஜயதசமி மற்றும் தொடர் வார விடு முறையை முன்னிட்டு (அக்.1 முதல் அக்.5 வரை) பொதுமக்கள் வெளி யூர் பயணம் மேற்கொள் வதைப் பயன்படுத்தி அதிகப்படியான கட்ட ணம் வசூலித்தால் நட வடிக்கை எடுக்கப்படும் என ஆம்னி பேருந்து உரிமையாளர்களுக்கு போக்குவரத்து துறை எச்சரிக்கை விடுத்து உள்ளது.

## தூதரகங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை, அக்.3:**

சென் னையில் உள்ள சிங்கப் பூர், கொரியா, சுவீடன், ஆஸ்திரேலியா, ரஷ்ய தூதரகங்களுக்கு மின் னஞ்சல் மூலம் மர்ம நபர்கள் வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளனர். மோப்ப நாய்கள் உதவியுடன் தூதர கங்களில் போலீசார் சோதனை நடத்தினர்.

# ஆயுதபூஜை தொடர் விடுமுறை; அரசு பஸ்களில் 6.91 லட்சம் பேர் பயணம் - அமைச்சர் சிவசங்கர் ஆய்வு

**சென்னை, அக்.3:**

ஆயுதபூஜை தொடர் விடுமுறையை முன்னிட்டு அரசு பஸ்களில் 6.91 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.




தமிழக அரசு போக்குவரத்துத் துறை சார்பில் வார இறுதி நாட்கள் மற்றும் ஆயுத பூஜையை (தொடர் விடுமுறையை) முன்னிட்டு சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன. சென்னையிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன், 26.09.2025 அன்று 450 சிறப்புப் பேருந்துகளும், 27.09.2025 அன்று 696 சிறப்பு பேருந்துகளும், 29.09.2025 அன்று 194 சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்பட்டது. இதன் மூலமாக 7,616 பேருந்துகளில் 3,80,800 பயணிகள் தங்கள் சொந்த ஊர்களுக்கு பணம் செய்துள்ளனர்.

மேலும் 30.09.2025, தினசரி இயக்கக்கூடிய 2,092 பேருந்துகளுடன், 1,310 சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆயுதபூஜை தொடர் விடுமுறையினை முன்னிட்டு, சென்னை மற்றும் பிற இடங்களிலிருந்து அரசு பேருந்துகளில் பயணம் செய்ய ஒட்டுமொத்தமாக 50,913 பயணிகள் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். சென்னையிலிருந்து முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ள 26,013 பயணிகள் முன்பதிவு செய்துள்ளனர்.

அரசு விரைவுப் போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குநர் ஆர். மோகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

போக்குவரத்துத் துறை சார்பில் வார இறுதி நாட்கள் மற்றும் ஆயுத பூஜையை (தொடர் விடுமுறையை) முன்னிட்டு, ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு பேருந்துகளின் இயக்கம் 30/09/2025 நள்ளிரவு 12 மணி நிலவரப்படி மற்றும் அதிகாலை 2 மணிவரை சென்னையிலிருந்து பல்வேறு ஊர்களுக்கு தினசரி இயக்கக்கூடிய 2,092 பேருந்துகள் உடன் கூடுதலாக 1,100 பேருந்துகளும் ஆக கடந்த 26/09/2025. முதல் 30/09/2025 வரை, தினசரி இயக்கக்கூடிய 2,092 பேருந்துகளுடன் 2,843 சிறப்பு பேருந்துகளும் ஆக மொத்தம் 13,303 பேருந்துகள் இயக்கப்பட்டன. இப்பேருந்துகளில் 6,91,757 பயணிகள் பயணித்துள்ளனர்.

முன்னதாக ஆயுதபூஜை தொடர் விடுமுறையினை முன்னிட்டு, முதலமைச்சர் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறப்புப் பேருந்துகள் இயக்கத்தினை, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், கிளாம்பாக்கத்தில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வின்போது, போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையர் இரா.கஜலட்சுமி, அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் இரா.மோகன், விழுப்புரம் அரசு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் க.குணசேகரன் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# வியாபாரி



திருச்சி பஜாரில் மக்கள் அதிகமாக நடமாடும் இடத்தில் ஒரு பெரிய ஜவுளிக்கடை. டி-ஷர்ட், சுடிதார், புடவை, பேண்ட், சர்ட் என அனைத்து வகை ஆடைகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வெகு பரபரப்பான நேரம். வாடிக்கையாளர்கள் ஒயாது வந்து கொண்டு இருந்தனர்.

தொலைவில் ஒரு பெண் ஒரு அழகான புடவையை பார்த்து, "இது நல்லா இருக்கு... ஆயிரம் ரூபாய் கொடுத்தா தருவீங்களா?" என கேட்டாள். விற்பனையாளர் கொடுக்க மாட்டோம் என திட்டவட்டமாக பேசினார்.

அதே நேரத்தில் இன்னொரு பெண் வந்தாள். அதே புடவையை குறைந்தபட்ச விலை பேரம் பேசாமலேயே வாங்கினாள். விலை — ரூ.1000.தான்

இது அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த கடை முதலாளி, சிறிய சந்தேகத்துடன், ஓய்வுக்குப் பின் விற்பனையாளரை அழைத்தார்.

"திவ்யா, அது ஒரே புடவைதானே? ஒருவரிடம் கொடுக்க முடியாது என்று சொன்ன. ஆனால் மற்றொருவருக்கு கொடுத்துவிட்டாய். ஏன்?" என்றார்


திவ்யா அமைதியுடன் சொன்னாள்: "முதலாளி, அந்த பெண் ஒரே புடவைதான் கேட்டார். நம்முடைய விலை அதிகம் என நினைத்தார். ஆனால் பிறகு வந்த பெண் ஏற்கனவே மூன்று சுடிதார், இரண்டு பேண்ட், ஒரு டி-ஷர்ட் வாங்கினார். எல்லாவற்றிலும் நியாய விலையே சொல்லினேன். அதிலேயே நமக்கு தேவையான லாபம் கிடைத்துவிட்டது. அதனால், அந்த புடவையைச் சற்று குறைத்துவிட்டேன். மொத்தமாக எடுத்தால் வாடிக்கையாளருக்கும் நமக்கும் நன்மை. அதுதான் ."

திவ்யாவின் நிதானமும், நுட்பமான வியாபார அறிவும் முதலாளியை வியக்க வைத்தது.

"உன்னால் தான் இந்த கடைக்கு இப்படி ஒரு வியாபாரம் வருகிறது!" என மனதார பாராட்டினார் அவர்.

**ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி

# "உழைப்பிற்கு என்றும் பலனுண்டு"



தாமு லாரியை வழக்கமாய் உணவருந்தும் அந்தச் சிறிய ஹோட்டல் கடை முன் நிறுத்த, எங்கிருந்த ஓடி வந்தான் பதினான்கு... பதினைந்து வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன்.

வந்ததும் தாமுவிடம் கூட எதுவும் கேட்காமல் தன் கையில் இருந்த பக்கெட் நீரினால் லாரியின் முகப்புக் கண்ணாடிகளையும், மற்ற பகுதிகளையும் சுத்தமாய்த் துடைத்து "பள.. பள"வென்று ஆக்கி விட்டு நேரே தாமுவிடம் சென்று கை நீட்டினான்.

"டேய்... நானாடா உன்னைய லாரியைத் துடைக்கச் சொன்னேன்?... நீயா தொடைச்சிட்டு வந்து கேட்டா... நான் குடுத்திடுவேனா?... உதை வாங்கறதுக்கு முன்னாடி ஓடிப் போயிடு"

அதைக் கேட்ட சிறுவன் புன்னகையோடு "தேங்க்யூ" என்று சொல்லி விட்டு அடுத்து வந்து நின்ற லாரியை நோக்கி ஓடினான்.

அவன் சென்றதும் கிளீனர் கேட்டான். "அண்ணே... ஒரு அஞ்சு ரூபா அவனுக்கு கொடுத்திருக்கலாமல்ல?!"

அவனை முறைத்து விட்டு, "டேய்... இதுவரைக்கும் இந்த ரூட்டில் சுமார் 50 தடவைக்கு மேலே வந்திருக்கேன்... இதே மாதிரிதான் இந்த பயல் அவனா வந்து லாரியை துடைப்பான்... காசு கேட்பான்... "இல்லை போடா"ன்னு விரட்டியடிச்சா இதே மாதிரி "தேங்க்யூ" சொல்லிட்டு ஓடிடுவான்".

மெலிதாய்ச் சிரித்த கிளீனர், "நீங்க காசு கொடுக்கலேன்னாலும்... தவறாம வந்து துடைப்பானா?" கேட்க.

"அட ஆமாம்பா... நானும் கூட ரெண்டு மூணு தடவை துடைப்பான்.... அதுக்கப்புறம் நான் காசு கொடுக்க மாட்டேன் உறுதியா தெரிஞ்சதும்.. நிறுத்திடுவான்னு.... நினைச்சேன் பயல் நிறுத்தவே இல்லை!... இதுவரைக்கும் ஐம்பது தடவைக்கும் மேலே வந்திருப்பேன்... எல்லாத் தடவையும் வந்து துடைச்சுட்டேதான் இருக்கான்!" அந்தக் கிளீனருக்கு மனசு வலித்தது.

"இந்த டிரைவரண்ணன்... இவ்வளவு கறாரான ஆளா இருக்கக் கூடாதுப்பா!... பாவம் அந்த ஏழைச் சிறுவன்... உழைச்சுச் சம்பாதிக்கணும்னு... நினைச்சு இந்த வேலை செஞ்சிட்டிருக்கான்... அவனை ஊக்குவிக்கும் விதமாகவாச்சும் ஏதாவது கொடுத்திருக்கலாம்!" உள்ளுக்குள்ள நினைத்துக் கொண்டான்.

இரண்டு மாதங்களுக்கு பிறகு, அந்த லாரி அதே ஹோட்டல் முன் வந்து நிற்க, அதே சிறுவன் ஓடி வந்தான். துடைத்தான். துடைத்து விட்டு, லாரியை ஓட்டி வந்த கிளீனரிடம், "என்ன கிளீனரண்ணே.... நீங்க ஓட்டிட்டு வந்திருக்கீங்க?... பெரிய டிரைவரண்ணன் வரலையா?" கேட்டான்.

"அவர் பக்கவாதத்தில் பாதிக்கப்பட்டு.... கையும் காலும் செயலிழந்து போய்ப் படுக்கையில் கிடக்கிறார் தம்பி!... அதனால்தான் நான் லாரியை ஓட்டிக்கிட்டு இருக்கேன்!"

"த்சொ... த்சொ..." நிஜமாகவே வருத்தப்பட்ட சிறுவனிடம் அந்தப் பணக்கட்டை கிளீனர் எடுத்து நீட்ட,

"அய்ய.... இது எதுக்கு?"

"50 தடவை நீ துடைச்சதுக்கு ஒரு தடவை கூட காசு தரவில்லை... அதான் மொத்தமா இப்ப கொடுத்தனுப்பி இருக்கார் எங்க டிரைவர் அண்ணன் என்றான் கிளீனர்.

நீண்ட நேரமாக வாங்க மறுத்து விவாதம் செய்த அந்தச் சிறுவன் கையில் பலவந்தமாய் அதைத் திணித்து விட்டு, கிளீனர் புறப்பட, "தங்க மனசுக்காரரண்ணே... பெரிய டிரைவர்"என்றான் சிறுவன் உரத்த குரலில்.

பாவம் அவனுக்கெப்படித் தெரியும் கிளீனர் தன் சொந்த பணத்தைத்தான் கொடுத்துச் சென்றிருக்கிறான் என்பது.



**-முகில் தினகரன்,**
கோயமுத்தூர்

# ஆன்மிக களஞ்சியம்

# மூர்க்கர் நாயனார் வரலாறு

தொடர்-31



**-சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி

“மூர்க்கற்கும் அடியேன்” திருத்தொண்டத் தொகை.

மூர்க்க நாயனார் என்பவர் சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் ஆவார். தொண்டைவள நாட்டின் பாலியாற்றின் வடக்கில் உள்ளது திருவேற்காடு என்னும் திருத்தலம். அதிற் சிவனடிமைத் திறத்தில் சிறந்து வழிவழி வந்த வேளாண் மரபில் அவதரித்த ஒரு பெரியவர் இருந்தார். அவர் திருநீற்றின் அடைவே பொருள் என்று அறிந்து அடியார்க்கு அமுது முன் ஊட்டி மகிழ்ந்து, பின் தாம் அமுது செய்யும் நியதியில் இடைவிடாமற் கடைப்பிடித்து வந்தார்.

இவ்வாறு ஒழுகும் நாளில் அடியவர்கள் நாளும் நாளும் மிகவும் பெருகி வந்தமையாலே தமது உடமை முழுவதும் மாள விற்றும் அப்பணி செய்தனர். மேலும் செய்து வருவதற்கு அவ்வூரில் ஒருவழியும் இல்லாமையால் தாம் முன்பு கற்ற நற்சூதினால் பொருளாக்க முயன்றனர். தம்மூரில் தம்முடன் சூது பொருவார் இல்லாமையால் அங்கு நின்று வேற்றூர்க்குப் போவாராயினர்.

பல பதிகளிலும் சென்று சிவனை உள்ளுருகிப் பணிந்து அங்கங்கும் சூதாடுதலினால் வந்த பொருளைக் கொண்டு தமது நியமமாகிய அடியார் பணியினைச் செய்து வந்தார். கும்பகோணத்தைச் சேர்ந்து அங்கு தாம்வல்ல சூதினால் வந்த பொருளைத் தாம் தீண்டாது. நாடோறும் அடியார்க்கு அமுதூட்டி இருந்தனர். சூதினில் வல்ல இவர், முதற்சூது தாம் தோற்றுப் பிற்சூது பலமுறையும் தாம் வென்று பெரும்பொருள் ஆக்கினார்.

சூதினால் மறுத்தாரைச் சுரிகை உருவிக் குத்துதலினால் இவர் நற்சூதர் மூர்க்கர் என்னும் பெயர்களைப் பெற்று உலகில் விளங்கினார்.

இவ்வாறு பணி செய்து அருளாலே குற்றங்கள் போய் அகல இவ்வுலகை விட்டதற்பின், இறைவரது சிவபுரம் அடைந்தார்.






## சோமாசிமாற நாயனார் வரலாறு

“அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்” திருத்தொண்டத் தொகை.

சோமாசிமாற நாயனார் சோழநாட்டில் திருவம்பர் என்னும் ஊரிலே அந்தணர் குலத்திலே தோன்றினார். சிவபக்தி உடையவராய்ச் சிவனடியார்களுக்குத் திருவமுதளிக்கும் இயல்புடையவராயிருந்தார். உமையொரு பாகனாகிய சிவபெருமானையே முதல்வன் எனக்கொண்டு போற்றும் வேள்விகள் பலவற்றையும் உலகங்கள் ஏழும் உவப்ப விதிப்படி செய்தார்.

ஈசனுக்கு அன்பர் என்போர் எக்குலத்தவராயினும் அவர்கள் தன்னை ஆளாகவுடையார்கள் என்று உறுதியாகத் தெளிந்திருந்தார்கள்.

சிவன் அஞ்செழுத்தும் சித்தந் தெளிய ஓதும் நித்த நியமம் உடைய இந்நாயனார் சீரும், திருவும் பொலியும் திருவாரூரினை அடைந்து தம்பிரான் தோழராகிய வன்றொண்டர்க்கு அன்பினால் நெருங்கிய நண்பரானார்; திருவாரூரில் ஐம்புலச் சேட்டைகளையும், காமம் முதலிய அறுவகைக் குற்றங்களையும் நீக்கிய இவர் அத்திருவாரூரில் தங்கி ஆரூரர் தம் திருவடிகளைப் பணிந்து போற்றிய சிறப்பினால் என்றும் நின்று நிலவும் சிவலோகத்தில் இன்பம் உற்றார்.

- தொடரும்

# சபரிமலை 18 படிகள் கூறும் ரகசியம்

சபரிமலை யாத்திரையில் மிக முக்கியமானது பதினெட்டு படிகள். பொன்னம்பல வாசனான ஐயப்பனை காண, விரதமிருந்து இருமுடி சுமந்து இந்த பதினெட்டு படிகளையும் சுவாமியே சரணம் ஐயப்பா என்ற சரண கோஷ முழக்கத்துடன் கடந்து செல்வது, நினைக்கும் போதே பரவசத்தை தரும் பேரானந்த அனுபவம்.

நமக்கு பக்தி தரும், ஞானம் தரும், முக்தி தரும் இது அத்தனையும் நிச்சயம் தரும் பதினெட்டு படிகளின் தரிசனம் வாழ்வின் அதிமுக்கியமான தருணம். இப்படி அற்புத அனுபவம் தரும் அய்யனின் 18 படிகள் குறித்து தெரிந்துகொள்வோம்...

வில், வாள், வேல், கதை, அங்குசம், பரசு, பிந்தி, பாவம், பரிசை, குந்தம், ஈட்டி, கை வாள், முன்தடி, பாசம், சக்கரம், ஹலம், மழு, முஸலம் இப்படி ஐயப்பன் தனது 18 போர்கருவிகளை கொண்டே 18 படிகளை உருவாக்கியதாக கூறப்படுகிறது
வாழ்வின் பல கூறுகளை குறிப்பிடும் பதினெட்டுப் படியின் முக்கிய தத்துவம் இதோ.
ஐந்து இந்திரியங்கள் கண், காது, மூக்கு, நாக்கு, கை கால்கள்
ஐந்து புலன்கள் பார்த்தல், கேட்டல், சுவாசித்தல், ருசித்தல், தொடுதல்.

ஐந்து கோசங்கள் அன்னமய கோசம், ஆனந்தமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், ஞானமய கோசம்
மூன்று குணங்கள் ஸத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம்
இப்படி பதினெட்டு



அம்சங்களை கட்டுப்படுத்தி வெற்றி பெற 18 படிகள் நமக்கு வழிகாட்டுகின்றன.

18 படிகளில் உள்ள தேவர்கள்
ஒன்றாம் திருப்படி: சூரிய பகவான்
இரண்டாம் திருப்படி: சிவன்
மூன்றாம் திருப்படி: சந்திர பகவான்
நான்காம் திருப்படி: பராசக்தி
ஐந்தாம் திருப்படி: அங்காரக பகவான்
ஆறாம் திருப்படி: முருகன்
ஏழாம் திருப்படி: புதன் பகவான்
எட்டாம் திருப்படி: விஷ்ணு
ஒன்பதாம் திருப்படி: வியாழன் (குரு) பகவான்
பத்தாம் திருப்படி: பிரம்மா
பதினொன்றாம் திருப்படி: சுக்கிர பகவான்
பன்னிரெண்டாம் திருப்படி: லட்சுமி
பதிமூன்றாம் திருப்படி: சனி பகவான்
பதினான்காம் திருப்படி: எம தர்ம ராஜன்
பதினைந்தாம் திருப்படி: ராகு பகவான்
பதினாறாம் திருப்படி: சரஸ்வதி
பதினேழாம் திருப்படி: கேது பகவான்
பதினெட்டாம் திருப்படி: விநாயகப் பெருமான்

ஒற்றைப்படை வரிசையில் நவகிரக தேவர்களும் இரட்டைப்படை வரிசையில் தெய்வக் குடும்பமும் உள்ளதாக ஐதீகம்.

18 படிகளிலும் ஐயப்பன் 18 வகையான திருநாமங்களுடன் அமர்ந்து அருள்பாலிக்கிறார். அவை:

ஒன்றாம் திருப்படி: குளத்துப்புழை பாலகன்
இரண்டாம் திருப்படி: ஆரியங்காவு ஐயன்
மூன்றாம் திருப்படி: எரிமேலி சாஸ்தா
நான்காம் திருப்படி: அச்சன்கோயில் அரசன்
ஐந்தாம் திருப்படி: புவனேஸ்வரன்
ஆறாம் திருப்படி: வீரமணி கண்டன்
ஏழாம் திருப்படி: பொன்னம்பல வாசன்
எட்டாம் திருப்படி: மோகினி பாலன்
ஒன்பதாம் திருப்படி: சிவ புத்திரன்
பத்தாம் திருப்படி: ஆனந்த சித்தன்
பதினொன்றாம் திருப்படி: இருமுடிப் பிரியன்
பன்னிரெண்டாம் திருப்படி: பந்தள ராஜகுமாரன்
பதிமூன்றாம் திருப்படி: பம்பா வாசன்
பதினான்காம் திருப்படி: வன்புலி வாகனன்
பதினைந்தாம் திருப்படி: ஹரிஹர சுதன்
பதினாறாம் திருப்படி: ஸத்குரு நாதன்
பதினேழாம் திருப்படி : பிரம்மாண்ட நாயகன்
பதினெட்டாம் திருப்படி: சத்ய சொரூரூபன்

18 படிகளும் ஒரே கல்லினால் ஆனது. எல்லாப் படிகளும் 9 அங்குல உயரமும் 5 அடி நீளமும் உடையது. பல காலத்துக்கு முன்பு வரை படிகளில் தேங்காய் உடைக்கும் வாடிக்கை இருந்தது. பதினெட்டு படிகள் இதனால் தேய்மானம் அடைவதால் 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் திருவாங்கூர் தேவஸ்தானம் பஞ்ச லோகத்தினால் தங்கம், வெள்ளி, பித்தளை, செம்பு, ஈயம் ஆகியவற்றை கொண்டு தகடுகள் செய்து படிகளின் மேல் அமைத்தனர்.
இருந்தாலும் பல லட்சக்கணக்கான பக்தர்களின் பாதங்கள் பட்டு பட்டு படிகளின் மேல் தகடுகள் தேய்மானம் கண்டதால் 2015 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மீண்டும் பஞ்சலோக தகடுகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது. பந்தள ராஜ குடும்பத்தினர், தந்திரிகள், மகர சங்கராந்தியன்று திருவாபரணப் பெட்டியை சுமந்து வரும் ராஜ பிரதிநிதி, திருவாபரணப் பெட்டியையும் தங்க அங்கியையும் வரவேற்கும் தேவஸ்தான உறுப்பினர்கள்
வரவேற்கும் சமயத்தில் இவர்கள் ஐயப்பன் அனுமதி பெற்று மாலையணிந்திருக்க வேண்டும். படிபூஜையின் போது மேல்சாந்தி, தந்திரி, கீழ்சாந்தி மற்றும் கட்டளைதாரர் 3பேர், பலிகளை அர்ப்பணிக்கும் குருக்கள் ஆகியோருக்கு மட்டும்,
பதினெட்டு படிகளில் இருமுடிக் கட்டு இல்லாமல் படியேறி வர உரிமையுண்டு.



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

தினம் ஒரு தலைவர்கள்

# அன்னி வூட் பெசண்ட் வரலாறு

அன்னி வூட் பெசண்ட் அக்டோபர் 1, 1847 செப்டம்பர் 20, 1933) என்பவர் பெண் விடுதலைக்காகப் போராடியவர், எழுத்தாளர் மற்றும் பேச்சாளர் ஆவார்.

வாழ்க்கைக் குறிப்பு
ஒரு சாதாரண ஐரியக் குடும்பத்தில் லண்டனில் 1847 ஆம் ஆண்டில் பிறந்தவர் அன்னி வூட். தந்தை வில்லியம் பைஜ்வூட் அயர்லாந்தில் பிறந்து லண்டனில் குடியேறியவர். அன்னி ஐந்து வயதாக இருக்கும் போது தந்தையை இழந்தார். அன்னை ஹரோ நகரில் ஆண்கள் பாடசாலை ஒன்றை நடத்தி வந்தார். அன்னி தனது 19வது வயதில் 1867 ஆம் ஆண்டில் பிராங்க் பெசண்ட் என்ற 26 வயது மத குருவை மணந்தார். டிக்பி, மேபேல் என்ற இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார். கணவருடன் இணைந்து வாழ்வது அன்னிக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. பெண்ணுக்கு ஏற்பட்ட நோயினால் மனமுடைந்து போன அன்னி நாத்திகரானார். கணவர் பெசண்ட், மனைவியை கோயிலுக்குச் செல்லும் படியும், கிறிஸ்தவ மதக் கொள்கைக்கு ஏற்ப நடக்கும் படியும் வற்புறுத்தினார். சுதந்திர மனப்போக்குக் கொண்ட அன்னி கணவரிடம் இருந்து 1873 இல் பிரிந்து வாழ முடிவெடுத்தார்.

1880களில் அன்னி பெசண்ட் கணவரிடம் இருந்து பிரிந்த பின்னர் நிறைய கட்டுரைகள் எழுதத் தொடங்கினார் அன்னி. சிறுவர்களுக்கான கதைகள், கட்டுரைகள் எழுதினார். அன்னியின் அரசியல் போக்குகணவரிடம் இருந்து அவரை மேலும் பிரித்தது. பண்ணை விவசாயிகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார். இறுதியாக கணவன், குழந்தைகளை விட்டுப் பிரிந்து லண்டனுக்குத் திரும்பினார். அதிகாரபூர்வமாகப் பிரிவினை கிடைக்கவில்லை. இரண்டு குழந்தைகளும் பிராங்கின் பொறுப்பிலேயே இருந்தனர்.

லண்டன் பல்கலைக்கழகத்தில் பகுதிநேரப் படிப்பைத் தொடர்ந்தார். மூடப் பழக்கவழக்கங்களுக்கெதிராகப் பரப்புரையை ஆரம்பித்தார். இதனால் மத சமூகத்தினரின் எதிர்ப்புக்கு ஆளானார்.

சீர்திருத்தவாதி
"நியூமால் தூசியன் அமைப்பு" என்ற சீர்திருத்தச் சங்கத்துக்குத் தலைவியானார் அன்னி பெசண்ட். நாடாளுமன்ற அங்கத்தினர்கள் கடவுளின் பெயரால் சத்தியம் செய்யத் தேவையில்லை என்று வற்புறுத்தி கூட்டங்களில் பேசினார். "லிங்க்" என்ற பெயரில் பத்திரிகையைத் தொடங்கி, இந்தியாவிலும் அயர்லாந்திலும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாக எழுதினார். பெண்கள் விடுதலை, தொழிலாளர் உரிமைகள், குடும்பக் கட்டுப்பாடு போன்ற பலவற்றிலும் தனது கருத்துகளை வெளிப்படையாகத் தெரிவித்தார்.

பிரம்மஞான சங்கம்
THE SECRET DOCTRINE என்ற நூலை எழுதிய பிளேவட்ஸ்கி அம்மையாரை பாரிசில் 1889 ஆம் ஆண்டில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. இது அன்னி பெசண்டின் வாழ்க்கையில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. தன்னுடைய நாத்திக வாதத்தைக் கைவிட்டு ஆத்திகரானார். பிளேவட்ஸ்கியின் பிரும்மஞான சங்கத்தில் உறுப்பினரானார். இதனை அடுத்து மார்க்சியவாதிகளுடன் தனக்கிருந்த உறவுகளைத் துண்டித்துக் கொண்டார். 1891 இல் பிளேவட்ஸ்கி இறந்ததை அடுத்து பிரும்மஞானத்தில் ஒரு முக்கிய புள்ளியானார். அன்னி பெசண்ட். அச்சபையின் சார்பில் 1893 ஆம் ஆண்டில் சிகாகோவில் இடம்பெற்ற உலக கொலம்பிய கண்காட்சியில் கலந்து கொண்டார்.

1893 ஆம் ஆண்டில் பிரும்மஞான சபையின் உறுப்பினராக முதற் தடவையாக இந்தியா வந்தார். சபையின் அமெரிக்கக் கிளையின் தலைவரான வில்லியம் ஜட்ஜ் என்பவருடன் ஏற்பட்ட கருத்து மோதல்களைத் தொடர்ந்து அமெரிக்கக் கிளை தனியாகப் பிரிந்தது. மீதமிருந்த சபை ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் என்பவராலும் அன்னி பெசண்டினாலும் தலைமை வகிக்கப்பட்டது.

இந்தியாவில் அன்னி பெசண்ட்
இந்தியா வந்த அன்னி பெசண்ட், சென்னையில் அடையாறில் பிரும்மஞான சங்கத்தின் தலைமை நிலையத்தை நிறுவினார். இந்து சாத்திரங்களை ஆழ்ந்து படித்துபல நூல்களை எழுதினார். பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். காசியில் சில காலம் வசித்த அன்னி பெசண்ட் அங்கு இந்து சமய








விளக்கங்களை முறைப்படி பெற்றார். இந்திய உடை தரித்து இந்துவாகவே வாழலானார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் இணைவு
அன்னி இயற்கையிலேயே புரட்சி மனப்பான்மை கொண்டவராதலால், ஆங்கிலேய அரசின் அடக்குமுறைகள் அவரை வெகுவாகப் பாதித்தன. விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக காமன் வீல்' என்ற வாரப் பத்திரிகையை 1914 ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். 1915 சூன் 14 இல் சென்னையில் இருந்து நியூ இந்தியா என்ற பெயரில் நாளேடு ஒன்றை ஆரம்பித்து நடத்தினார். இதன் மூலம் அவர் அரசியலில் இழுக்கப்பட்டார்.

காங்கிரஸ் தலைமைப் பதவி
1907-ஆம் ஆண்டில் சூரத் நகரில் இடம்பெற்ற இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். இம்மாநாட்டில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் ஏற்படவிருந்த பெரும் பிளவைத் தவிர்த்து, லக்னோவில் இடம்பெற்ற மாநாட்டில் இரு பிரிவினரையும் இணைத்து வெற்றி கண்டார். ஹோம் ரூல் (சுயாட்சி) இயக்கத்தை தொடங்கினார். நாடு முழுவதிலும் அதன் கிளைகள் உருவாயின. அன்னி பெசண்ட் தனது தலைமைப் பதவிக் காலத்தில் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, விடுதலை இயக்கத்தை வலுப்பெறச் செய்தார்.

அன்னி பெசண்டின் சுற்றுப் பயணங்களுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் ஆங்கிலேய அரசு தடை செய்தது. 1917, ஜூன் 15 ஆம் நாள் ஏனைய காங்கிரஸ் தலைவர்களுடன் அன்னி பெசண்டையும் கைது செய்தது. இவர்களின் கைதைக் கண்டித்து காங்கிரஸ் இயக்கம், மற்றும் முஸ்லிம் லீக் ஆகியன சத்தியாக்கிரகம் செய்யப்போவதாக அறிவித்தது. இதனால் நிலை குலைந்த ஆங்கில அரசு செப்டம்பரில் இவர்களை விடுதலை செய்தது.

டிசம்பர் 1917 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த மாநாட்டில் இந்திய காங்கிரசின் தலைவராக ஓராண்டிற்குத் தெரிவானார். லாகூரில் ஜவகர்லால் நேருவின் தலைமையில் 1929 இல் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழுமையான சுயாட்சி கோரி அறிக்கை வெளியானது. காங்கிரஸ் சோசலிச சார்பாக கருத்துக்களை வெளியிட்டமை அன்னி பெசண்டின் கொள்கைகளுக்கு உரியதாக இருக்க வில்லை. இதனால் அவர் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக்கங்களில் சேரவில்லை. காங்கிரசில் இருந்து விலகி இருந்தார். ஆனாலும் இந்திய விடுதலையில் முன்போலவே ஈடுபாடு காட்டி வந்தார். இந்தியாவில் மட்டுமல்லாமல் பிரித்தானியாவுக்கு பயணம் மேற்கொண்ட போது அங்கும் இந்திய விடுதலைக்கு ஆதரவாக பொது மேடைகளில் உரையாற்றினார். 1929 இல் "பொதுநலவாய இந்தியா" என்ற பெயரில் ஒரு அறிக்கையை எழுதி பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்.

இறுதிக் காலம்
தனது எண்பத்தியோராவது அகவையில் தீவிர அரசியலில் இருந்து விலகிய அன்னி பெசண்ட் இறுதிக் காலங்களில் இந்திய மெய்யியலாளரான தனது வளர்ப்பு மகன் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியுடன் நெருங்கிய தொடர்பைப் பேணினார். பிரும்மஞான சபையின் முன்னேற்றத்தில் முனைப்பாக ஈடுபட்டார். எண்பத்தேழாம் அகவையில் 1933 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 இல் சென்னையில் உள்ள அடையாறில் அன்னி பெசண்ட் காலமானார். அவரது மறைவிற்குப் பின்னர், ஜே. கிருஷ்ணமூர்த்தி, ஆல்டஸ் ஹக்ஸ்லி, ரோசலின் ராஜகோபால் ஆகியோர் இணைந்து கலிபோர்னியாவில் "ஹப்பி வலி பாடசாலை"யை அமைத்தார்கள்.இப்பாடசாலை தற்போது அன்னி பெசண்டின் நினைவாக "பெசண்ட் ஹில் பாடசாலை" எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. அன்னி பெசண்ட் அமைத்த சென்னை அடையாறில் உள்ள பிரும்மஞான சபை இன்றும் அவர் புகழ் பரப்பிக் கொண்டிருக்கிறது.

அன்னி பெசண்ட் அம்மையாரை கௌரவிக்கும் விதமாக சென்னையின் அம்பத்தூர், தண்டையார் பேட்டை பகுதிகளில் உள்ள ஒரு சாலைக்கு அன்னி பெசண்ட் சாலை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் சென்னையில் உள்ள ஒரு பூங்காவுக்கு அன்னி பெசன்ட் பூங்கா என்று பெயரிடப்பட்டுள்ளது.

# மம்மூட்டி, மோகன்லால் இணைந்து நடிக்கும் ‘PATRIOT’ படத்தின் டீசர் வெளியானது



நடிகர் மம்மூட்டி உடல்நிலைக் காரணமாக 7 மாதங்கள் ஓய்வில் இருந்தார். இதனால் படப்பிடிப்புகளில் கலந்து கொள்ளவில்லை. இந்த நிலையில், நடிகர் மம்மூட்டி மீண்டும் படப்பிடிப்பிற்காகத் திரும்பி உள்ளார்.

இந்த நிலையில், மலையாள திரையுலகின் 2 பெரும் சூப்பர்ஸ்டார்களான மம்மூட்டி மற்றும் மோகன்லால் ஆகியோர் ஒன்றாக இணைந்து நடிக்கும் PATRIOT படத்தின் டீசர் தற்போது வெளியாகியுள்ளது.

இப்படத்தில் ஃபகத் ஃபாசில், ரேவதி, நயன்தாரா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். மம்மூட்டியும் மோகன்லாலும் ஒன்றாக இணைந்து நடிப்பதால் இந்த படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.


# தனுஷின் இட்லி கடையை கைப்பற்றிய நெட்பிளிக்ஸ்... OTT ரிலீஸ் அப்டேட்

தனுஷ் இயக்கத்தில் 4-வது படமாக 'இட்லி கடை' உருவாகியுள்ளது. இது தனுஷின் 52-வது திரைப்படமாகும். தனுஷ் இயக்கி நடித்துள்ள இத்திரைப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். இந்த படத்தினை டான் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

இப்படத்தில் நித்யா மேனன், ஷாலினி பாண்டே, அருண் விஜய், சத்யராஜ், ராஜ்கிரண் உள்ளிட்டோர் நடித்து உள்ளனர். 'இட்லி கடை' நேற்று முதல் திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. மேலும் இப்படம் வெளியான முதல் நாளிலே நல்ல வசூல் குவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இனி வரும் நாட்களில் இப்படம் மேலும் வசூல் குவிக்கும் என கூறப்படுகிறது.

இதனிடையே, 'இட்லி கடை' திரைப்படம் எப்போது ஓ.டி.டி.யில் வெளியாகும் என ரசிகர்கள் கேட்கத் தொடங்கி விட்டனர். இந்த நிலையில், இப்படம் ஓ.டி.டி.யில் வெளியாவது குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

அதன்படி, 'இட்லி கடை' படத்தின் ஓ.டி.டி. உரிமத்தை நெட்பிளிக்ஸ் தளம் பெற்றுள்ளதாகவும், நவம்பர் மாதம் இப்படம் ஓ.டி.டி. தளத்தில் வெளியாகும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.





நடிகை கௌரி கிஷன் அழகிய உடையில் நவராத்திரி கொண்டாட்ட நிகழ்ச்சியில் கலந்துகொண்ட புகைப்படங்கள். அழகிய ஸ்டில்களை பாருங்க.

# ‘அகண்டா 2’ ரிலீஸ் தேதியை உறுதி செய்த படக்குழு



தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் பாலையா. இவர் தெலுங்கு திரையுகில் இதுவரை 100-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். சமீபத்தில் சிறந்த தெலுங்கு திரைப்படத்திற்கான தேசிய விருதை இவரது நடிப்பில் வெளிவந்த பகவந்த் கேசரி படத்திற்கு வழங்கினர்.

கடந்த 2021-ம் ஆண்டு போயபதி சீனு இயக்கத்தில் 'அகண்டா' என்ற படத்தில் நடித்திருந்தார். இப்படம் 2021-ம் ஆண்டு வெளியான தெலுங்குப் படங்களில் அதிக வசூல் செய்த ஒன்றாக அமைந்தது. இதில் பிரக்யா ஜெய்ஸ்வால், ஜகபதி பாபு, பூர்ணா, அவினாஷ், விஜி சந்திரசேகர் உள்ளிட்டோர் நடித்திருந்தனர்.

இந்த படத்தின் மாபெரும் வரவேற்பினைத் தொடர்ந்து 2-ம் பாகம் உருவாகி உள்ளது. முதல் பாகத்தில் பணிபுரிந்த தொழில்நுட்பக் குழுவினரே இரண்டாம் பாகத்திலும் பணிபுரிந்துள்ளனர். இந்த படத்திற்கு தமன் இசையமைத்துள்ளார்.

இதனை தொடர்ந்து இப்படம் கடந்த வாரம் வெளியாக இருந்த நிலையில், சில சூழ்நிலைக்காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், பாலையா நடித்துள்ள 'அகண்டா 2' படம் டிசம்பர் மாதம் 5-ந்தேதி வெளியாகும் என படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

ஏற்கனவே டிசம்பர் 5-ந்தேதி பிரபாஸ் நடித்துள்ள 'ராஜா தி சாப்' திரைப்படம் வெளியாக உள்ளது. இதனால் ஒரே நாளில் பான் இந்திய படமாக பிரபாஸ் மற்றும் பாலையாவின் படங்கள் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# நிர்வாண வீடியோ: பணிப்பெண் கொடுத்த பகீர் புகார் – நடிகை டிம்பிள் ஹயாத்தி மீது வழக்குப்பதிவு



டிம்பிள் ஹயாதி மற்றும் அவரது கணவர் மீது வீட்டுப் பணிப்பெண் போலீசில் புகார் அளித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக ஜூப்ளி ஹில்ஸ் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரபல நடிகையான டிம்பிள் ஹயாதி 'தேவி 2', 'வீரமே வாகை சூடும்', அட்ரங்கிரே, கில்லாடி போன்ற பல படங்களில் நடித்துள்ளார். குறிப்பாக பல தெலுங்கு படங்களில் நடித்து அவர் புகழ்பெற்றார்.

இந்நிலையில், டிம்பிள் ஹயாதி மற்றும் அவரது கணவர் மீது அவரது வீட்டுப் பணிப்பெண் போலீசில் புகார் அளித்துள்ளார்.

அந்த புகாரில், ஹயாதி மற்றும் அவரது கணவர் தன்னை துன்புறுத்தியதாகவும், நிர்வாண வீடியோ எடுக்க முயன்றதாகவும், சம்பளம் தராமல் ஏமாற்றியதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக ஜூப்ளி ஹில்ஸ் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நடிகை டிம்பிள் ஹயாதி, 2023-ல் ஐபிஎஸ் அதிகாரியின் கார் மீது செருப்பு வீசிய சர்ச்சையிலும் சிக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# OG படப்பிடிப்பு நினைவுகளை பகிர்ந்த நடிகை பிரியங்கா மோகன்



வளர்ந்து வரும் நடிகைகளில் ஒருவரான பிரியங்கா மோகன் நடிப்பில் அண்மையில் வெளிவந்த திரைப்படம் OG. பவன் கல்யாண் நடிப்பில் உருவாகி வெளிவந்த இப்படத்தை சுஜித் இயக்கியிருந்தார். இப்படத்தில் இம்ரான் ஹாஷ்மி, அர்ஜுன் தாஸ் ஆகியோர் நடித்திருந்தனர். கலவையான விமர்சனங்கள் ஒரு பக்கம் இருந்தாலும், ரசிகர்கள் இப்படத்தை கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில், OG திரைப்படத்தின் மாபெரும் வெற்றிக்கு நன்றி தெரிவித்து படத்தின் கதாநாயகி பிரியங்கா மோகன் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த பதிவில் படப்பிடிப்பு தளத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை தன்னுடைய நினைவுகள் என குறிப்பிட்டு, இதனை இன்ஸ்டாவில் பதிவிட்டுள்ளார்.

# ‘மூக்குத்தி அம்மன் 2’ படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியானது

ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் நயன்தாரா நடிப்பில் ‘மூக்குத்தி அம்மன்’ படம் கடந்த 2020-ம் ஆண்டு வெளியானது. இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. ‘மூக்குத்தி அம்மன்’ முதல் பாகத்தில் நடிகை நயன்தாரா அம்மன் வேடத்திலும், ஆர்.ஜே. பாலாஜி முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்திருந்தனர். இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது.

இப்படத்தில் நயன்தாரா மீண்டும் மூக்குத்தி அம்மனாக நடித்து வருகிறார். சுந்தர் சி இயக்கும் இப்பாகத்தை வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல் உடன் ரௌடி பிக்சர்ஸ் இணைந்து தயாரிக்கின்றனர்.



முதல் பாகம் போல் அல்லாமல் இரண்டாம் பாகத்தினை பிரமாண்டமாக தயாரிக்க தயாரிப்பு நிறுவனம் திட்டமிட்டு உள்ளது.

சுந்தர் சி இயக்கத்தில், நயன்தாரா, ரெஜினா கசான்ட்ரா மற்றும் பலர் நடிக்கும் ‘மூக்குத்தி அம்மன் 2’ படத்தின் பூஜை கடந்த மார்ச் மாதம் பிரமாண்டமாக நடைபெற்றது. இதனை தொடர்ந்து படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், ‘மூக்குத்தி அம்மன் 2’ படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. போஸ்டரில் அம்மனாக நடித்து இருக்கும் நயன்தாரா சோகத்தில் அமர்ந்து இருப்பது போன்று உள்ளது. ரசிகர்கள் போஸ்டரை சமூக வலைத்தளத்தில் வைரலாக்கி வருகின்றனர்.



நடிகை க்ரித்தி ஷெட்டி தற்போது இளசுகளை அதிகம் கவர்ந்த நடிகைகளில் ஒருவராக இருக்கிறார். பிரதீப் ரங்கநாதன் உடன் LIK படத்தில் அவர் நடித்திருக்கிறார்.

தற்போது க்ரித்தி ஷெட்டி கிளாமர் உடையில் எடுத்திருக்கும் போட்டோஷூட் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

# உலகின் பணக்கார நடிகராக உயர்ந்த ஷாருக்கான் - சொத்துமதிப்பு எவ்வளவு தெரியுமா?



பல்வேறு தொழில்களில் நடிகர் ஷாருக் கான் தீவிரமாக கவனம் செலுத்தி வருகிறார்.

உலக பணக்கார நடிகர்கள் பட்டியலில் ஷாருக்கானுக்கு அடுத்தபடியாக 'டெய்லர் ஸ்விட்ட் உள்ளார்.

இந்தியப் பணக்கார நடிகர்கள் பட்டியல் முதலிடம் பிடித்து வந்த ஷாருக்கான் முதல்முறையாக உலக பணக்கார நடிகர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.

The Hurun India வெளியிட்டுள்ள பட்டியலில் 1.4 பில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் ரூ.12,490 கோடி) சொத்து மதிப்புடன் ஷாருக்கான் முதலிடம் பிடித்துள்ளார்

திரைத்துறை மட்டுமின்றி பல்வேறு தொழில்களில் நடிகர் ஷாருக் கான் தீவிரமாக கவனம் செலுத்தி வருவதே இதற்கு முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. உலகளவில் பிரபலமான ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மற்றும் சொந்த படத்தயாரிப்பு நிறுவனம் ரெட் சில்லீஸ் என்டர்டெயின்மென்ட் உள்ளிட்டவை ஷாருக் கானுக்கு சொந்தமானவை ஆகும்.

உலக பணக்கார நடிகர்கள் பட்டியலில் ஷாருக்கானுக்கு அடுத்தபடியாக 'டெய்லர் ஸ்விட்ட்' 1.3 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் 2 ஆம் இடம் பிடித்துள்ளார். ஜெர்ரி செய்ன்ஃபெல்ட் 1.2 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் 3 ஆம் இடம் பிடித்துள்ளார்.

பிரபல அமெரிக்க பாடகி செலினா கோமஸ் 720 மில்லியன் டாலர் சொத்துமதிப்புடன் 4 ஆம் இடம் பிடித்துள்ளார்.

டாப் 5 இந்தியப் பணக்காரர்கள் பட்டியல்:

1. ஷாருக் கான் மற்றும் குடும்பத்தார் மொத்த சொத்து மதிப்பு ரூ.12,490 கோடி
2. ஜூஹி சாவ்லா மற்றும் குடும்பத்தார் மொத்த சொத்து மதிப்பு ரூ.7,790 கோடி
3. ஹிருத்திக் ரோஷன் மொத்த சொத்து மதிப்பு ரூ.2,160 கோடி
4. கரண் ஜோஹர் மொத்த சொத்து மதிப்பு ரூ.1,880 கோடி
5. அமிதாப் பச்சன் மற்றும் குடும்பத்தர் மொத்த சொத்து மதிப்பு ரூ.1,630 கோடி

# ஆசிய லீ மான்ஸ் தொடரில் பங்கேற்க உள்ள அஜித்குமாரின் புதிய அணி



அஜித்குமார் ரேஸிங் அணி ஆசிய லீ மான்ஸ் தொடரில் கலந்து கொள்ளவுள்ளது.

இந்த தொடரில் அஜித்குமாருடன் இணைந்து நரேன் கார்த்திகேயன் கலந்துகொள்கிறார்.

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக மட்டுமின்றி, ஒரு தீவிர கார்பந்தய வீரராகவும் திகழ்ந்து வருபவர் நடிகர் அஜித்குமார். இவர் குட் பேட் அக்லி படத்திற்கு பிறகு கார் ரேசில் கவனம் செலுத்தி வருகிறார் .

கடந்த ஆண்டு முதல் கார் ரேஸிங்கில் தீவிரம் காட்டி வரும் அஜித்குமார், 'அஜித்குமார் ரேஸிங்' என்ற தனது சொந்த பந்தய நிறுவனத்தை உருவாக்கியுள்ளார். இந்தக் கார் பந்தய நிறுவனம் துபாய், பெல்ஜியம் போன்ற நாடுகளில் நடைபெற்ற கார் பந்தயங்களில் கலந்து கொண்டு பரிசுகளையும் வென்றுள்ளது.

அஜித்குமார் ரேஸிங் அணி ஆசிய லீ மான்ஸ் தொடரில் கலந்து கொள்ளவுள்ளது. இந்த தொடரில் அஜித்குமாருடன் இணைந்து நரேன் கார்த்திகேயன் கலந்துகொள்கிறார்

இந்நிலையில், இந்த கார் ரேஸ் தொடரில் பங்கேற்க உள்ள அஜித்குமாரின் புதிய அணி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அணியில் நரேன் கார்த்திகேயன், அஜித் குமார் மற்றும் ஆதித்யா படேல் ஆகியோர் உள்ளனர்.

இது தொடர்பான புகைப்படங்களை அஜித்குமார் மேனேஜர் சுரேஷ் சந்திரா தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.



தனுஷ் ஜோடியாக அனேகன் படத்தில் நடித்து தமிழ் சினிமா ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் நடிகை அமைரா தஸ்தூர்.
இந்த படத்தை தொடர்ந்து, தமிழில் பஹீரா என்ற படத்தில் நடித்தார். இந்த படத்திற்கு பின் ஹிந்தியில் கவனம் செலுத்தி வருகிறார்.
தற்போது, அமைரா அழகிய உடையில் இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# காட்சிகளால் சிலிர்க்க வைக்கும் 'காந்தாரா சாப்டர் I' கதையில் ஜெயித்ததா? - திரை விமர்சனம்


காந்தாரா படத்தின் கதை நிகழ்காலத்தில் நடந்த நிலையில், அதற்கு முந்தைய காலகட்டங்களில் நடக்கும் நிகழ்வுகளை கூறும் கதை தான் காந்தாரா சாப்டர் 1.

காந்தாரா படத்தில் ரிஷப் ஷெட்டி மற்றும் அவரது தந்தை ஒரே இடத்திலேயே ஏன் மறைந்து போகிறார்கள் என்கிற கேள்விகளுக்கு ஒரு புராணக் கதை சொல்லப்படுகிறது.

அதில், பாங்ரா என்ற நாட்டை ஒரு ராஜா ஆட்சி செய்து வருகிறார். காந்தாரா மலைப்பகுதிகளில் உள்ள ஈஸ்வர பூந்தோட்டம் என்று அழைக்கப்படும் பகுதியில் பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஈஸ்வர பூந்தோட்டத்தை கைப்பற்ற நினைக்கும் மன்னன் படையுடன் சென்று காந்தார மக்களை அழிக்க பார்க்கிறார். ஆனால் தெய்வத்தின் உதவியுடன் மக்கள் மன்னரின் படைகளை எதிர்த்து சண்டையிட்டு வெற்றி பெறுகிறார்கள்.

இந்த போரில் உயிர்பிழைத்த ராஜாவின் வாரிசுகள் பல ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் காந்தராவை கைப்பற்ற நினைக்கிறார்கள். ராஜா வாரிசுகளின் ஆசை நிறைவேறியதா? இல்லை அதை கதாநாயகன் ரிஷப் செட்டி தடுத்து நிறுத்தினாரா? என்பது தான் படத்தின் மீதிக்கதை.

நடிகர்கள்:படத்தின் நாயகனாக வரும் ரிஷப் ஷெட்டி சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். இயக்குனராக மட்டுமில்லாமல் நல்ல நடிகராகவும் இப்படத்தில் அவர் மிளிர்கிறார். தெய்வ சக்தி வந்தவுடன் ரிஷப் ஷெட்டி ஆடும் ஆட்டம் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.





நாயகியாக நடித்திருக்கும் ருக்மிணி வசந்த், தனது அழகால் மட்டுமில்லாமல் நடிப்பாலும் நம்மை கவர்கிறார். வழக்கமான 'கதாநாயகி' பாத்திரம் போல் அல்லாமல் அழுத்தமான பாத்திரத்தில் சிறப்பாக நடித்துள்ளார்.

மன்னரின் அப்பாவாக வரும் ஜெயராம் உட்பட படத்தில் நடித்துள்ள பிற நடிகர்களும் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

இயக்கம்:காந்தாரா படத்திலேயே தான் ஒரு சிறந்த இயக்குனர் என்பதை நிரூபித்த ரிஷப் ஷெட்டி, வரலாற்று கதை அம்சம் கொண்ட காந்தாரா சாப்டர் 1 படத்தில் மேலும் மெனெக்கெட்டு உழைத்துள்ளது திரையில் தெரிகிறது. குறிப்பாக அருமையான VFX காட்சிகள், சிறப்பான மேக்கிங் படத்திற்கு வலுசேர்க்கின்றன. அதே சமயம் காந்தாரா படத்தில் இருந்த சுவாரசியம் காந்தாரா சாப்டர் 1 படத்தில் இல்லை.


கதை மிகவும் மெதுவாக நகர்வது ரசிகர்களை சோர்வடைய செய்கிறது. மேக்கிங்கில் கவன செலுத்திய ரிஷப் ஷெட்டி திரைக்கதையில் சற்று சறுக்கி விட்டார்.

இசை:அஜனீஷ் லோக்நாத் இசையில் பாடல்கள் அனைத்தும் நன்றாக உள்ளது. அதைவிட அவரின் பின்னணி இசை படத்தின் காட்சிகளுக்கு பக்க பலமாக அமைந்துள்ளது.

ஒளிப்பதிவு: அரவிந்த் கஷ்யப்பின் ஒளிப்பதிவு நம்மை படத்தின் வரலாற்று காலகட்டத்திற்கே கொண்டு செல்கிறது.

தயாரிப்பு: ஹோம்பாலே பிலிம்ஸ்



## என்னோடு உறவாடு...

மூச்சுக் காற்றோடும்
அந்நியமாகிறேன்...

உணவும் இங்கு
சுமையாகிறதே..

நினைவுகள் யாவும்
வதைபடுகிறதே..

சூழல் யாவும்...மெய்
மறக்கிறதே...

தனிமை இங்கே பெரும்
தண்டனையாகிறதே...

நீரின்றி போனால் நிலம்
வாடிப்போகுமே..

நீயின்றி போனால் ... வாழ்க்கை
கசந்து போகுமே...

## பூங்காற்றே...

பேசிய நாட்கள் அதனோடு
முடிந்துபோயின...



பேசாத
நாட்கள் தான்
தொடர்கின்றன...
உன்
நினைவுகளோடு...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## முதியோரைக் காப்போம்!

அறுசீர் மண்டிலம்.

உணவும் உடையும்
இருப்பிடமும் உன்னத மாகக்
கிடைத்திடவே மனதும்
உடலும் மகிழ்வாக
மாண்புடன் என்றும்
இருந்திடவே கனிவும் கனவும்
நனவாக காலமும் மகிழ்வை
அடைந்திடவே மனித நேயம்
முதியோர்க்கு மருத்துவ வசதி
வேண்டுமிங்கே!

உயிரைக் காக்க
வழிவகைகள்
உரியநல் வழியில்
கிடைத்திடவே
நயன்மைச் சொத்தில்
பராமரிப்பு நலமுடன்
என்றும்
அளித்திடவே வயதே ஆன
முதியோர்க்கு வளத்துடன்
கிடைக்க வேண்டுமிங்கே!
இயங்கும் முதியோர்
இல்லத்தில் என்றுமே சேர்க்க
வேண்டாமே!

(வேறு)
நேரிசை வெண்பா!

முதியோரின் இல்லம்
முடக்கிடுவோம்!
நல்ல இதயம் வளர்த்தே
இனிய... உதயமாவோம்!



ஆணிவேரைக்காப்போம்!
அழகாக அன்பாகப்

பேணு முதியோரைப்பீடு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## குறள்வெண் செந்துறை வெண்மை!

அமைதி சாந்தி
அடையாளம் அழகு
ஒளியாய்த்தரும்பாடம்
கமழும் தூய்மை
எனப்படுமாம்
கனிவாய் இளமை
வனப்பாகும்!

எல்லா நிறமும் சேர்ந்தாலே
எழிலாய் வெண்மை
உண்டாகும் ஒல்லும்
வகையில் வெண்மையினை
ஒயிலாய்க் கண்டு
மகிழ்வோமே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

## புதியதோர் உலகம் செய்வோம்!

நேரிசை வெண்பா!
அன்பும் சமத்துவமும்
ஆன்ற வகையிலே

என்றும் இணங்கி
இனிதாக... பொன்றாப்

புகழோடு காண
புதியதோர் பாரைத்

தகவாய்ச்சமைப்போம் தக..!
போரில்லாப்பாரினைப்
பூத்துக்குலுங்கவைப்போம்

சீருடன் பண்பாட்டைச்
சீர்மையாக்கி... ஆருயிர்

காத்திடுவோம் அன்பையே
காண்பமே எந்நாளும்

ஏத்துபுகழ்க்காண்போம்
இனிது!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**



எத்தனை சம்பாதித்தாலும்
நீ சொல்லும்
மூன்று வார்த்தைக்கு
எதுவுமே ஈடாகாது!

ஜல்,ஜல் என ஒலிக்கும்
கொலுசொலிகளின்
இசையில்
இன்னமும் எனக்குள்
நினைவுகளால்
ஒளிந்திருக்கிறாள்
ஜில்,ஜில் ஜானகி!

**லி.நௌஷாத் கான்**

பாவகை > சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.
ஓசை > பிரிந்திசைத் துள்ளல்லோசை.
விகற்பம்:– பலவிகற்பம்

தலைப்பு > **கலைமகள்** (வித்யா தேவி).
ஆசிரியர் > **பாவலர் மா. கணேஷ்,** கொன்னையூர்.

தரவு
சரசுவதி கலைமகளே சகலகலா வல்லியுமே
சுரங்களிலே வாழ்ந்திடுவாய் சுந்தரமாய் பாடிடுவாய்
கரங்களிலே வீணையுமே கலைநயமாய் மீட்டிடவே
தரணியிலே தாயவளாய் தண்மையுடன் இருந்திடுவாய்

தாழிசை – 01
வெண்மையான தாமரையில் வெண்ணிறமாய் வீற்றிடுவாய்
வண்மையான உள்ளமோடு வையகத்தைக் காத்திடுவாய்
தண்மையான குணத்தினிலே தரணியினைப் பேணிடுவாய்

தாழிசை – 02
கலைகளிலே தேவதையாய் கல்வியையும் தந்திடுவாய்
சிலைகளிலே சிறப்பெனவே சிரித்திடவே அமர்ந்திடுவாய்
தலையளியைத் தந்திடவே தலைமுறையைக் கண்டிடுவாய்

தாழிசை – 03
அறிவுடனே இருந்திடவே அவனியிலே நின்றிடுவாய்
அறிவொளியாய் மனதினிலே அங்கிடமே கொண்டிடுவாய்
செறிவுடனே பாக்களுமே செந்தமிழால் தந்திடுவாய்
தனிச்சொல் எனவாங்கு சுரிதம்
வித்யா தேவி வீணை வாணி அத்து மீட்டும் அன்னை
சித்தாய் நின்ற சித்தம் நீயே.....

## விடுமுறை

இயந்திர வாழ்வின்
சலிப்பினைத்தவிர்த்து
இயற்கையை நேசித்து
ஆறுதல் அடைய
அளிக்கப்படும் அவகாசங்கள்!

ஆற்றும் வினைகள்
சரியா தவறா எனச்
சுயதணிக்கை செய்யும்
இனிய தருணங்கள்!

கடிவாளமின்றி
விரைந்தோடும்
காலக்குதிரையினை
கட்டிப்போட்டு
எதிர்காலச்சவாரிகளைச்
சரித்திரமாக்கிட
வழங்கப்படும்
காலக்கொடைகள்!
கொண்டாட்டங்களில்
திளைப்பதற்கல்ல
சோர்வுக்கு விடைகொடுத்து
புத்துணர்ச்சியோடு
புதுமைகள்
படைத்திட தரப்படும்
பொன்னானப்பொழுதுகள்!

வேகத்தடையில்லா
சாலைகள் விபத்துக்கு
வழிவகுக்கும்
விடுமுறையில்லாத



தொடரோட்டம்
மன உளைச்சலின்
விளைச்சலால்
பண்படாத தரிசாகும்!

**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்

## பெண் மகவு

அத்தனையும் இயலும்
அவளால்!

அட்சரங்களின் அரசி!
அம்மை!
வெண்டாமரையாள்!

அருளிருக்க; ஏது குறை
அவளுக்கு?

அவள் குலம் செய்
பூனைகள் அனைத்தும்;

தண் புலனன்ன கவிதையாய்
பீறிட்டு எழும்பட்டும்!

தேனருவி திரை அன்ன
வான் வரை புகழ் பாயட்டும்!

வெண்பங்கயத்தாள்
தாளே துணை என
பணிந்துவிட;



பெண் மகவு
சிறந்து
நிற்பாள்

**சசிகலா**
**விஸ்வநாதன்**

உன்னை தொட நான்
தயங்கிய நாட்களில் என்னை
மட்டுமே தான் நீ தொட்டுக்
கொண்டிருந்தாய்! நீ மட்டும்
தான் என்னை வெட்கப்பட
வைக்க முடியுமா என்ன?



மவனே!!!!
தொடாமல்
நீ விலகிஊப்
போனாலும்
விடாது
ஒட்டிக்
கொள்கிறது
மனது.

**எஸ். சந்திரசேகர் அமுதா**
செஞ்சி



## ஹைக்கூ ! (சென்றியு )

**கவிஞர் இரா .இரவி !**

பகலிலும் ஒளிரும்
ஒளி விளக்கு புத்தகம் !

உற்ற துணை இணையில்லா
இணை புத்தகம் !

தனிமை நீக்கும்
தன்னலம் போக்கும் புத்தகம்!

அறிவுப் புகட்டும்
அறியாமை அகற்றும்
புத்தகம் !

நம்மோடு பேசும்
உயர்திணை புத்தகம் !

மறைந்தவர்களை
உயிர்ப்பிக்கும் புத்தகம் !

திருப்புவதால்
திருப்புமுனை புத்தகம் !

கேள்வி இல்லை
தினமும் ஏற்றினாலும்
பெட்ரோல் !

வீழ்ந்தது ரூபாயின் மதிப்பும்
இந்தியனின் மதிப்பும் !

விழுந்தபோதும்
விழாமல் பறந்தது புறா !

ஆசிரியர் யாவரும்
நல்லாசிரியரே !

நாமக்கல்லில் பிறந்த
கவிதைக்கல் மலை
இராமலிங்கம் !

## காதல் உண்டு பாரீர்

" மூங்கில் மரத்திற்கும்
இசைக்கும் காதல்
கடலலைக்கும்
மணலுக்கும் காதல் .... "

மலைக்கும் பசுமைக்கும்
காதல் அருவி பாறைக்கும்
நீருக்கும் காதல்....."

காற்றுக்கும் பூவுக்கும்
காதல் இசைக் கருவிக்கும்
இசைப்பவனுக்கும் காதல்...."

இமைக்கும் விழிக்கும்
காதல் மழைக்கும்
மண்வாசத்திற்கும் காதல் ..."

அசைந்தாடும் பரிசலுக்கும்
ஆற்று நீருக்கும் காதல் ..."

ஏற்றத்திற்கும் சுரக்கும்
கேணி நீருக்கும் காதல் ..."

மனதுக்கும் கனவுக்கும்
காதல் உழைப்பிற்கும்
வியர்வைக்கும் காதல் .... "



ஆண் பெண்
தாண்டி
இயற்கைக்கும்
காதல்
உண்டு
ரசித்துப்
பாரீர் ....."

**ஆர். சீதாராமன்,** சீர்காழி

## விரிந்து படர்ந்து விருட்சமானவர்

விதையொன்று முளைத்து
மரமென வளர்ந்திட
இடையில் எத்தனை
பரிணாமங்கள்
காணவேண்டும்...

சிறு திருட்டையும்
தேவையற்ற பொய்யினையும்
மனம் உறுத்திடவே
விட்டொழித்த சிறுவன்...

பலர் நெருங்கிவர
ஏதுவாக அமைந்தது
அவனது சாந்தகுணம்...

பிறர் துயரமறிந்து
அவர் நலம்பெற
வழிமுறை வகுத்து
செயலாற்றிய தருணம்–அது
காந்தியின் நற்குணம்...

வெள்ளையர் விலகிச்செல்ல
அண்ணல் கண்ட
தூயமார்க்கம்
அகிம்சையாகும்...

அடிமைப்படுத்தியவரை
வெறுக்காது அவரின்
அடிமைப்படுத்தும் குணத்தை
வெறுத்து மாற்றமடைந்திட
அவகாசமீந்து
சத்தியாகிரகம் கண்டவர்...

அதீத நுகர்வை
அடியோடு மறுத்தவர்
தீண்டாமைப் பேயினை
குழிதோண்டிப் புதைத்தவர் ...

நொடிந்த பாரதத்திற்கு
நிர்மாணப் பணிகள்
வளர்ச்சிக்கு சர்வோதயம்
வாழ்க்கைக்கு ஒழுக்கம்
வளமைக்கு கைராட்டையென
பரிமாணங்கள் பலதந்தவர்...

சுதந்திரம் என்பதினிலும்
மக்கள் ஒற்றுமையே
உயிர்மூச்சு என்ற
தாரக மந்திரம் நாளும்
போதித்தவர்...

உலகம் கண்டிராத
சத்தியமென்ற ஆடைபூண்டு
அகிம்சையென்ற கோலூன்றி
அன்பென்னும் மொழிபேசி
கனிவென்னும் பார்வைவீசி
துன்பக்கடல் கடந்தவர்...

மனிதநேயம் போதித்தவர்



ஜீவகாருண்யம்
மதித்தவர்
உலகின்
உத்தமர்
வாழ்க நீவிர்
எம்மான்
காந்தி.

**கா. ஹபீப் முகமது.**

## புதிய ஓட்டம் !

காவிரியில் வரும் தண்ணீர் இன்று புதிய ஓட்டம்
கர்நாடகத்தில் நிரம்பியதால் தமிழகத்தில் பாய்ந்தது !

சீறிப்பாய்ந்து வரும் நதியை ஓட விடுங்கள்
சிறைப்பிடித்து வைக்கும் சின்னப்புத்தியை விடுங்கள் !

இரண்டு நாடுகள் கூட அமைதியாகப் பகிர்கின்றன !
ஒரே நாட்டில் பகிர்வதில் சண்டை வழக்கு ஏனோ ?

இயற்கையைச் சொந்தம் கொண்டாட உரிமையில்லை
இயற்கையைச் சிதைக்காமல் இயல்பாக ஓட விடுங்கள் !

பகிர்ந்து உண்டு வாழ வேண்டுமென்று அன்றே
பகர்ந்தார் உலகப்பொது மறை தந்த திருவள்ளுவர் !

மூன்று போகம் விளைந்திட்ட தஞ்சையில் இன்று
ஒரு போகத்திற்கு தண்ணீர் இன்றித் தவிக்கின்றனர் !

யானைக் கட்டிப் போரடித்த தமிழக மண்ணில்
யாசித்து நிற்கின்றோம் தண்ணீர் வேண்டி !

உச்சநீதி மன்றம் உரைத்தால் வேறு வழி இல்லை
உடனே நீட் தேர்வு அமுல் என்று சொல்வோர் !

உச்சநீதி மன்றம் தீர்ப்பில் காவிரி மேலாண்மை
உடனே அமைக்கச் சொன்னால் கேட்காதது ஏனோ ?


உழவர்களின் துன்பத்தை சற்றே உணர்ந்து பாருங்கள்
உயிரை மாய்த்து வருவது உங்களுக்குத் தெரியவில்லையா ?

தமிழகத்திற்கு நியாயமாகச் சேர வேண்டிய தண்ணீரை
தமிழகத்திற்கு ஓடிவர உடன் அனுமதியுங்கள் !



நடந்தது நடந்ததாக இருக்கட்டும்
இனி நடப்பவை
நல்லதாக இருக்கட்டும் நடக்கட்டும்
புதிய ஓட்டம் !

**கவிஞர் இரா .இரவி !**




## இயற்கை ஹைக்கூ .

நடந்தேன் நடந்தது
நின்றேன் நின்றது நிலவு !

உழைக்காமலே வியர்வை
மலர்களின் மீது
பனித்துளி !

பூமியில் இருந்து வானம்
வானில் இருந்து பூமி
மழையின் சுற்றுலா !

ஓய்வு அறியாதவன்
சோம்பல் முறிக்காதவன்
ஆதவன் !

கண்டதும் மலர்ந்தன
சென்றதும் வாடின
மலர்கள் !

மணக்கும் தொட்ட கை
மதுரை மல்லிகை !

முற்றிலும் உண்மை
மலர்களின் ராஜா ரோஜா !

வெட்ட வெட்ட
பொய்த்து மழை மரம் !

ஒன்று இசைக்கு
மற்றொன்று பாடைக்கு
மூங்கில் !

ஒன்று சிலை மற்றொன்று
படிக்கல் மலைக்கல் !

கழிவு நீர் குடித்து
இளநீர் தந்தது தென்னை !

**கவிஞர் இரா .இரவி !**




## நூல் விமர்சனம்

நூலின் பெயர் : கால் அரை முக்கால் முழுசு
ஆசிரியர்: காலச்சக்கரம் நரசிம்மா
விலை : ₹300
வெளியீடு : புஸ்தகா
தொடர்புக்கு: 7418555884

ஸ்ரீரங்கம் – கார்த்திக் வாசுதேவன்
மதுரை வைகை – தினேஷ்
திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் – ரேயான் தங்க பாண்டியன்
கோவை தொண்டாமுத்தூர் – ஆதர்ஷ் ராமசாமி
மைசூர் குவேம்பு நகர்– கங்கணா

*ஏதோ ஒரு வகையில் பெண்களால் பாதிக்கப்பட்ட தினேஷ், ஆதர்ஷ் , கார்த்திக், ரேயான் நால்வரும் டிரினிட்டி தொலைக்காட்சியில் வேலைக்கு சேர வருகின்றனர்.*

*அலுவலகத்தில் நுழைந்ததுமே DARK Demens கருப்பு அசுரர்கள் என தங்கள் பெயரின் முதல் எழுத்துக்களை கொண்டு அணி சேரும், பெண்களின் வாடையே கூடாது என நினைக்கும் இவர்களுக்கு, தலைமை அதிகாரியாக கங்கணா என்ற பெண் வருகிறாள் என, தொலைக்காட்சியின் முதன்மை அதிகாரி பிரதீப் நஞ்சுண்டன் சொன்னதும், இந்த வேலையே வேண்டாமென ராஜினாமா செய்வதாக நால்வரும் சொல்கின்றனர்.*

*உடனே பிரதீப் ஆதர்ஷிடம் 2 மாதங்கள் பணிபுரிந்து உங்கள் திறமையை நிருபித்தால், உங்களையே கிரியேட்டிவ் ஹெட்டாக நியமிக்கிறேன் என்கிறார்.*

*சவாலை ஏற்றானா ஆதர்ஷ்?*

*பெண்களையே வெறுக்கும் நால்வரில் ஒருவனைக் காதலித்து, மணக்கிறேன் என கங்கணாவும் பதில் சவால் விட யார் வென்றது? என அறியப் படியுங்கள்.*

ஸ்ரீகாந்த் திருச்சி




## ஆய கலைகள்!

அறுசீர் மண்டிலம்.

அனைத்துக் கலைகள்
தருபவளே ஆய கலைகள்
அளிப்பவளே!
இனிக்கும் கல்வி
கொடுப்பவளே
இனிய அறிவைப்
படைப்பவளே!
கனிவாய்த் திறமை
தருபவளே
கருணை தம்மை
அளிப்பவளே!
புனித ஆற்றல்
கொடுப்பவளே
பூக்கும் ஞானம்
படைப்பவளே!
தமிழைத் தகவாய்த்
தருபவளே
தண்மை யோடு
அளிப்பவளே!
கமழும் உணர்வைக்
கொடுப்பவளே
கல்விச் செல்வம்
படைப்பவளே!
இமயப் படைப்பைத்
தருபவளே
இனிய அமுதை
அளிப்பவளே!
எமையும் காத்தே
அருள்புரிவாய்
ஏற்ற கலையின்
அன்னாய்நீ!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

---

பாவகை > குறளடி வஞ்சிப்பா.
தளை > ஒன்றாத
வஞ்சித்தளை.
ஓசை > தூங்கலோசை.
விகற்பம் > ஒரு விகற்பம்.
தலைப்பு > **வன்மை நீக்கு.**
ஆசிரியர் > **பாவலர் மா. கணேஷ்,** கொன்னையூர்.

வையகத்தினில்
வன்மையின்றியே
தீயவற்றையே நீக்கிவிடவே
நேயத்துடன் நின்றிடவுமே
தாயகத்தினைக் காத்திடவுமே
தனிசொல் எனவாங்கு
சுரிதம் நாடு போற்றும் நன்மை
செய்து தேடு நல்ல தேடல்
வீடு பேறு வீறு நன்றே....

---

## மறதி..

மறதி ஒரு வசதியா..
மறதி ஒரு அவதியா..
மனதுக்குள் கேள்வி
எழுந்ததே.. விடை மட்டும்
மறந்து போனதே.

வாக்குறுதி தந்தவனும்
மறக்கிறான்..வாங்கிகிட்டு
போட்டவனும் மறக்குறான்..

படித்தவனும் படிச்சதையே
மறக்குறான்.. குடிச்சவனும்
குடும்பத்தை மறக்குறான்..

கடன் வாங்கி மறுநிமிடம்
மறதி.. கடன் கொடுத்தான்
தலையில் துண்டு உறுதி.

ஏழைப்பாழை இரவுவர
பட்டப்பாடு மறந்தான்..
ஏய்ப்பவனை இரவினிலே
குடித்ததனால் மறந்தான்...

நல்லதெல்லாம் மறந்தான்..
நடந்ததெலாம் மறந்தான்..
உள்ளவனோ தனைமறந்து
இல்லாதவனை மறந்தான்..

மறப்போம் மன்னிப்போம்
அரசியலில் சகஜம்.
மறதி ஒன்று இல்லையெனில்
நாளெல்லாம் கலகம்.

மறதியே வாழ்க.. மறதியே
வருக.. துயரங்களை
மறப்போம் மறதியே வாழ்க..
மறதியே தொடர்க
வாழ்நாளைக் கழிப்போம்

**வே.கல்யாண்குமார்.**

---

## நிலவே...
## களவாடாதே...

தினம் தினம் முகம் கழுவும்
தாமரைக் குளத்தில்..

மீன்களின்
சிறுகடியையும் தாங்கிக்
கொள்கிறது....
வெண்ணிலா...



வேற்றுக் கிரகங்களில்
அடைக்கலம் புகுந்தது...
போன்று அல்லாடிப்
போகிறது...அல்லி மலர்...

சந்திரனைக்
காணாமல்...சந்திர
கிரகணங்களில்....'

**தே.சௌந்தரராஜன்,**
கல்யாணம் பூண்டி

---



## இதயம்

நீ வசிக்கத்தான்
என் இதயத்தை
உனக்குக் கொடுத்தேன்!
ஆனால் நீயோ
அதை வெடிக்க வைத்து
வேடிக்கை பார்க்கிறாய்!

உனக்காகவும்
உன் காதலுக்காகவும்
என்றால் என்
இதயம் எதையும் தாங்கும்!

நமக்கு ஈருடல்
ஓர் இதயம் என்பது எத்தனை
அழகான காதல் என் இனிய
உயிர்க்காதல் அன்பே!

என் இதய சிம்மாசனத்தில்
நீ மட்டுமே என்றும்
என் மகாராணி!
நீ நீரில் மூழ்கி
சிப்பியை எடுத்தால்
அதில் முத்துக்குப் பதிலாக
என் இதயம் தான் இருக்கும்!

நீ உன் கண்களால்
ஒவ்வொரு முறை கவிதை
எழுதி விட்டுப்போகும் போதும்
என் இதயம்
காதலைப் பெறுகிறது!

இப்பிறவியில் நீ
வழங்கிய காதலுக்காக
என் எல்லாப்
பிறவியிலும்
என் இதயம்
உனக்காகக்
காத்திருக்கும்!



**முத்து ஆனந்த்**
வேலூர்

---



## எது ? காதல் !

காதலர் தினம் மட்டும் நினைப்பதல்ல காதல்
காதலர் உயிர் உள்ளவரை நினைப்பதே காதல்

ஒற்றை ரோசாவில் முடிவதல்ல காதல்
பிறவி முழுவதும் தொடர்வதே காதல்

பரிசுப் பொருட்கள் பகிர்ந்து கொள்ளுவதல்ல
காதல்
ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதே காதல்

கடற்கரையில் பேசுவது மட்டுமல்ல காதல்
காலம் முழுவதும் இணைந்து இருப்பதே காதல்

காதலர்கள் கூடிக் களைவது அல்ல காதல்
களையாமல் நிலைத்து இருப்பதுவே காதல்

உடல் தீண்டல் மட்டுமல்ல காதல்
உள்ளத் தீண்டலே உண்மைக் காதல்

புத்தாடை வழங்குவது அல்ல காதல்
புரிந்து புத்துணர்வு வழங்குவதே காதல்

உயிரை விடுவது அல்ல காதல்
உயிர் உள்ளவரை போராடுவதே காதல்

இன்பத்தை மட்டுமே எதிர்பார்ப்பதல்ல காதல்
துன்பத்தையும் ஏற்றுக் கொள்வதே காதல்

லாப நட்டக் கணக்கு பார்ப்பதல்ல காதல்
கஷ்டம் நஷ்டம் பாராததே காதல்



காமத்தால் வருவது அல்ல
காதல்
காலத்தால் என்றும் அழியாததே
காதல்.

**கவிஞர் இரா .இரவி**

---



## காந்தியும் கால மாற்றமும் !!

காந்தி மகானின் சத்தியம் காந்தி மகானின் அகிம்சை
காந்தி மகானுக்கு வெற்றி தந்தது !!

காந்தி மகானின் உப்பு சத்தியகிரகம்
காந்தி மகானின் அந்நியத்துணி பகிஷ்காரம்
காந்தி மகானின் கள்ளுக்கடை மறியல்
காந்தி மகானின் வெள்ளையனே வெளியேறு மந்திரம்
காந்தி மகானுக்கு வெற்றி தந்தது
இந்தியச் சுதந்திரம் பெற்றுத் தந்தது !!



காலங்கள் எதையும் மாற்றிவிடும்
காலமே மறக்க வழியாகும் !!

நாட்டுக்குள் வெளிநாட்டுத் துணி புகுந்தது
நாட்டுக்குள் மதுபானம் ஆட்சிக்கு உதவுகிறது!!

காலமே எந்த மாற்றமும் செய்துவிடும்
காலமே சக்தி வாய்ந்த மருந்தாகும் !!

வெள்ளையனே வெளியேறுப் போராட்டம் – அன்று
வெளிநாட்டவனே வர்த்தகம் செய்ய வா – இன்று !!

காலமே மாற்றம் தந்திடும் காலமே ஏற்றமும் தந்திடும் !!

**சண்முக சுப்பிரமணியன்,** திருநெல்வேலி

---

## இருகோப்பை:

இருகோப் பையில்
இனிய தேநீர் இருவர்
குடிக்க இடத்தே
வைத்திருக்க
இருவரும் வரவில்லை
குறித்த நேரத்தே
அருமையாய் உறவுக்காய்
உரிய நட்புக்காய்
இருக்கும் கோப்பைகள்
இருவரையும் எதிர்பார்த்தே!!

**வைரமணி ,**
சென்னை

---

## பாறை:

விழும்பாறைக் கல்லினை
விரைந்து பிடித்து
விழாமல் தடுக்க
எடுத்திடும் முயற்சி
அழுத்திடும் யாரையும்
அவதிக்குள் ளாக்கும்
முழுக்கவனம்
வேண்டாமோ
மலையினை
உடைக்கை
யில்!!



**வைரமணி**
சென்னை

---

## அப்பாவி நாயகர்கள்

காத்திருப்போம் நீங்கள்வரும் வரை
காத்திருப்போம் நீங்கள் வந்த பிறகும்
பாதுகாப்பாய் செல்லும் வரை
வந்தபின் கைதட்டுவோம் ஆர்ப்பரிப்போம்
விசில் அடிப்போம் சினிமாவாக இருந்தாலும் சரி
அரசியலாக இருந்தாலும் சரி

எங்களுக்கு தெரிந்ததெல்லாம்
உங்கள் முகம் பார்த்ததும் கைதட்டுவதும்
நீங்கள் பேசும் பஞ்ச் டயலாக்குகளை மனதில்
பதித்துக் கொண்டு உற்சாகமாக எங்களுக்குள்
விவாதம் செய்து கொள்வது அதுதான்
எங்களுக்கு அளவற்ற சந்தோசம் தரும்.

ஒவ்வொரு மேடையிலும் எங்களை தான்
நீங்கள் உயர்த்தி பேசி..
எங்களை உங்கள் தலைக்கு மேல் பிடித்துக்
கொள்வீர்கள்
ஆனால் நாங்கள் உங்கள் காலுக்கு கீழ்தான
உட்கார்ந்து இருப்போம் அல்லது நின்று
கொண்டேயிருப்போம்.

எங்களுக்காகவே நீங்கள் வாழ்வதாக
சொல்வீர்கள் எங்களுக்காகவே கடுமையான
பணி நெருக்கடிகளும் வந்திருப்பதாகவும்
சொல்வீர்கள்
உங்கள் தோலை எங்களுக்கு சிறப்பாக தைத்து
வைப்பீர்கள் என வார்த்தைகளால் பேசுவீர்கள்
நாங்கள் வாயை பிளந்து ரசித்து கைதட்டுவோம்

அத்தனை தியாகங்களை செய்து எங்கள் நலம்
ஒன்றே குறிக்கோள் என நினைத்து இங்கு
நிற்பதாக சொல்வீர்கள்.

அத்தனை பாதுகாப்போடு உங்களை அழைத்து
வருவோம் கும்பலோடு கும்பலாக நின்று
ரசிப்போம் உங்கள் மேல் சிறு தூசி பட்டாலும்
நாங்கள் கொதித்துப் போய் விடுவோம்.

எங்களுக்காக உழைக்கும் உங்களை கட்டிக்
காப்பதில் நாங்கள் உற்சாகம் காட்டுவோம்
ஏனென்றால் நீங்கள் உழைப்பது எங்களுக்காக
தானே உங்களை விட்டால் எங்களுக்கு
உழைப்பதற்கு வேறு யார் இருக்கிறார்கள்

கைதட்டி விசில் அடித்து எங்கள் உடம்பும்
மனதும் வாடி இருந்தாலும் மீண்டும் நீங்கள்
வருவதாய் கேள்விப்பட்டால் உற்சாகமாகி
விடுவோம் ஏனென்றால் நீங்கள் வருவது
எங்களுக்காக உழைப்பதும் எங்களுக்காக
நீங்கள் செய்த அத்தனை தியாகமும்
எங்களுக்காக

நாங்கள் என்ன செய்திருக்கிறோம்
உங்களுக்கு.... சொல்லிக் கொள்ளும் வகையில்
பெரிதாக ஏதுமில்லை
காலையிலிருந்து பசியோடும் பட்டினியோடும்
தண்ணீர் இன்றி வெயிலில் இருப்போம்.

கூட்டத்தோடு கூட்டமாக நின்று கொண்டு
உங்கள் முகத்தையும் நீங்கள் காட்டும்
சிரிப்பையும் உயர்த்தி காட்டும் உங்கள்
கைகளையும் பார்ப்பதற்காக உறவு மறந்து
இல்லம் மறந்து தொழில் மறந்து காத்திருப்போம்
அது எத்தனை மணி நேரம் ஆனாலும் சரி
ஏனென்றால் நீங்கள் வருவது எங்களுக்காக
நீங்கள் உழைப்பது எங்களுக்காக உங்கள்
தியாகம் அவ்வளவு உயர்ந்தது.

எங்களுக்காக நீங்கள் அவ்வளவு செய்யும்
போது உங்களுக்காக நாங்கள் இதை கூட
செய்ய கூடாதா

மீண்டும் மீண்டும் எங்கள் நன்மையும் எங்கள்
உழைப்பையும் எங்கள் நலனை மட்டுமே
மனதில் கொண்டிருக்கும் உங்களுக்காக ...

அதிகபட்சம் நாங்கள் செய்வது எங்கள் உயிர்
தியாகம்தான்.
உங்களைப் பார்க்க முண்டியடித்து
எங்களுக்காக இவ்வளவு செய்த உங்களுக்காக
செய்யுங்கள் சிற்றுரை விட்டு சென்றோம்..

இது என்ன பெரிது நீங்கள் இன்னும்
எங்களுக்காக உழைத்துக் கொண்டே
இருங்கள் எங்களைப் போல் நிறைய பேர்
இருக்கிறோம்.

கவலையற்று கண்ணீர் அற்று மகிழ்ச்சியாக
சரியான வேலைக்கு உண்டு சற்று ஓய்வெடுத்து
வாருங்கள்

சக்கர மாய் சூழன்று மீண்டும் மீண்டும்
உங்களுக்காக காத்திருக்கிறோம் உயரத்தில்
நாங்கள் கண்ட கதாநாயகனே..
வரவேற்கிறோம் இப்படிக்கு உங்களது அப்பாவி
நாயகர்கள்.

**கவிஞர் வே.பிலோமின் ஸ்டெல்லா** ,திருச்சி

---

## காங்கிரஸ் கையெழுத்து இயக்க பிரச்சாரம்



வாக்கு முறைகேடுகளையும், தேர்தல் ஆணையத்தையும் கண்டித்து காங்கிரஸ் கையெழுத்து இயக்க பிரச்சாரத்தை நீலகிரி மாவட்டத் தலைவர் கணேஷ் எம்.எல்.ஏ மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை தொடங்கி வைத்தார்.

## கதர் அங்காடியில், கதர் விற்பனை




கோவை அவினாசி சாலை மேம்பாலம் கதர் அங்காடியில், காந்தி ஜெயந்தி அன்று கதர் விற்பனையை கலெக்டர் பவன்குமார் கிரியப்பவனர் தொடங்கிவைத்தார்.

## ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் விஜயதசமியை முன்னிட்டு சிறப்பு அலங்காரம்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் விஜயதசமியை முன்னிட்டு சிறப்பு அலங்காரம் நடைபெற்றது.

## ராமர் பஜனை கோவில் குடமுழுக்கு



சோளிங்கர் தென் வன்னியர் வீதியில் ராமர் பஜனை கோவில் குடமுழுக்கு நடந்தது.

## காந்தி சிலைக்கு அமலு எம்எல்ஏ மாலை அணிவித்து மரியாதை



குடியாத்தம் நகராட்சி அலுவலகத்தில் மகாத்மா காந்தி சிலைக்கு அமலு எம்எல்ஏ மாலை அணிவித்து மரியாதை செலுத்தி உறுதி மொழி ஏற்றுக்கொண்டார்.

# Durga Puja

## @BHUBANESWAR




















# வாசகர் கடிதம்

விஜய் கூட்டத்தில் அதிக ஆம்புலன்ஸ் வந்தது எப்படி யாருக்கு தெரியும். ஆன்மீக செய்திகள் அனைத்தும் பாராட்டும் படி இருந்தது. எண்ணூர் விபத்தில் 10 லட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. டெட் விவகாரத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் அமைச்சர் அறிவிப்பு. கரூர் விசாரணையை சிபிஐ நடத்த வேண்டும் அன்புமணி கோரிக்கை. தங்கம் விலை 87000 ரூபாயை தாண்டியது. எவ்வளவு ஏறினாலும் வரதட்சணை கேட்காமல் இருக்க மாட்டார்கள். காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நீலகிரியில் மதுக்கடைகள் மூடல். மற்ற ஏரியாக்களில் நிலவரம் எப்படி. புதுக்கவிதைகள் அனைத்தும் சூப்பர் .ரகம். நெல்லை குரலோன் எழுதிய தேசிய முதியோர் தின கவிதை ரசிக்கும்படி இருந்தது. குழந்தைகள் கை வண்ணம் அற்புதமாக உள்ளது கரூரில் நிர்மலா சீதாராமன் ஆய்வு செய்தார் ஏன் மணிப்பூருக்கு செல்லவில்லை. மகாராஷ்டிராவில் கனமழையால் 10 பேர் உயிரிழப்பு ட்ரம்பின் காசா அமைதி திட்டம் முஸ்லிம் நாடுகள் வரவேற்பு. நோபல் பரிசு கிடைக்கும் வரை மனுஷன் போராடிக் கொண்டுதான் இருப்பார் போல. தமிழ்நாடு இ பேப்பரை அதிகாலையில் படிக்கும் போது ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது தினமும் அதிகாலையில் வாசகர்களை எழுப்பி வருவது தமிழ்நாடு இ பேப்பர் என்றால் மிகையாகாது. தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்திற்கு வாழ்த்துக்கள்.



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

அதிக ஆம்புலன்ஸ்கள் வந்ததெப்படி#தமிழக அரசு உயர் அதிகாரிகள் விளக்கம் சிஎம் சார் என் மீது கை வையுங்கள்#தொண்டர்களை விட்டு விடுங்கள்#விஜய் எண்ணூர் அனல் நிலைய கட்டுமான விபத்து#ஒன்பது பேர் பலி#பத்து லட்சம் நிவாரணம் முதல்வர் அறிவிப்பு
கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பிற்கு சிபிஐ விசாரணைக்கு ஆணையிட வேண்டும்#அன்பு மணி
சாம்பார் வெங்காயம் விலை சரிவு#கிலோ ரூ.20க்கு விற்பனை
கரூர் சம்பவத்தில் சமூக வலை தளங்களில் வதந்திகள் பதிவு#சென்னையில் 25 பேர் மீது வழக்கு மற்றும் மூவர் கைது கரூரில் நிர்மலா சீதாராமன் நேரில் ஆய்வு #பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல்
20 ரயில் நிலையங்களில் நவீன சிக்னல் முறை அமைக்க 230 கோடி #ரயில்வே வாரியம் ஒதுக்கீடு பூமிக்கு அடியில் 11 கீமீ ஆழம்#சீனா தேடும் மர்மமென்ன? உலகை மிரட்டும் முயற்சி
இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் 45.78 சதவீதம் நிறைவு#மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தகவல்
காதல் விவகாரத்தில் கொளத்தூர் இளைஞர் கொலை#உடலை கூவத்தில் வீசிய சிறுவன் உட்பட மூவர் கைது
ஆசிய கோப்பை கிரிக்கெட்#இந்தியா ஒன்பதாவது முறையாக சாம்பியன்#கோப்பையை வாங்க மறுத்த இந்தியா
மஹாராஷ்டிராவில் கனமழைக்கு 10 பேர் பலி#12000 பேர் மீட்பு
பாகிஸ்தானில் குவெட்டா நகரில் குண்டு வெடிப்பு#10 பேர் பலி மற்றும் 32 பேர் காயம்
டிரம்பின் காசா அமைதித் திட்டத்திற்கு முஸ்லீம் நாடுகள் வரவேற்பு & சீனா ஆதரவு

இஸ்ரேலின் இனப்படுகொலை எண்ணிக்கை 56000ஐக் கடந்தது
லண்டன் டவிஸ்டோக் சதுக்கத்தில் காந்தி சிலை மர்ம மனிதர்களால் உடைப்பு
பிலிப்பைன்ஸ், வியட்நாமில் புயல்#இருபதுக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு
ஆப்கனில் குடிநீர் தட்டுப்பாடு#தண்ணீருக்காக வாடும் குழந்தைகள்
கத்தாரிடம் மன்னிப்பு கேட்ட நெதன்யாகு



-பி. சுரேகா
சென்னை

வணக்கம். 1.10. 25 அன்றைய தமிழ்நாடு இ பேப்பர்.காம் முதல் பக்கத்தில் அனைவருக்கும் சரஸ்வதி பூஜை நல்வாழ்த்துக்கள் சொன்னது அருமை. அதிக ஆம்புலன்ஸ் வந்தது எப்படி என்ற கேள்வியும் அதற்கான பதிலையும் படித்து அதிர்ச்சியான தகவலாக இருந்தது இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக எனக்கு அமைய உதவியது பாராட்டுக்கள்

திருக்குறளை அதன் பொருளுடன் படித்து மகிழ்ந்தே மிக அற்புதமான குரல் அதன் பொருள் புரிந்தவுடன் மகிழ்ச்சியாக இருந்தது. நவராத்திரி விழா எட்டாம் நாள் என்று விழுப்புரத்தில் உள்ள வாசவி கன்னிகா பரமேஸ்வரி படமும் செய்தியும் மிகவும் அருமை பாராட்டுக்கள்

நலம் தரும் மருத்துவம் பகுதியில் 40 வயது கடந்து விட்டீர்களா நோயின்றி வாழ என்ன உணவு சாப்பிடக்கூடாது என்று மிக அருமையான தகவலை சொன்னது பாராட்டுக்குரியது. நாகர்கோவில் தாம்பரம் சிறப்பு ரயிலுக்கு முன்பதிவு தொடக்கம் என்ற செய்தி மிகவும் அருமை .

ரூபாய் 87000 ஐ நெருங்கும் தங்கத்தின் விலை என்று படித்தவுடன் அதிர்ச்சியாக இருந்தது. திருமணம் செய்யவிருக்கும் பெற்றோர்கள் என்ன செய்வார்கள் என்று நினைத்தவுடன் வேதனையாக இருந்தது .

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் ஜமக்கனி வரலாறும் அவருடைய புகைப்படமும் மிகவும் அருமை. நல்ல பழைய தலைவர்களை பற்றி மிக அருமையான செய்திகளை சொல்லும் தங்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

பல்சுவை களஞ்சியம் பகுதி மிகவும் அருமை. மீம்ஸ் விடுகதை ஜோக்ஸ் என்ற முக்கனி சுவையினை கொடுக்கும் அந்த பகுதிகள் மிகவும் அருமையாக ஆர்வமுடன் பார்க்க வைத்தது. பாராட்டுக்கள். குயின்ஸ் வாக் விழிப்புணர்வு என்ற படமும் மிகவும் அருமை .சீனிவாசரா 64 ஆம் ஆண்டு நினைவு நாள் என்ற செய்தியின் படமும் மிகவும் அருமை பாராட்டுக்கள். இளமையாக இருப்பது என்றால் யாருக்குத்தான் பிடிக்காது. அதை புரிந்து கொண்டு சுற்றுலா பக்கத்தில் மனதையும் உடலையும் இளமையாக வைத்திருக்கும் இடம் என்று மிக அருமையான இடத்தை சுட்டிக் காட்டியது பாராட்டுக்கள்.

20 ரயில் நிலையங்களில் நவீன சிக்னல் முறை அமைக்க ரூபாய் 230 கோடி ரயில்வே வாரியம் ஒதுக்கீடு செய்தது மிகவும் அருமை. இதனால் விபத்துக்கள் தவிர்க்கப்பட்டு பயணம் இனிமையாக அமையும்.

திருமலை திருப்பதி பிரம்மோற்சவம் ஏழாவது நாள் என்று திருப்பதிக்கு அழைத்துச் சென்று செய்தி படங்களை காட்டிய தங்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

பாகிஸ்தானில் உள்ள. குவெட்டா நகரில் குண்டுவெடிப்பு இதனால் 10 பேர் பலி 32 பேர் காயம் என்று செய்து அதிர்ச்சியுடன் படிக்க வைத்தது. அனைத்து பக்கங்களிலும் அருமையான செய்திகளை படித்து சரஸ்வதி பூஜை குதூகலத்துடன் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமம் கொடுத்த செய்திகளையும் குதூகலத்துடன் படித்து ரசித்தேன். தங்களின் இந்த பணிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



-உஷா முத்துராமன்

அனைத்து வாசக சொந்தங்களுக்கும் வணக்கம்.

ஆனந்த பாஸ்கர் இதழில் ஆனந்தி என்ற பெயரில் வெளியாகும் உற்சாக வரிகள் உள்ளம் தொடுவதாய் உள்ளது. It's a good daily dose of positivity tonic. தொடரட்டும் நற்பணி.

கரூர் நெரிசல் மரண துயரம் ஜாலியன் வாலா பாக் அளவுக்கு பேசப்பட்டு வருகிறது. திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், திரு. அன்புமணி அவர்கள் போன்ற தலைவர்கள் அரசின் போக்கை கடுமையாக விமரிசிக்கிறார்கள். யூ டியூபர்கள் மீது வழக்குகள் தொடுக்கப் படுகின்றன. கைதுசெய்யப்படுகிறார்கள். உயர் அதிகாரிகளை ஏவி அரசு சமாதானம் சொல்லிப் பார்க்கிறது. கையறு நிலையில் பேசும் திரு. விஜய் அவர்களின் வீடியோ கவனம் பெறுகிறது. விரைவில் சகஜ நிலை திரும்ப வேண்டுமென பிரார்த்திப்போம்.

பொருட்களின் விலை உயர்ந்தால் பணத்தின் மதிப்பு சரியும் என்பது அடிப்படை பொருளியல் சித்தாந்தம். Inflation leads to decrease in purchasing power. ஆனால் தங்கத்தின் விலை உயர்வால் லட்சாதிபதி கோடீஸ்வரன் ஆகிறானாம். விந்தை அல்லவா இது.

கோவில்களின் முன் பிரசாதம் விற்கும் இந்து அல்லாதவர் மீது தாக்குதல் நடத்தலாம் என்று பிரக்யா தாக்கூர் மீண்டும் சர்ச்சைப் பேச்சு. இவர் ஒரு துறவியாம். சுற்றுலா குறித்த கட்டுரை மிக மிக அருமையான தகவல் களஞ்சியம். பள்ளி மாணவர்களின் கட்டுரைத் திறனுக்கு மதிப்பெண்களை அள்ளித்தரும் அபூர்வ சாதனம். இது மாணவர் சமுதாயத்துக்கான மகத்தான சேவை.

இஸ்ரேலின் இனப்படுகொலை எண்ணிக்கை 66,000 ஐ தாண்டியுள்ள நிலையில் நெதன்யாகு கத்தாரின் இறையாண்மையை மீறி விட்டதற்காக மன்னிப்பு கோரியுள்ளார். இவர் மன்னிப்பு கேட்க வேண்டியது யாரிடம்?

20 நிபந்தனைகளுடன் கூடிய இஸ்ரேல் - பாலஸ்தீன் அமைதி ஒப்பந்தம் பல நாடுகளால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன, இந்தியா உட்பட. ஆனால் காசா மக்கள் ஏற்கவில்லை. மரத்தில் கனிந்தது மடியில் விழும் வரை அது எட்டாக் கனி தான்.

கூட்ட நெரிசலில் குழந்தைகள் மடிந்தது சோகம் தான். பெற்றோர் செய்ததும் தப்புதான். ஆனால் மனமறிந்து எந்தப் பெற்றோரும் தான் பெற்ற பிள்ளையை மரணக்குழியில் தள்ளமாட்டார்கள். எல்லோருக்கும் ஆதங்கம் இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்ச வேண்டாமே.

டக்ளமக்கான் பாலை நிலத்தில் 11,000 மீட்டர் ஆழத்துக்கு துவாரமிட்டு ஆராய்ச்சி செய்யும் சீனாவின் முயற்சி இரண்டு மெல்லிய பட்டு நூலிழைகளின் மீது ஒரு பெரிய ட்ரக்கை ஓட்டும் சாகசம் தான். அது வெற்றி பெற்றால் அதிகாரத்தின் சமநிலையை மாற்றி அமைக்கும் என்பது இதில் ஹைலைட்.
ஏராளமான வட்டாரச் செய்திகளை புகைப் படங்களுடன் வழங்கும் இ இதழின் சாதனை பிரமிக்க வைக்கிறது. அதிலும் குறிப்பாக செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் அவர்களின் படங்களுடன் கூடிய ஆன்மிக news reporting அருமை. கடின அயராத உழைப்புக்கு பாராட்டுக்கள்.
வாசகர் கடிதம் ஒன்றின் மூலம் மேலும் இரண்டு சந்தாதாரர் இணைந்துள்ள செய்தி மகிழ்ச்சி அளிக்கிறது. பாராட்டுக்கள். முயற்சிகள் தொடரட்டும். முன்னேற்றம் படரட்டும்.
மீண்டும் நாளை சந்திப்போம்.
நன்றிகள்.



-P.கணபதி
பாளையங்கோட்டை


HAPPY
Birthday
மோகன்தாஸ்


ஆனந்த பாஸ்கர்
Advertise Business
செய்தியாளர்கள் தேவை
சென்னையிலிருந்து நாள்தோறும் தமிழில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'ஆனந்த பாஸ்கர்' நடுநிலை நாளிதழுக்கு ஆர்வமும், துடிப்பும், ஈடுபாடும் கொண்ட மாவட்ட / தாலுகா செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், விளம்பர முகவர்கள் தேவை.
Call: 933 750 1889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/ மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


Happy Birthday
நரேஷ் குமார


தீபாவளி சிறப்பு சலுகை!
கிணத்துக்கடவு செந்தூர் கார்டனில்
Teak Wood, Car Parking, CCTV, Mosquito Net, RO Water, Screen, Semi Furnished,Modular Kitchen
என அனைத்து வசதிகளுடன் கொண்ட
2BHK வீடு விற்பனைக்கு
தீபாவளி முன்னிட்டு உடனடியாக புக்கிங் செய்யும் நபர்களுக்கு உடனடியாக கிரைய செலவு மற்றும்
1 பவுன் தங்க நாணயம் இலவசம்
95665 71702
SAA


PERSONAL
கார் டிரைவர் தேவை
Qualified Car Driver
VM Garden Outer Ring Road , West Tambaram
Age Below 40
Mail : vmgarden9@gmail.com
WhatsApp: 88700 02462


அழகிய தனி வீடுகள் மற்றும் வீட்டுமனைகள்
நேரடி விற்பனைக்கு
சூலூர்
வீட்டுமனைகள்
ஒரு சென்ட் ரூ.6.45 லட்சம் முதல்
தனி வீடுகள் 2 BHK
ரூ.49.75 லட்சம் முதல்
95854 07000
95854 13000
SAA


வேலைவாய்ப்பு!?
TEAM LIFE INFINITY
one world one family!
அன்பு நண்பர்களே, ரியல் எஸ்டேட் துறையில் பணியாற்ற வாருங்கள்! நமது பொருளாதார வளர்ச்சி மிகப் பெரிய அளவில் மாறுவது நிச்சயம்! இணைந்து செயல்படுவோம்! "ஒரே உலகம், ஒரே குடும்பம்"!
ரியல் எஸ்டேட் துறையில் தமிழகம் எங்கும் முதலீடு இன்றி வேலை வாய்ப்பு!
மகிழ்ச்சியான வாழ்க்கை!
அளவற்ற வருமானம்!
அழகான வீடு வாங்க முடியும்!
சொகுசு கப்பல் பயணம்!
ஆடம்பரமான கார்!
உலகம் முழுவதும் சுற்றுப்பயணம்!
சவுடி மகிழ்ந்திட நண்பர் கூட்டம்!
JOIN US!
www. Team Life infinity.com
9361650101


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


குடோன் வாடகைக்கு
கோவை, பாப்பநாயக்கன்பாளையம் லட்சுமி மில்ஸ் அவினாசி ரோடு அருகில் வானகம் அப்பார்ட்மெண்ட் ஏர்டெல் மெயின்ஆபீஸ் பின்புறம் பொரிக்கடை வீதி, சிற்றம்பலம் லேஅவுட் ல்
1800 சதுர அடி
30 x 60 அடி அளவு,
20 HP பவர் லைன்,
தண்ணீர் வசதியுடன்
வாடகைக்கு உள்ளது
தொடர்புக்கு
98422-55125
-CKNB-



ஹோட்டல்/ லாட்ஜ் விற்பனைக்கு
திருச்சி மாவட்டம்
சமயபுரம் மாரி அம்மன் கோவில் தேரடி வீதியில்
8500 சதுர அடி
26 ரூம்ஸ் கொண்ட
10 கார் பார்க்கிங் வசதி உள்ளது.
பத்திர பதிவு செய்யும்போது உடனடி பணம்.
Clear Title with Bank Loan.
No Brokers.
Call: 99945 62553, 99945 62554, 90032 30032


WANTED
தமிழகதில் உள்ள முன்னனி நிறுவனத்திற்கு
MARKETING EXECUTIVE
தேவை
SALARY Rs.20000/-
கல்விதகுதி : +12
Call : 861000 96501



RS.999/-
Best MLM Software Development Company In India
At Easy EMI
9853719337
7436914247
www.mlmperfect.com


உ
ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி துணை
P.G கிளினிக்
Dr.S.கோகுல் M.B.B.S
பொது நல மருத்துவர்
பார்வை நேரம்:
காலை : 10.00-1.00
மாலை : 4.00-8.00
கந்தர்வக்கோட்டை
தொடர்புக்கு:
9786383588, 6380520263


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756



# பல்சுவை களஞ்சியம்



## வளர் இளம் பருவம்

வளர் இளம் பருவம் முரண்பாடுகள் பல நிறைந்ததாய்க் காணப்படும். குழந்தைத் தனத்திலிருந்து முழுவதுமாக மீள முடியாமல் வாலிபத்திற்கு முழுவதுமாகச் செல்ல முடியாமல் இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் குழந்தைத் தனமும் இருக்கும் பெரிய மனிதத்தனமும் இருக்கும் இவற்றை சரியான படி நிர்வகிக்கத் தெரியாத ஒரு தடுமாற்றமும் அவர்களிடம் காணப்படும் இந்த பருவத்துக் குழந்தைகளைத் தான் வீட்டிலே பெற்றோர்களும் பள்ளியிலே ஆசிரியர்களும் மிகச்சிறப்பாகக் கையாள வேண்டும் கண்ணாடிப் பாத்திரத்தைக் கல்த்தரை மீது வைப்பது போல என்று கவிஞர் சொல்வார் அப்படிப்பட்ட ஒரு சூழலிலே தான் இவர்களை நாம் கையாள வேண்டும் இவர்களிடம் ஏதேனும் ஒரு திறமை ஒளிந்திருக்கும் அந்தத் திறமையைக் கண்டு அவர்களை பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்தி உன்னால் செய்ய முடியும் என்று ஊக்கம் கொடுக்கிற பொழுது மற்ற திறமைகளையும் வளர்த்துக் கொண்டு நல்ல பெயர் வாங்க வேண்டும் என்கிற ;எல்லா மனிதர்களுக்கும் இயல்பாக இருக்கிற எண்ணம் அவர்களுக்கும் ஏற்படும் அதே நேரத்திலே சிறுசிறு தவறுகளையும் செய்து விடுவார்கள் தெரிந்தும் தெரியாமலும் அவர்கள் செய்கிற தவறுகளை எல்லாம் மிக உன்னிப்பாகக் கவனித்து நல்ல விஷயங்கள் இரண்டைச் சொல்லி அதற்கு நடுவே இந்த தவறை குறிப்பிட்டு இவ்வளவு சிறப்பாக இருக்கிற நீ இந்த தவறை மட்டும் செய்யாமல் இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும் உன்னை எல்லோரும் பாராட்டுவார்கள் என்று சொல்ல வேண்டும் அப்படி சொல்கிற பொழுது நம்முடைய நிறைகளையும் தானே இவர்கள் சொல்கிறார்கள் என்கிற எண்ணத்தில் அவர்களுடைய குறைகளை நாம் சுட்டிக்காட்டுவதை அவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் அந்த குறைகளை நிவர்த்தி செய்து நம்மிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்கிற எண்ணம் அவர்களிடம் ஏற்படும்.

வீட்டிலே பெற்றோர்கள் அவர்களுடைய எந்த விதமான எண்ணத்தையும் இந்த பிள்ளைகள் மீது திணிக்காமல் இருப்பதும் இவர்களுக்கு என அதிக நேரத்தை ஒதுக்குவதும் இவர்களுடைய முகமாற்றத்தைக் கொண்டு இவர்களுக்கு என்ன பிரச்சனை என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஒரு ஆவலோடு அவர்களோடு நெருங்கி பேசி பழகி ஒரு தோழமை உணர்வோடு அவர்களுடைய குறைகளை எல்லாம் மெல்ல மெல்ல சுட்டிக்காட்டித் திருத்த வேண்டும் பெற்றோர்களுடைய கோபதாபங்களும் மகிழ்ச்சியும் எதுவும் இந்த பிள்ளைகளிடம் அதிகமாக வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருப்பது பிள்ளைகள் மிகச் சிறப்பாக வளர்வதற்கும் வேறு தவறான வழிகளிலே தங்களை ஈடுபடுத்திக் கொள்ளாமல் இருப்பதற்கும் வழிவகுக்கும் என்பதால் பெற்றோர்களுடைய கடமை மிகவும் அதிகமாக இருக்கும் பள்ளியிலே ஆசிரியர்களும் சின்ன சின்னத் தவறுகளை பெரிது படுத்தாமல் அவர்களிடம் இருக்கக்கூடிய திறமைகளை எல்லாம் சுட்டிக்காட்டி இன்னும் கொஞ்சம் முயன்றால் உன்னால் முடியும் எனக்கு தெரியும் உன்னால் முடியும் என்று சொல்லி அவர்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குகிற பொழுது நிச்சயமாக அவர்கள் முன்னுக்கு வருவார்கள். வளரிளம் பிள்ளைகள் இந்த நாட்டின் எதிர்கால சிற்பிகளாக உருவாகக்கூடிய அற்புதமான குருத்துகள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் இந்த குருத்துக்கள் பெரிதாகி பயன் தருவது நம்முடைய கைகளில் தான் இருக்கிறது.

யோசிப்போமே

**வே.உலகம்மாள்**
கோவை



## பூவுக்கு ஏழு பருவங்கள் என்ன?



நாம சாதாரணமாக ’பூ’ என்று சொல்கிறோம், நம் முன்னோர்கள் ஒரு பூ மலர்ந்து, வாடும் வரை அதற்கு ஏழு வெவ்வேறு பெயர்களை வைத்திருக்கிறார்கள்!

1.அரும்பு
செடியில் மிகச்சிறியதாக, ஒரு ஊசி முனையளவு தோன்றும் முதல் பருவம்!

2 மொட்டு
அந்த அரும்பு சற்று பெரிதாகி, ஆனால் இதழ் விரியாமல் மூடியே இருக்கும் அதுதான் மொட்டு.

3 .முகை
மொட்டு இலேசாக விரியத் தொடங்கி, உள்ளிருந்து நறுமணம் மெதுவாக வெளியே வரும் நேரம்!

4.மலர்
இதழ்கள் முழுமையாக விரிந்து, "நான் தான் பூ!" என்று சொல்லும் நம் எல்லோருக்கும் தெரிந்த அருமையான நிலை!

5. அலர்
பூ நன்றாக மலர்ந்து, அதன் இதழ்கள் இன்னும் கொஞ்சம் பின்னோக்கி வளைந்து, தனது முழு அழகையும் காட்டும் நிலை!

6. வீ
பூவின் அழகு கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கி, வாடி, செடியிலிருந்து கீழே விழத் தொடங்கும் நிலை.

7. செம்மல்
பூ முழுவதுமாக வாடி, காய்ந்து சருகாகிவிடும் கடைசி நிலை.



# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| ஏண்டா உனக்கு வரலாறு பிடிக்காதுன்னு சொல்ற? | சார் நான் விஜய் ரசிகன் |
| கணக்கு பரிட்சையில் கணக்கு போடாமல் எதுக்குடா இப்படி டான்ஸ் ஆடிட்டு இருக்க? | சார் நீங்க தான் சொன்னீங்க ஸ்டெப்ஸ்க்கு மார்க் உண்டு என்று |
| நெஞ்சை தொடும் ஒரு வார்த்தைகள் சொல்லு? | பனியன் |
| பாட்டி நான் ஓட்டப்பந்தயத்திற்கு போறேன் என்ன ஆசிர்வாதம் பண்ணுங்க? | நல்லா மெதுவா பார்த்து ஓடிட்டு வா கன்னு |
| டாக்டர் கண் ஆபரேஷன் பண்றதுக்கு முன்னால சூரியன் வணங்க சொல்றீங்களே ஏன்? | கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் பண்ண முடியாது இல்ல அதுக்கு தான் |



# ஜோக்ஸ்

"நமது மன்னர்தான் தோற்று ஓடி வந்துட்டாரே, பிறகு ஏன் வெற்றி விழா பேனர் வெச்சிருக்கார்.....?"

"துரத்தி வந்த எதிரி மன்னனை ஓட்டப் பந்தயத்தில் இமாலய வித்தியாசத்தில் தோற்கடித்து விட்டாராம்........!!"

++++++++++++++++++++++++++

"மன்னர் போருக்குப் போகும்போது எதுக்கு ரிப்பன் கட்டறீங்க........... ?"

"அவர் புறமுதுகிட்டு கண்ணு மண்ணு தெரியாம ஓடிவரும்போது சில சமயம் சொந்த நாட்டையும் கடந்து அடுத்த நாடு வரை ஓடிப் போய்விடுகிறார். அவரை இங்கேயே பிடிச்சு நிறுத்தத்தான் இந்த ரிப்பன்.....!!"

++++++++++++++++++++++++++

"சூரியரில் வந்த பெரிய சைஸ் பொங்கல் மலர் புத்தகத்தைப் பார்த்ததும் தலைவர் ஏன் அப்செட் ஆயிட்டார்........?"

"அமலாக்கத்த துறையிலிருந்து குற்றப் பத்திரிகைதான் வந்திருக்கோன்னு பயந்துட்டார்..........."

++++++++++++++++++++++++++

பிஏ: - "சார் உங்க முதல்மாச எம்.பி. சம்பளம் பேங்க் அக்கௌண்டில் போஸ்ட் ஆயிடுச்சு...."

எம்பி:- "அப்படியா.....? என் போஸ்டுக்கு எவ்வளவு லைக் கிடைச்சிருக்கு.....? எவ்வளவு பேர் ஷேர் செய்திருக்காங்க........?"

++++++++++++++++++++++++++

"தலைவரோட சட்டைப் பாக்கெட்டுல யாரோட படத்தை வெச்சிருக்கார்னு ஊகிக்கவே முடியலையே ........"

"தலைவர் ராஷ்மிகா மந்தனாவோட பரம ரசிகராம். அதனால அவரோட படத்தைத்தான் வெச்சிருக்கார்..........."

++++++++++++++++++++++++++

"அந்த சுயேட்சை வேட்பாளர் தேர்தலில் படு தோல்வி அடைஞ்சதிலிருந்து அவர் மனைவி அவரைப் போட்டு கொடஞ்சு எடுத்துகிட்டிருக்காங்களா, ஏன்......."




"அவருக்கு மொத்தம் கிடைச்ச மூன்று வோட்டில், அந்த மூன்றாவது வோட்டை போட்டது சின்ன வீடா இருக்குமோன்னு பலமா சந்தேக படறாங்களாம்.....!!"

++++++++++++++++++++++++++

"எதிரி நாட்டு மன்னனுக்கு ஸ்போர்ட்ஸில் அதிக ஈடுபாடு உண்டாம்......."

"அதுக்காக நமது மன்னர் புறமுதுகிட்டு ஓடிவந்த வேகத்தைப் பார்த்து பாராட்டி பரிசுக்கோப்பையை வழங்கியது கொஞ்சம் ஓவர்........!!"

++++++++++++++++++++++++++

"இதென்ன, இங்கே திடீர்னு ஒரு புது காலனி உருவாயிடுச்சே...........?"

"அவங்கெல்லாம் கள்ள ஓட்டு போட வெளியூரிலிந்து கொண்டு வரப்பட்டவங்களாம் வந்தவங்களாம்.......! ஊரு ரொம்பவே புடிச்சுப் போனதால் இங்கேயே நிரந்தரமாக செட்டிலாயிட்டா ங்களாம்........!!"

++++++++++++++++++++++++++

"சே இருந்தாலும் நம்ம தலைவருக்கு இவ்வளவு ஞாபகமறதி இருக்கக் கூடாது........!"

"என்ன செஞ்சார்......?"

"எதிர் கூட்டணியின் ஹெட் ஆபீசுக்குப் போய் தேர்தல் செலவுக்கு எப்ப பணம் தரப் போறீங்கன்னு கேட்டுட்டு வந்திருக்கார் .........!!"

++++++++++++++++++++++++++

"பேங்க் மானேஜரோட BP அதிகமாகிற அளவுக்கு அந்த கஸ்டமர் அப்படி என்ன கேட்டுட்டார் ......?”

"அவருக்கு ஏடிஎம் டெபிட் கார்டு, செக் புக், பாஸ்புக் சௌகரியங்களுடன் ஃபேஸ் புக்கில் ஒரு அக்கௌண்ட் தொடங்க முடியுமான்னு கேட்டாராம்.............!!"

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## தீய சக்திகளை அழிக்கும் குலசை முத்தாரம்மன்



தமிழகத்தின் தசரா என்றாலே குலசை தான். மைசூர் தசராவை மிஞ்சும் வகையில், தமிழ்நாட்டின் தென்கோடி கடற்கரையில் மகிஷாசுரனை சக்தியின் அம்சமான முத்தாரம்மன் சம்ஹாரம் செய்கிறாள். சங்க காலத்தில் குலசேகரப்பட்டினம் 'தென்மறைநாடு' என்று அழைக்கப்பட்டது.

பாண்டிய மன்னன் சடையவர்ம சுந்தரபாண்டியனின் மகன் குலசேகரப்பாண்டியன், இப்பகுதியை சுமார் 50 ஆண்டுகள் ஆட்சி செய்தான். கேரள மன்னனை வெல்ல குலசேகரப்பாண்டியன் படையெடுத்தபோது, அவன் கனவில் முத்தாரம்மன் தோன்றி அருளாசி வழங்கினாள். வெற்றி பெற்ற குலசேகரப்பாண்டியன் முத்தாரம்மனின் உத்தரவுபடி துறைமுகத்தைச் சீர்படுத்தி ஊரையும் பெரிதாக்கினான்.

பாண்டிய மன்னர்கள் முத்துக்களை ஆரமாகத் தொடுத்து அன்னைக்குச் சூட்டி மகிழ்ந்தனர். எனவே அன்னை, 'முத்தாரம்மன்' என வழங்கலானாள். அம்மை நோயினை முத்துப் போட்டதாகக் கூறுவது மரபு. முத்துக் கண்டவர்கள் அம்பாள் பீடத்தைச் சுற்றி நீர் கட்டச் செய்வர். இதன்மூலம் அம்மை நோய் (முத்து நோய்) குணமாகும். முத்துக்களை ஆற்றிக் குணப்படுத்தியதால் அன்னை, 'முத்து ஆற்று அம்மன்' என்றழைத்து, அதுவே மருவி 'முத்தாரம்மன்' என அழைக்கப்படுகிறாள் என்றும் கூறப்படுகிறது.

ஆரம்ப காலங்களில் சுயம்பு வடிவிலேயே முத்தாரம்மனைப் பக்தர்கள் வழிபட்டு வந்தனர். அன்னையின் திருமேனியினைக் கண்குளிரக் கண்டு, தரிசனம் செய்ய வேண்டும் என்று பக்தர்கள் அம்பாளிடம் வேண்டினர். ஒரு நாள் கனவில், தம்மோடு, ஞானமூர்த்தீஸ்வரர் திருமேனியுடன் ஆசாரிக்குக் காட்சி அளித்து, "இதேபோல் எமக்கு ஒரு சிலை செய்து வையுங்கள்" என ஆணையிட்டார்.

அதன்படி அந்தச் சிலை, மயிலாடியில் இருந்து வரவழைக்கப்பட்டு சுயம்புவாக முளைத்துள்ள அம்பாளின் அருகே பிரதிஷ்டை செய்யப்பட்டது. முத்தாரம்மன் அருகே சுவாமி ஞானமூர்த்தீஸ்வரர் வீற்றிருப்பதும், இருவருமே வடக்கு நோக்கி காட்சி தருவதும் இத்தலத்திற்கு மட்டுமே உள்ள பெருமையாகும்.

முன்னொரு காலத்தில் சும்பன், நிசும்பன் என இரு அசுரர்கள் இருந்தார்கள். ஆண்கள் யாராலும் அந்த இரு அசுரர்களையும் வெல்ல முடியாது என்பது வரம். அதனால் தேவர்களும், மூவர்களும் அன்னை ஆதி சக்தியை நோக்கிப் பிரார்த்தித்தனர். மக்களின் துன்பம் கண்டு சகிக்க முடியாத அன்னையும், மிக அழகான மங்கையின் வடிவம் கொண்டு முத்தாரம்மனாகப் பூமிக்கு வந்தாள்.

பிரம்மா, விஷ்ணு, சிவன் என மூவரும் தங்களுடைய சக்திகளை எல்லாவற்றையும் ஒன்று திரட்டி அன்னைக்கு அளித்துவிட்டு, சிலை போல ஆனார்கள். அதேபோல இந்திரனும், திக்குப் பாலர்களும் தங்களுடைய ஆயுதங்களை எல்லாம் அளித்துவிட்டு சிலையாக மாறினார்கள். அப்படி அவர்கள் நின்றதால்தான் அதைக் குறிக்கும் வகையில் பொம்மைக் கொலு வைக்கும் வழக்கம் வந்தது. அன்னை அவர்கள் கொடுத்த ஆயுதங்களைப் பத்துக் கரங்களில் தாங்கி, போர்க்கோலம் பூண்டு சும்ப, நிசும்பர்களையும், அவர்களது படைத்தளபதிகளான மது, கைடபன், ரக்தபீஜனையும் அழித்து தர்மத்தை நிலைநாட்டினாள்.

தவவலிமை மிக்க வரமுனி, ஆணவம் மிகுதியால் அவரது இருப்பிடம் வழியாக வந்த அகத்திய முனிவரை மதிக்கத் தவறியதோடு அவமரியாதையும் செய்தார். மனம் நொந்த அகத்தியர், வரமுனியை எருமைத்தலையும், மனித உடலும் பெற்று குலசேகரப்பட்டினம் இறைவியால் அழிவாயாக எனச் சாபமிட்டார். அகத்திய முனிவரின் சாபத்தால் வரமுனி எருமைத்தலையும் மனித உடலும் பெற்று மகிஷாசுரனாக மாறினார். ஆனாலும் தனது தவவலிமையால் பல வரங்களைப் பெற்றார். முனிவராக வாழ்வைத் துவங்கிய வரமுனி, தனது வாழ்வின் பிற்பகுதியில் அசுரனாகவே வாழ்வை நடத்தினார்.

அவரின் இடையூறுகளைத் தாங்க இயலாத முனிவர்கள் அன்னையை நோக்கி கடும் வேள்வி நடத்தினர். மகிஷாசுரனின் கொடூர செயல்களுக்கு முடிவுகட்டும் விதமாக அவனை அழித்தாள் லலிதாம்பிகை. இந்தப் புனித நாள்தான் தசரா பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்னை பராசக்தி, வேள்வியில் வளர்ந்த ஒன்பது நாட்களும் 'நவராத்திரி' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

நவராத்திரி தினங்களில் குலசேகரப்பட்டினம் கடற்கரையில் சுமார் 4 கிலோமீட்டர் பரப்பளவுக்கு எங்கு பார்த்தாலும் பக்தர்கள் கூட்டம் அலைமோதும். சுமார் 800-க்கும் மேற்பட்ட தசரா குழுவினர் விதம், விதமான வேடத்தில் வந்து குலசையைக் குதூகலப் படுத்துவார்கள். ஒவ்வொரு குழுவும் தனித் தனியாக மேளம் முழங்க வட்டம், வட்டமாக நின்று ஆடுவதைக் காண்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாக விளங்கும்.

குலசேகரப்பட்டினத்தில் தசரா திருவிழா மொத்தம் 12 நாட்கள் நடைபெறும். 10-வது நாள் விஜய தசமி தினத்தன்று மகிஷாசுரனை முத்தாரம்மன் வதம் செய்யும் நிகழ்ச்சி கடலோரத்தில் நடைபெறும். புரட்டாசி மாதம் அமாவாசைக்கு மறுநாள் கொடியேற்றத்துடன் தசரா பண்டிகை தொடங்கும். கொடியேற்ற நாளுக்கு முந்தைய இரவில் சுவாமி, அம்பாள் மற்றும் பரிவாரத் தேவதைகளுக்குக் காப்பு கட்டப்படும். முதல் நாளில் அம்பாள் துர்க்கை கோலத்தில் காட்சி தருவாள். இரண்டாம் நாள் விசுவகர்மேஸ்வரர் கோலத்திலும், மூன்றாம் நாள் பார்வதி கோலத்திலும், நான்காம் நாள் பாலசுப்பிரமணியர் கோலத்திலும், ஐந்தாம் நாள் நவநீத கிருஷ்ணர் கோலத்திலும், ஆறாம் நாள் மகிஷாசுரமர்த்தினியாகவும், ஏழாம் நாள் ஆனந்த நடராசராகவும், எட்டாம் நாள் அலைமகள் கோலத்திலும், ஒன்பதாம் நாள் கலைமகள் கோலத்திலும் காட்சியளித்து வீதிஉலா வருகிறாள்.

பத்தாம் நாள் பிற்பகலில் தசமி திதியில் சுவாமி, அம்பாள் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும், மகிஷாசுர சம்ஹாரத்திற்காகக் கொண்டு செல்லப்படும் சூலத்திற்கும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்குச் சிறப்புப் பூஜைகள் நடைபெற்ற பிறகு, மகிஷாசுரமர்த்தினி கோலம் கொண்டு, கடற்கரையில் அமைந்திருக்கும் சிதம்பரேசுவரர் கோவிலை நோக்கி அம்பாள் புறப்பாடு நடைபெறும். காளிவேடம் போட்டு இருக்கும் அனைவரும் தேர்மண்டபத்துக்கு வந்து, அம்மனைச் சூழ்ந்து நிற்பார்கள். அம்மன் அசுரனைத் தம் சூலாயுதத்தால் குத்தும்போது இவர்களும் தம் கைகளில் உள்ள சூலாயுதத்தால் மகிஷனைக் குத்துவார்கள். உலகத்தில் தர்மத்தைக் காத்து அதர்மத்தை அடியோடு வீழ்த்த இந்த வதத்தை அம்பாள் செய்வதாக ஐதீகம். இது தமிழ்நாட்டில் எந்த ஊர் விழாவிலும் காண முடியாத, காண கிடைக்காத அற்புத காட்சியாகும்.

இதனையடுத்து, சிதம்பரேஸ்வரர் ஆலயத்தை வந்தடையும் அன்னைக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பதினோராவது நாள் காலை பூஞ்சப்பரத்தில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அன்னை அருள்புரிவாள். அம்பாள் மாலை கோவிலை வந்தடைந்த பின்னரே, கொடி இறக்கப்படும். அதன்பிறகு சுவாமி அம்பாள் மற்றும் பரிவார மூர்த்திகளின் காப்புகள் களையப்படும். காப்பு கட்டிய பக்தர்கள் அனைவரும் தங்கள் காப்புகளைக் களைந்து விடுவார்கள். இரவில் அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெறும். 12-வது நாள் முற்பகலில் முத்தாரம்மனைக் குளிர்விப்பதாகக் குடம், குடமாகப் பாலாபிஷேகம் நடத்தப்படும். அத்துடன் தசரா விழா சிறப்பாக நிறைவடையும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூர்- கன்னியாகுமரி சாலையில் திருச்செந்தூரில் இருந்து 12 கி.மீ. தொலைவில் கோவில் உள்ளது.

## விஜயதசமி - கூத்தனூர் சரஸ்வதி கோவிலில் வித்யாரம்பம் வழிபாடு





நவராத்திரி பண்டிகையின் நிறைவாக சரஸ்வதி பூஜை, விஜயதசமி கொண்டாடப்படுகிறது. நேற்று சரஸ்வதி பூஜை கொண்டாடப்பட்டது. அக்டோபர் 2-ந்தேதியான இன்று விஜயதசமி கொண்டாடப்படுகிறது.

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டம் கூத்தனூரில் பிரசித்தி பெற்ற சரஸ்வதி கோவில் உள்ளது. ஒட்டக்கூத்தரால் பாடல் பெற்ற தலமான இங்கு ஆண்டுதோறும் சரஸ்வதி பூஜை மற்றும் விஜயதசமி விழா விமரிசையாக நடைபெறும்.

இன்று கல்வி, கலைகள், தொழிலுக்கு பயன்படுத்தும் பொருட்கள் ஆகியவற்றை வைத்து வழிபடுவது வழக்கம். இதனால் சரஸ்வதி தேவியின் அருளால் தொழில்கள் சிறப்படையும், வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படும், தொடங்கும் செயல்களில் வெற்றி கிடைக்கும் என்பது நம்பிக்கை.

விஜயதசமி நாளில் வித்யாரம்பம் எனப்படும் குழந்தைகளுக்கு முதன் முதலில் கல்வியை தொடங்கும் சடங்குகளும் நடத்தப்படுவது வழக்கம்.

இந்நிலையில் கூத்தனூரில் உள்ள சரஸ்வதி கோவிலில் வித்யாரம்பம் வழிபாடு நடந்தது. நெல்மணியில் 'அ' என எழுத வைத்து குழந்தைகளுக்கு கற்றலை பெற்றோர் தொடங்கி வைத்தனர்.

## மதுரை தல்லாகுளம் பெருமாள் கோவில் திருத்தேர் வைபவம்!



மதுரை: மதுரை தல்லாகுளம் பெருமாள் கோவிலில் புரட்டாசி பெருந்திருவிழாவை முன்னிட்டு கோலாகலமாக நடைபெற்றது திருத்தேர் வைபவம். பக்தர்கள் ஏராளமானோர் பங்கேற்று சுவாமி வழிபாடு செய்தனர்.

மதுரை தல்லாகுளம் அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோவிலில் புரட்டாசிப் பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான திருத்தேர் வைபவம் இன்று கோலாகலமாக நடைபெற்றது.

விழாவில் பக்தர்கள் ஏராளமானோர் பங்கேற்று "கோவிந்தா" என்ற கோஷம் முழக்கிட சுவாமி தரிசனம் செய்தனர்.

மதுரை அருள்மிகு கள்ளழகர் திருக்கோவிலின் இணைப்பு கோவிலான மதுரை தல்லாகுளம் அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோவிலில் நடைபெறும் பிரசித்தி பெற்ற விழாக்களில் ஒன்றான புரட்டாசி மாத பிரமோற்சவ பெருந்திருவிழா கடந்த 24-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி வரும் 05ம் தேதி வரை நடைபெறுகிறது.

பிரமோற்சவ விழாவை முன்னிட்டு தினமும் காலையில் பெருமாள் தாயார்களுடன் பல்வேறு அலங்காரத்திலும், மாலையில் பல்வேறு வாகனங்களிலும் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாளித்து வருகின்றனர்.

இந்நிலையில் பிரமோற்சவ பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான திருத்தேர் வைபவம் இன்று கோலாகலமாக நடைபெற்றது.

முன்னதாக அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் பெருமாள் எழுந்தருள நடைபெற்ற சிறப்பு பூஜைகளைத் தொடர்ந்து திருத்தேர் வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

திருத்தேர் வலம் வந்த பகுதிகளில் எல்லாம் பக்தர்கள் கோவிந்தா எனும் கோஷம் முழங்கிட சுவாமி தரிசனம் செய்தனர்.


மேலும் விழாக்களில் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான தெப்ப உற்சவம் வரும் 04 -ம் தேதி காலை, மாலை என இரு வேளைகளில் நடைபெற உள்ள நிலையில், வரும் 05-ம் ஆம் தேதி உற்சவ சாந்தியுடன் விழா நிறைவு பெறுகிறது.

## காஞ்சிபுரம் ஸ்ரீ மாரியம்மனுக்கு புதிய ரூபாய் நோட்டுக்களால் அலங்காரம்!

காஞ்சிபுரம் கணேஷ் நகரில் அமைந்துள்ள தும்பவனம் மாரியம்மனுக்கு நவராத்திரி விழாவையொட்டி புதிய ரூபாய் நோட்டுக்களால் அலங்கரிக்கப்பட்டு சனிக்கிழமை சிறப்பு தீபாராதனைகள் நடைபெற்றன.

காஞ்சிபுரம் மாநகராட்சி 48வது வார்டு பகுதி கணேஷ் நகரில் அமைந்துள்ளது தும்பவனம் மாரியம்மன் கோயில். நவராத்திரி விழாவையொட்டி இக்கோயிலில் தினசரி அம்மனுக்கு பல்வேறு அலங்காரங்கள் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகிறது.

நவராத்திரி விழாவினையொட்டி சனிக்கிழமை காலையில் மாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேகமும், அலங்கார தீபாராதனைகளும் நடைபெற்றது. மாலையில் மாரியம்மன் ரூ. 10, ரூ. 20, ரூ. 50, ரூ. 100, ரூ. 200 புதிய ரூபாய் நோட்டுக்களால் மகாலட்சுமியாக அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு காட்சியளித்தார். இரவு சிறப்பு தீபாராதனைகளும் நடைபெற உள்ளது.



## குளிர்காலம்: பத்ரிநாத் கோயில் நடை மூடப்படுவது எப்போது?



குளிர்காலத்தை முன்னிட்டு புகழ்பெற்ற பத்ரிநாத் கோயில் வரும் நவம்பர் 25ம் தேதி மூடப்படும் என்று ஜோதிட நிபுணர்கள் கணித்து தேதியை அறிவித்துள்ளனர்.

சார்தாம் என்று அழைக்கப்படும் நான்கு புகழ்பெற்ற கோயில்களில் ஒன்றாகவும், கடல் மட்டத்திலிருந்து 10,170 அடி உயரத்திலும் அமைந்திருக்கும் பத்ரிநாத் கோயில், ஆண்டுதோறும் குளிர்காலத்தில் மூடப்படுவது வழக்கம்.

குளிர் காலத்தில் ஏற்படும் பனிப்பொழிவு காரணமாக இந்த கோயில் முழுவதும் பனியால் மூடப்படும் என்பதால், இந்த வழக்கம் தொன்றுதொட்டு நடத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் கோயில் நடை மூடப்படும் என்றாலும், சாமோலி மாவட்டத்தில் அமைந்துள்ள பத்ரிநாத் கோயில் நடை எந்த தேதியில், எத்தனை மணிக்கு மூடப்பட வேண்டும் என்பதை இன்று விஜயதசமி நாளில் நிபுணத்துவம் பெற்ற ஜோதிடர்கள் அமர்ந்து நேரத்தைக் கணித்து வழங்கியருக்கிறார்கள்.

அவர்களின் கூற்றுப்படி, வரும் நவம்பர் மாதம் 25ம் தேதி பிற்பகல் 2.56 மணியளவில், சிறப்பு பூஜைகளும், வழிபாடுகளும் செய்யப்பட்ட பிறகு, கோயில் நடை சாத்தப்படும் என்று கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

கோயில் நடை சாத்தப்படும் நிகழ்ச்சி சுமார் 5 நாள்களுக்கு முன்பாகவே தொடங்கி, ஒவ்வொரு சன்னிதானத்துக்கும் தனித்தனி பூஜைகள் செய்யப்பட்டு, ஒவ்வொரு நடையாக ஒவ்வொரு நாள் சாத்தப்படுவது வழக்கம்.

உத்தரகண்டில் உள்ள பத்ரிநாத் கோயில் பனிக்காலம் காரணமாக மூடப்பட்டு, சரியாக ஆறு மாதங்களுக்குப் பின்னா வேத மந்திரங்கள் முழங்க பூஜை செய்யப்பட்டு மேள தாளங்களுடன் திறக்கப்படுவது வழக்கம்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் அம்பாள் ஸ்ரீ சரஸ்வதி அலங்காரத்தில் சுவாமி திருவீதி உலா



**செய்யாறு, அக் .3:** செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் நவராத்திரி கொலு பூஜை திருவிழா முன்னிட்டு நேற்று அம்பாள் ஸ்ரீசரஸ்வதி அலங்காரத்தில் எழுந்தருளினார்.

முன்னதாக சிறப்பு யாகசாலை பூஜைகள், அதனைத் தொடர்ந்து மூலவரான அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் ஆலய குரு சங்கர் குருஜி நடத்தினார்.

பின்னர் சுவாமி திருவீதி உலா நிகழ்வு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நாட்டிய கலை நிகழ்ச்சி நடந்தது .திரளான பக்தர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தனர்.

## சிவாஜி கணேசன் சிலைக்கு முதல்வர் மாலை



நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்தநாளில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து நினைவிடத்தை முதல்வர் ஸ்டாலின் சுற்றிப் பார்த்தார். உடன் நடிகர் பிரபு.

## சக்கரத்தாழ்வாரின் நீராடல் விழா



திருமலையில் ஸ்ரீவாரி பிரம்மோத்ஸவத்தின் ஒரு பகுதியாக சக்கரத்தாழ்வாரின் நீராடல் விழா நடந்தது.

## மலையப்ப சுவாமி திவ்ய ரதத்தில் பக்தர்களுக்கு தரிசனம்



திருமலையில் பிரமோற்சவ விழாவில் மலையப்ப சுவாமி திவ்ய ரதத்தில் பக்தர்களுக்கு தரிசனம் அளித்தார்.

## தொல்காப்பியப் பூங்காவினை முதலமைச்சர் ஸ்டாலின் பார்வையிட்டார்



சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் சார்பில் மேம்படுத்தப்பட்ட தொல்காப்பியப் பூங்காவினை முதலமைச்சர் ஸ்டாலின் பார்வையிட்டார்.உடன் அமைச்சர்கள் நேரு, மா.சுப்பிரமணியன், மேயர் பிரியா, வேலு எம்எல்ஏ உள்ளனர்.

## உலக முதியோர் தினம்



**மதுரை,அக்.3:** மதுரை, சிம்மக்கல் முதியோர் இல்லத்தில் உலக முதியோர் தினம் இல்ல மேலாளர் கிரேசியஸ் தலைமையில் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் சமூக ஆர்வலரான ஷேக் மஸ்தான் மற்றும் நூருல்லாஹ் கலந்து கொண்டு, உலகம் முழுவதிலும் உள்ள பெரியோர்கள் இல்லம் மற்றும் சமூகத்திற்கு செய்த பணிகளை நினைவு கூர்ந்து மரியாதை செய்யும் விதமாக இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை விளக்கி, இல்லத்தில் உள்ளவர்களோடு கேக் வெட்டி கொண்டாடினர். பொதுமக்களும் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்..

## காந்தி சிலைக்கு மாலை



## யாக பூஜை



அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை காந்தி மண்டபத்தில் அவரது சிலைக்கு மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அடுத்தபடம்: சென்னை கோசாலையில் நடந்த யாக பூஜையில் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கலந்து கொண்டார்.

## ராணிப்பேட்டை பிரஸ் கிளப் உறவுகள் அனைவருக்கும் நன்றி... நன்றி நன்றி



**ராணிப்பேட்டை, அக்.3:** ராணிப்பேட்டை பிரஸ் கிளப் அமைப்பு 6 வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்நன்னாளில் ராணிப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. கடந்த 5 ஆண்டுகளக நமது அமைப்பு சிறப்பக செயல்பட ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் . இனிவரும் காலங்களில் மேலும் சிறப்பாக செயல்பட ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## உங்களுடன் ஸ்டாலின் முகாம்



அருப்புக்கோட்டை அருகே பந்தல்குடியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் ஆய்வு செய்து பயனாளிகளின் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## காமராஜர் உருவ சிலைக்கு பிரின்ஸ் எம்எல்ஏ மாலை




பெருந்தலைவர் காமராஜர் நினைவு தினமான நேற்று கொட்டாரம் மற்றும் மயிலாடி பகுதிகளில் அமைந்துள்ள காமராஜர் உருவ சிலைக்கு பிரின்ஸ் எம்எல்ஏ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## மாணவர் சேர்க்கை



துரிஞ்சாபுரம் அங்கன்வாடி மையத்தில் விஜயதசமியை முன்னிட்டு மாணவர் சேர்க்கை நடந்தது.




## ஸ்ரீபிரசன்ன வேங்கடாஜலபதி தேரோட்டம்



**திருச்சி, அக். 3:** நேற்று திருச்சியை அடுத்த குணசீலம் ஸ்ரீபிரசன்ன வேங்கடாஜலபதி புரட்டாசி மாத சிறப்பு நிகழ்வான தேரோட்டம் இனிதாக பக்தர்களின் வெள்ளத்தில் மிதந்தபடி.. தேர் அசைந்து வந்தது.

காலை 7.30 மணியளவில் தேரோட்டம் துவங்கியது. கோவிலைச் சுற்றி திருத்தேர் வலம் வந்தது.

கேட்டவர்க்கு கேட்டதை கொடுக்கும் குணசீலம் பெருமாள் அருள் பாலித்த நிகழ்ச்சி பக்தர்களிடையே பரவசமூட்டியது. எங்கும் கோவிந்தா.. கோவிந்தா என்ற நாமம் முழங்கியது.

நிகழ்வில் ஆங்காங்கே அன்னதானம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. மீனாட்சி அம்மாள் அன்னதான அறக்கட்டளை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.



### கான்கிரீட் தளம் அமைக்கும் பணி எம்எல்ஏ துவக்கி வைத்தார்

விளவங்கோடு தொகுதி, மருதங்கோடு ஊராட்சியில் கான்கிரீட் தளம் அமைக்க ரூ.2 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பணியினை தாரகை கத்பர்ட் எம்எல்ஏ துவக்கி வைத்தார்.

## கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு நவராத்திரி விழாவை முன்னிட்டு சிறப்பு அலங்காரம்



**கிருஷ்ணகிரி, அக்.3:** கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு நவராத்திரி விழாவை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் மஞ்சளால் அலங்காரம் செய்து, வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வளையல் மாலைகளுடன், வெட்டிவேர் மாலையுடன் சிறப்பான அலங்காரத்துடன் நம் வாசவி அம்மன் அருள் பாலிக்கும் காட்சி.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## முத்தாலம்மன் ஆலயத்தில் உற்சவருக்கு சரஸ்வதி அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி.



**திருவண்ணாமலை, அக். 3:** திருவண்ணாமலை மாவட்டம் நவராத்திரி பத்தாம் நாள் கீழ் அருணை நகரில் அமைந்திருக்கும் முத்தாலம்மன் ஆலயத்தில் உற்சவருக்கு சரஸ்வதி அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**


## நவராத்திரி ஒன்பதாம் நாள் அர்த்தநாரீஸ்வரர், ஸ்ரீராஜராஜேஸ்வரி அலங்காரத்தில்




**கடலூர், அக். 3:** கடலூர் மாவட்டம் புவனகிரி நவராத்திரி ஒன்பதாம் நாள் விழாவை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் மூலவர் அர்த்தநாரீஸ்வரர் அலங்காரத்தில், உற்சவர் ஸ்ரீராஜராஜேஸ்வரி அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. இவ்விழாவினை ஏற்பாடு செய்தவர்கள் ஆர்ய வைஸ்ய சமாஜம் புவனகிரி .

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சரஸ்வதி, சகலகலாவல்லி, வீணா புஸ்தக தாரணி வடிவில் ஸ்ரீ வாசவி அலங்காரத்தில்



**திருச்சி, அக்.3:** திருச்சி மாவட்டம் முசிறி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் நவராத்திரி விழா முன்னிட்டு சரஸ்வதி, சகலகலாவல்லி, வீணா புஸ்தக தாரணி வடிவில் ஸ்ரீ வாசவி அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# சுற்றுலா: நீலகிரியில் வந்த புதிய போக்குவரத்து கட்டுப்பாடுகள்...



தமிழகத்தில் பள்ளிக்கூட மாணவ-மாணவிகளுக்கு காலாண்டு தேர்வு முடிந்து விடுமுறை விடப்பட்டுள்ளது. அதேபோல் தமிழகம் மற்றும் கேரளாவில் சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜையை முன்னிட்டு 3 நாட்கள் தொடர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. ஆயுத பூஜை, பள்ளி விடுமுறையை முன்னிட்டு தமிழகம் மட்டுமின்றி கேரளாவில் இருந்தும் அதிகளவிலான சுற்றுலா பயணிகள் தொடர் விடுமுறையை கொண்டாட பல்வேறு சுற்றுலா தளங்களுக்கு படையெடுக்க தொடங்கிவிட்டனர். இந்நிலையில் தொடர் விடுமுறையை முன்னிட்டு மக்கள் குடும்பம் குடும்பமாக வாகனங்களில் நீலகிரி மாவட்டத்துக்கு வரத்தொடங்கி உள்ளனர்.

இதனால் நீலகிரியில் கட்டுக்கடங்காத சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. மேல் கூடலூர், மசினகுடியில் உள்ள இ-பாஸ் மையத்தில் சோதனைக்காக வாகனங்கள் நீண்டதூரம் அணிவகுத்துநின்று செல்கின்றன. வெளிமாநில மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வாகனங்கள் வருவதால் இ-பாஸ் சோதனையில் ஊழியர்கள், போலீசார் ஈடுபட்டுள்ளனர். தீவிர இ-பாஸ் சோதனைக்கு பின்னரே வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படுகிறது.

மேலும் முக்கிய சாலைகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் அணிவகுத்து நின்றன.

நீலகிரியில் அதிகளவு சுற்றுலா பயணிகள் குவிந்து வருவதால் இன்று முதல் 5 நாட்களுக்கு (அக்டோபர் 1-ம் தேதி முதல் 5-தேதி வரை) புதிய போக்குவரத்து விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது,

* காலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை அனைத்து வகையான கனரக வாகனங்களும் உதகை, கூடலூர், குன்னூர் நகரில் நுழைய அனுமதியில்லை.

* கோவையில் இருந்து வரும் சுற்றுலா வாகனங்கள் பர்லியார் - குன்னூர் வழியே உதகை வரவேண்டும்.

* மறுமார்க்கமாக உதகையில் இருந்து மேட்டுப்பாளையம் செல்லும் வாகனங்கள் கோத்தகரி வழியே செல்ல வேண்டும்

* உள்ளூர் வாகனங்கள் மற்றும் அரசுப்பேருந்துகள் வழக்கம் போல செல்லலாம்.

* குன்னூர் வழியே உதகை வரும் சுற்றுலாப் பேருந்துகள் ஆவின் வளாகத்தில் நிறுத்தப்பட்டு, அவர்கள் அங்கிருந்து அரசின் சுற்றுப் பேருந்துகளில் சுற்றுலாத் தலங்களுக்கு செல்லலாம்.

* அதேபோல், கோத்தகிரி வழியே வரும் சுற்றுலாப் பயணிகளின் வாகனங்கள் தொட்டபெட்டா சாலையோரமும், கூடலூர் வழியே வரும் சுற்றுலா பேருந்துகள் HPF பகுதியில் நிறுத்தப்பட்டு அங்கிருந்து சுற்றுப் பேருந்துகள் மூலம் சுற்றுலாத் தலங்களுக்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

மேலும் இதுகுறித்து போலீசார் கூறும்போது, தொடர் விடுமுறை காரணமாக சமவெளியில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள் மலைப்பாதையில் வாகனங்களை ஓட்டும்போது மிகுந்த கவனமுடன் போக்குவரத்து விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் தாழ்வான பகுதியில் மெதுவாக வாகனங்களை இயக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தி உள்ளனர்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### இந்தியன் வங்கியில் காலிப் பணியிடங்கள்

இந்தியன் வங்கியில் காலியாக உள்ள 171 Specialist Officers பணியிடங்களை நிரப்ப தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பதவி: Specialist Officers (SO)

சம்பளம்: மாதம் Rs.64,820 முதல் Rs.1,20,940 வரை

காலியிடங்கள்: 171

கல்வி தகுதி: இந்தியன் வங்கி Specialist Officer பணிக்கு விண்ணப்பிப்பவர்கள் அரசு அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனம் அல்லது பல்கலைக்கழகத்தில், சம்பந்தப்பட்ட துறையில் Graduate, B.Tech/B.E, Post Graduate, CA, M.Sc, MBA/PGDM, MCA, MS, ICSI போன்ற படிப்புகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: இந்தியன் வங்கி வேலைவாய்ப்பு 2025 பணிக்கு விண்ணப்பிக்கும் நபர்கள் குறைந்தபட்சம் 23 வயது பூர்த்தியடைந்தவராகவும், அதிகபட்சம் 36 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்

வயது தளர்வு: SC/ ST 5 years, OBC 3 years, PwBD (Gen/ EWS) 10 years, PwBD (SC/ ST) 15 years, PwBD (OBC) 13 years

விண்ணப்ப கட்டணம்: SC/ST/PWBD Rs.175/- Others Rs.1,000/-

தேர்வு செய்யும் முறை:

எழுத்து அல்லது ஆன்லைன் தேர்வு (Written/Online Test) அதனைத் தொடர்ந்து நேர்காணல்.

விண்ணப்பங்களைச் சரிபார்த்தல் (Shortlisting of applications) அதனைத் தொடர்ந்து நேர்காணல்.

விண்ணப்பிக்க கடைசி தேதி: 13.10.2025

விண்ணப்பிக்கும் முறை:

இந்தியன் வங்கி வேலைவாய்ப்பு 2025 பணிக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான மற்றும் ஆர்வமுள்ள நபர்கள், அதிகாரப்பூர்வ அறிவிப்பில் கேட்கப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் தயாராக வைத்துக்கொண்டு, 13.10.2025 தேதிக்குள் https://indianbank.bank.in/ என்ற இணையதளம் வழியாக ஆன்லைனில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

## அரசு பள்ளியில் மாணவர்கள் கோரிக்கை ஏற்று இறகு பந்து களம் அமைக்க நிதி: எடப்பாடி உறுதி

**தஞ்சாவூர், அக்.3:**

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு விளையாட்டுகளுக்கான ஆடுகளத்துடன் நிறைவேற்றப்பட உள்ள விளையாட்டு மைதானத்தை அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆய்வு செய்தார்.

சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதியில், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட உள்ளது. இதில் ஓடுதளம், கால்பந்து, கூடை பந்து, கைப்பந்து, கபடி, லாங் ஜம்ப் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுகளுக்கான தனித்தனி ஆடுகளத்துடன் கூடிய விளையாட்டு மைதானம் அமைக்கப்பட உள்ளது.

இந்த விளையாட்டு மைதானம் அமைய உள்ள அரசு மேல்நிலை பள்ளிக்கு அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேரில் சென்று ஆய்வு செய்தார்.

அப்போது அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களிடம் எடப்பாடி பழனிசாமி உரையாடினார். அப்போது, இந்த விளையாட்டு மைதானத்தில் இறகு பந்து விளையாட்டு தளம் வேண்டும் என்றுகோரிக்கைவிடுத்தனர். கோரிக்கையை ஏற்ற எடப்பாடி பழனிசாமி இறகு பந்து களத்தையும் இந்த விளையாட்டு மைதானத்தில் ஏற்படுத்த பொறியாளர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் அதற்கான கூடுதல் நிதியை தான் வழங்குவதாகவும் ஒப்புதல் தெரிவித்தார்.

## ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை; 5.5 சதவீதமாக நீடிக்கும்: ரிசர்வ் வங்கி அறிவிப்பு

**புதுடெல்லி, அக். 3:**


வங்கிகளுக்கான குறுகிய கால கடன்கள் மீதான ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் இல்லை என ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. இதனால் ரெப்போ விகிதம் 5.5 சதவீதமாக தொடர்கிறது.

வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் கடனுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதம் ரெப்போ வட்டி விகிதம். இரு மாதங்களுக்கு ஒருமுறை ரிசர்வ் வங்கி கூடி, ரெப்போ வட்டி விகிதம் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கும். இந்த நிலையில் ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு ஆலோசனைக் கூட்டத்தில் ரெப்போ வட்டி விகிதத்தை 5.5 சதவீதமாகவே தொடர முடிவு எடுத்துள்ளதாக ரிசர்வ் வங்கி கவர்னர் சஞ்சய் மல்ஹோத்ரா அறிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது: வளர்ந்து வரும் பொருளாதார மற்றும் நிதி முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால தொலைநோக்கு பார்வை அடிப்படையில் ரெப்போ வட்டி விகிதத்தை 5.5% ஆக மாற்றாமல் வைத்திருக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. அடுத்த ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) 6.8 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டு உள்ளது. அமெரிக்கா வரி தொடர்பான முடிவுகள் வளர்ச்சியை பாதிக்கும் என தெரிவித்தார்.

## ஒரே நாளில் இருமுறை உயர்ந்த தங்கம் விலை: பவுனுக்கு ரூ.720 உயர்வு

**சென்னை, அக்.3:**



*சர்வதேச பொருளாதாரச் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதிப்பு, டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பில் சரிவு, உக்ரைன் - ரஷ்யா போர், இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் உள்ளிட்ட காரணங்களால் தங்கம் விலை அதிரடியாக உயர்ந்து வருகிறது.*

*அந்த வகையில் கடந்த சில நாட்களாக தங்கம் விலை தொடர்ந்து ஏற்றம் கண்டு வருகிறது. கடந்த 26-ம் தேதி முதல் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்த சூழலில் இன்று ஒரே நாளில் மட்டும் தங்கம் விலை இருமுறை உயர்ந்துள்ளது. 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.30 மற்றும் பவுனுக்கு ரூ.240 என்று அதிகரித்தது. இதனால் தங்கம் விலை ஒரு பவுன் ரூ.87,000-ஐ கடந்தது. இந்த சூழலில் இன்று பிற்பகல் தங்கம் விலை பவுனுக்கு ரூ.480 அதிகரித்தது. இதனால் தங்கம் விலை ஒரு பவுன் ரூ.87,600-க்கு விற்பனை ஆகிறது. 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.90 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.10,950-க்கும், பவுனுக்கு ரூ.720 உயர்ந்து, ஒரு பவுன் தங்கம் ரூ.87,600-க்கும் விற்பனை ஆகிறது.*

## ரெயில் பயணிகள் ஆதார் இருந்தால் மட்டுமே முன்பதிவு செய்ய முடியும்

**சென்னை, அக்.3:**

*ரெயில்களில் டிக்கெட் முன்பதிவின் போது ஆதார் எண் கட்டாயம் என்ற புதிய நடைமுறை அமலுக்கு வந்தது.*

*இன்று முதல் முன்பதிவுக்கான நேரம் தொடங்கிய முதல் 15 நிமிடங்களுக்கு ஆதாருடன் இணைக்கப்பட்ட ஐஆர்சிடிசி கணக்குகளை கொண்ட பயணிகள் மட்டுமே இனி டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய முடியும். அதாவது எந்த ஒரு ரெயிலுக்கும் ஆதார் பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே முதல் 15 நிமிடம் அனுமதிக்கப்படும்.*

*ஆதார் இணைப்பு இல்லாதவர்கள், இந்த நேரத்தில் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய முடியாது. அதே நேரம், நேரடியாக ரெயில் நிலையம் சென்று டிக்கெட் முன்பதிவு செய்வதில் எந்த மாற்றமும் இல்லை. பொது முன்பதிவுக்கான 10 நிமிடம் நேரக்கட்டுபாட்டிலும் எந்த மாற்றமும் இல்லை.*

*ரெயில் டிக்கெட்டுகளில் முன்பதிவின் போது ஏற்படும் முறைகேடுகளை தடுக்கவே இந்த நடைமுறையை மத்திய ரெயில்வே அமைச்சகம் மேற்கொண்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

## கரூர் அசம்பாவிதம்: விஜய் மீது செந்தில் பாலாஜி சரமாரி குற்றச்சாட்டு

**கரூர், அக்.3:**



கரூரில் 41 பேர் பலியான சம்பவம் தொடர்பாக விஜய் மீது முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி சரமாரியாக குற்றஞ்சாட்டினார்.

விஜய் அன்று மாலை 4 மணிக்கு வந்திருந்தால் இது போன்ற அசம்பாவிதம் ஏற்பட்டிருக்காது என்பது பொதுமக்களின் கருத்தாக உள்ளது என செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கரூரில் நிருபர்கள் சந்திப்பில் செந்தில் பாலாஜி கூறியதாவது: கடந்த 27ம் தேதி கரூரில் நடந்த துயர சம்பவம் மிகவும் துயரமானது. யாராலும் நினைத்து கூட பார்க்க முடியாதது. அந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறோம். காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும்.

மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்த முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதிக்கு கரூர் மக்கள் சார்பில் நன்றி தெரிவித்து கொள்கிறேன். மக்களுக்கு ஆதரவாக இருந்த அனைத்து அரசியல் கட்சி தலைவர்களுக்கும் நன்றி. 29 ஆண்டுகளாக பொது வாழ்வில் இருக்கிறேன். 1996ம் ஆண்டு பொது வாழ்வு தொடங்கியது.

கரூர் மாவட்டத்தில் நடந்த சம்பவம் இதுவரை நடக்காத ஒன்று. வரும் காலத்தில் இதுபோன்ற துயர சம்பவம் கரூரில் மட்டுமல்ல தமிழகத்தில் எங்கேயும் நடக்காத அளவிற்கு, அனைவரும் சேர்ந்து இதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

கரூரில் நடந்த சம்பவத்தை அரசியலாக பார்க்க விரும்பவில்லை. யார் மீது தவறு என பேசாமல் இனிமேல் இதுபோல் நடக்காமல் இருக்க முயற்சிஎடுக்கவேண்டும். கூட்ட நெரிசல் அதிகமாக இருந்ததால் விஜய் வாகனத்தை போலீசார் முன்னதாக நிறுத்த கூறினர். அவரைக் காண வேண்டும் என்பதற்காகவே கூட்டம் அவரை பின் தொடர்ந்தது. விஜய் பேசத் தொடங்குவதற்கு முன்பே அங்கு நிலைமை மோசமடைந்துவிட்டது. இதனால் விஜய்யின் கவனத்தை ஈர்க்க யாராவது செருப்பை வீசியிருக்கக்கூடும். விஜய் பேசிய 6-வது நிமிடத்தில் தான் செருப்பு வீசப்பட்டது. என்னைப் பற்றி விஜய் 16-வது நிமிடத்தில் தான் பேசினார். என் பெயரை விஜய் சொன்ன பிறகுதான் செருப்பு வீசப்பட்டதாக தவறான தகவலை பரப்புகின்றனர். கட்சி அலுவலகத்தில் நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்து கொண்டிருந்தபோது தான் எனக்கு தகவல் வந்தது. அந்த தகவலின்பேரில் தான் கட்சி அலுவலகத்தில் இருந்து 7.47 மணிக்கு அமராவதி மருத்துவமனைக்கு சென்றேன். அதிமுக மாவட்ட செயலாளர் 8 மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார். போலீஸ் எவ்வளவு சொல்லியும் விஜய் கேட்காததால் தான் இவ்வளவு பிரச்சினை. கூட்டநெரிசல் அதிகமாகும்போது, ஜெனரேட்டர் அறை தடுப்புகளை உடைத்து உள்ளே விழத்தொடங்கினர், அப்போதுதான் ஜெனரேட்டர்கள் ஆப் செய்யப்பட்டது. அப்போது கூட சாலை விளக்குகள் ஆப் செய்யப்படவில்லை. அவர்கள் கூடுதலாக அமைத்த விளக்குகள் மட்டும் ஆப் செய்யப்பட்டது. வீடியோவில் எல்லாம் தெளிவாக உள்ளது, எங்கும் மின் விநியோகம் தடைபடவில்லை கரூர் துயர சம்பவத்தை மடைமாற்றம் செய்ய முயற்சிக்கும் வகையில் விஜய் பேசுகிறார்.

விஜய்யின் விக்கிரவாண்டி, மதுரை என அனைத்து கூட்டங்களிலும் தொண்டர்கள் பாதிக்கப்பட்டனர். விஜய்க்கு வருவது கட்டுக்கடங்காத கூட்டம் அல்ல; கட்டுப்பாடற்ற கூட்டம். விஜய், அன்று மாலை 4 மணிக்கு வந்திருந்தால் இதுபோன்ற அசம்பாவிதம் ஏற்பட்டிருக்காது. குறித்த நேரத்தில் வந்திருந்தால் பிரச்சினையே நடந்திருக்காது.

கூட்டம் நடத்தும்போது, எவ்வளவு மக்கள் கூடுவார்கள் என கணித்து அதற்கேற்ற இடத்தை தேர்வு செய்ய வேண்டியது ஒரு அரசியல் கட்சியின் பொறுப்பு. கரூர் லைட் அவுஸ் கார்னரில் அதிகபட்சம் 7000 பேர் நிற்கலாம், உழவர் சந்தை அருகே அதிகபட்சம் 5000 பேர் கூடலாம். கரூர் கூட்ட நெரிசலில் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 108 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளனர். அரசு தன் கடமையை சரியாக செய்தது, ஆனால் அந்த அரசியல் கட்சி தனது கடமையை சரிவர செய்ய வில்லை. யார் பாதிக்கப்பட்டாலும் அரசு துணை நிற்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# 'பரிவாஹன்' பெயரில் வரும் வாட்ஸ்ஆப் லிங்க்-களை திறக்க வேண்டாம்! சைபர் கிரைம் எச்சரிக்கை

**சென்னை, அக்.3:**


'பரிவாஹன்' என்ற பெயரில் வாட்ஸ்ஆப்பில் வரும் போலி லிங்க்கு களை கிளிக் செய்ய வேண்டாம் என தமிழக இணையவழி குற்றப்பிரிவு காவல்துறை எச்சரிக்கை விடுத்து உள்ளது. போக்குவரத்துத் துறையின் பரிவா ஹன் செயலி பெயரில் போலி லிங்குடன் ஏபிகே கோப்புகள் வாட்ஸ்ஆப்பில் அனுப்பப்படுகின்றன.




இதுபோன்ற லிங்க்குகளை கிளிக் செய்தால் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் பணம் திருடப்படலாம் என சைபர் காவல் துறை தெரிவித்துள்ளது. போக்குவரத்து விதிமீறல் தொடர்பாக நிலுவைத் தொகை உள்ளதா கவும் செய்திகள் அனுப்பப்படுகின்றன. அவற்றையும் கிளிக் செய்ய வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து காவல்துறை அத்த கைய விவரங்களை அனுப்பாது என்று சைபர் காவல்துறை கூறியுள்ளது. அதிகாரப்பூர்வ இ-செலான், பரிவா ஹன் இணையதளமான ECHALLAN.PARIVAHAN.GOV.IN-ல் மட்டுமே இ- செலான்களை சரிபார்க்க வேண்டும். போக்குவரத்துத் துறையின் குறுஞ் செய்திகள் டிராயின் அங்கீகரிக்கப்பட்ட VAAHAN-G என்பதுடன் முடிவடையும்.

அறிமுகம் இல்லாத ஏபிகே கோப்பு களை பதிவிறக்க வேண்டாம்.



இணையவழி குற்றப் புகார்களுக்கு 1930 எண்ணை அழைக்கலாம் அல்லது WWW. CYBERCRIME.GOV.IN -ல் பதிவு செய்யலாம். உடனடியாக புகார் செய்தால் பண மோசடி நடக்கும் வங்கிக் கணக்கு கள் முடக்கப்பட்டு பணத்தை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேபோல பங்குச்சந்தை வர்த்த கத்தில் முதலீடு செய்து அதிக லாபம் ஈட்டித் தருவதாக வரும் போன் அழைப்புகள், குறுஞ்செய்திகள் குறித் தும் கவனமாக இருக்குமாறு சைபர் காவல்துறை அறிவுறுத்தியுள்ளது. இன்ஸ்டா, வாட்ஸ்ஆப்பில் வரும் 100 சதவீத ரிட்டர்ன் விளம்பரங்களை நம்ப வேண்டாம் என்றும், செபியில் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவ னங்களை சரிபார்த்த பிறகு மட்டுமே முதலீடு செய்ய வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

# விண்வெளியின் விசித்திரமான உண்மைகள்

நாம் பிறந்து வளர்ந்த இந்த பூமியில், சில விஷயங்களை நாம் கேள்வியே கேட்காமல் ஏற்றுக்கொள்கிறோம். தாகம் எடுத்தால் தண்ணீர் அருந்துகிறோம், தூக்கம் வந்தால் படுத்து உறங்குகிறோம், கீழே விழுந்த பொருள் மேலே வராது என்று நமக்குத் தெரியும். இவை அனைத்தும் புவியீர்ப்பு விசை என்ற ஒற்றை விதியின் கீழ் இயங்கும் அன்றாட அற்புதங்கள்.

ஆனால், ஒரு நொடி கற்பனை செய்து பாருங்கள், நீங்கள் ஒரு ராக்கெட்டில் பயணித்து, விண்வெளியின் எல்லையற்ற வெற்றிடத்திற்குள் நுழைகிறீர்கள். அங்கே, நீங்கள் அறிந்த அத்தனை விதிகளும் அர்த்தமற்றதாகிவிடும். உங்கள் மூளையும் உடலும் முற்றிலும் புதியதொரு சூழலுக்குத் தள்ளப்படும். அப்படி, பூமியில் சர்வ சாதாரணமாகவும், விண்வெளியில் முற்றிலும் செல்லுபடியாகாமல் இருக்கும் 25 விதிகளைப் பற்றி இந்தப் பதிவில் பார்க்கலாம்.

விண்வெளியில் எதுவும் கீழே விழாது, மிதக்கும்.

விண்வெளியில் திசைகள் கிடையாது; எது உங்கள் தலைக்கு மேல் உள்ளதோ அதுதான் 'மேல்'.

விண்வெளியில் உங்களுக்கு எடை இருக்காது.

தண்ணீரைக் குவளையில் இருந்து ஊற்ற முடியாது, அது ஒரு பெரிய குமிழியாக மிதக்கும்.

கண்ணீர் கன்னங்களில் வழியாது, உங்கள் கண்களிலேயே தேங்கி நிற்கும்.

நீங்கள் படுக்க முடியாது, சுவரில் கட்டப்பட்ட ஒரு உறங்கும் பையில் மிதந்தபடிதான் உறங்க வேண்டும்.

விண்வெளி வெற்றிடம் என்பதால், நீங்கள் எவ்வளவு கத்தினாலும் யாருக்கும் கேட்காது.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஒரு நாளைக்கு 16 சூரிய உதயங்களைப் பார்க்கலாம்.

நடக்கவே முடியாது; ஒரு சுவரை உந்தித் தள்ளி, அடுத்த சுவருக்குப் பறந்துதான் செல்ல வேண்டும்.

புவியீர்ப்பு இல்லாததால், சூடான காற்று மேலே போகாது.

நெருப்புப் பற்றவைத்தால், அது பந்து போல கோள வடிவில் எரியும்.

உப்பு, மிளகுத் தூளைத் தூவினால் அவை காற்றில் மிதந்து ஆபத்தை ஏற்படுத்தும். அதனால் திரவவடிவில்தான் பயன்படுத்துவார்கள்.

உடற்பயிற்சி செய்யாவிட்டால், விண்வெளியில் தசை மற்றும் எலும்புகள் பலவீனமடையும்.

புவியீர்ப்பு இல்லாததால், உங்கள் முதுகெலும்பு சற்று நீண்டு, நீங்கள் ஓரிரு அங்குலம் உயரமாகத் தெரிவீர்கள்.

விண்வெளியில் நீங்கள் குப்புறவோ, மல்லாந்தோ படுக்க முடியாது; அது வெறும் மிதத்தல் மட்டுமே.

புவியீர்ப்பை நம்பி மையை வரவழைக்கும் சாதாரண பேனாக்கள் அங்கே எழுதாது. பிரத்யேக 'ஸ்பேஸ் பேனா'தான் வேண்டும்.

ஷவரில் குளிக்க முடியாது. ஈரமான துண்டுகளைக் கொண்டு உடலைத் துடைத்துத்தான் சுத்தம் செய்துகொள்ள வேண்டும்.

சோடா போன்ற பானங்களைக் குடித்தால், வாயுவும் திரவமும் வயிற்றில் பிரியாததால், ஏப்பம் வராது, அது ஒருவித குமட்டலாகவே இருக்கும்.

வியர்வை உடலிலிருந்து வழிந்து ஓடாது, அது உருவான இடத்திலேயே ஒட்டிக்கொள்ளும்.

காபித் தூள் போன்ற பொடிகள் பாத்திரத்தில் தங்காது, மிதக்கத் தொடங்கும்.

விண்வெளியில் வளிமண்டல பாதுகாப்பு இல்லை, அதனால் கதிர்வீச்சு அபாயம் அதிகம்.

விண்வெளிக் கழிவறைகள் காற்றை உறிஞ்சும் வேக்கம் கிளீனர்கள் போல செயல்படும்.

வாசனை உடனடியாகப் பரவாது. உங்கள் மூக்குக்கு அருகில் கொண்டு சென்றால்தான் உணவின் மணத்தை உணர முடியும்.

புவியீர்ப்பு இல்லாததால், ரத்தம் தலைக்கு அதிகமாகப் பாய்ந்து, முகம் உப்பியதைப் போலக் காணப்படும்.

விண்வெளியின் வெற்றிடத்தில் சுவாசிக்கவே முடியாது.

இந்த விதிகளைப் படிக்கும்போது, விண்வெளி என்பது எவ்வளவு விசித்திரமான மற்றும் சவாலான ஓர் இடம் என்பது புரிகிறது. நாம் இந்த பூமியில் அனுபவிக்கும் ஒவ்வொரு சின்ன விஷயமும், ஒரு சொட்டுக் கண்ணீரில் இருந்து, ஒரு கோப்பைக் காபி வரை, புவியீர்ப்பு என்ற மாபெரும் சக்தியால் நமக்கு வழங்கப்பட்ட ஒரு வரம்.

# கரூர் சம்பவத்தில் உடனடியாக சென்றதை சிலர் தவறாக பேசுவது கஷ்டமாக இருக்கிறது: அமைச்சர்

**சென்னை, அக்.3:**

கரூர் சம்பவத்தில் உடனடியாக சென்றதை சிலர் தவறாக திரித்து பேசுவது மிகவும் கஷ்டமாக உள்ளது என பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சி தெற்கு மாவட்ட திமுக அலுவ லகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து பேசிய அமைச்சர், "ஆசிரியர் தகுதித் தேர்வு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும் என்ற தீர்ப்பு வந்துள்ளதாகவும், இது அனைத்து ஆசிரியர்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதாகவும் கூறினார். மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கவும் பள்ளி கல்வி முறை சீர்குலைவதை தடுக்கவும் உச்ச நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனுவைத் தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்தார். கரூர் சம்பவம் தொடர்பாக தமிழக அரசு சார்பில் ஆணையம் அமைக்கப் பட்டுள்ளதாகவும்,



நாகப்பட்டினத்தில் இருந்து வரும்போது செய்தி வந்ததும், இரவு பத்து மணிக்கு கரூர் சென்றதாகவும் அமைச்சர் தெரிவித் தார். பிணவறை முன்பு மாணவர்கள் இறந்து ஸ்ட்ரெச்சரில் தூக்கி வரும்போது எந்த மனி தனுக்கும் மன வேதனை இருக்கும் என்றார். கூட்ட நெரிசலில் உயிரிழப்புகள் நடந்த போது மற்ற அரசாங்கங்கள், காவல்துறை அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுத்தன என்றும், ஆனால் தமிழக அரசு தவெக நிர்வாகிகளை கைது செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.


முன்னாள் நீதிபதி தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையம் யார் மீது தவறு என்பதை கண்டுபிடித்து தெரிவிக்கும்" என்றார்.

# ரயில் பாதை மின் கம்பிகளை நெருங்குவது உயிருக்கு ஆபத்து: மதுரை கோட்ட ரயில்வே நிர்வாகம் எச்சரிக்கை

**மதுரை, அக்.3:**

மதுரை ரயில்வே கோட்டத்தில் ரயில் பாதைகள் அனைத்தும் மின்மயமாக்கப்பட்டுவிட்டது. மின்சார ரயில்களை இயக்க இந்த ரயில் பாதைகளின் மேலே செல்லும் மின்வடங்களில் 75,000 வோல்ட் மின்சாரம் பாய்ச்சப்படுகிறது.

நமது வீடுகளில் பயன்படுத்தப்படும் 230 வோல்ட் மின்சாரம் மனித உடம்பில் பட்டாலே தூக்கி எறியப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படுகிறது. இதற்கு 100 மடங்கு அதிகமான மின்சாரம் ரயில் பாதை மின்வடங்களில் செல்கிறது. இதனால் ரயில் பாதை மின் வடம் அருகில் சென்றாலே பெரிய விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு நேரிடும். எனவே பொதுமக்கள், இளைஞர்கள் ரயில் பாதை மின்வடம் அருகே செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடப்பட் டுள்ளது. கடந்த சனிக்கிழமை மதுரை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த சரக்கு ரயிலின் மேலே 13 வயது சிறுவன் ஏறி சுயபடம் எடுக்க முயன்ற போது பலத்த தீக்காயம் ஏற்பட்டு




மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். அதேபோல கடந்த ஞாயிற்றன்று திண்டுக்கல் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த பெட்ரோல் உருளை சரக்கு ரயிலில் அடையாளம் தெரியாத நபர் ஏறி 25,000 வோல்ட் மின்சாரம் பாயும் மின் வடத்தை பிடித்த தால் தீப்பிடித்து தூக்கி எறியப்பட்டு நடைமேடையில் உயிர் துறந்தார்.

இது போன்ற சம்பவங்கள் மற்றும் விலை மதிப்பில்லாத உயிர் இழப்பை தவிர்க்கவும் ரயில் பாதை மின்வடங்கள் அருகில் செல்ல வேண்டாம் என மதுரை கோட்ட ரயில்வே நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள் ளது.

# நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்

**மதுரை, அக்.3:**

முதல்வரின் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் ஒரு பகுதியாக, விருதுநகர் மாவட்டம் மம்சாபுரம் சிவந்திபட்டி நாடார் மேல்நிலைப் பள்ளியில் செவ்வாய் கிழமை மருத்துவ முகாம் நடைபெற்றது. திருவில்லிபுத்தூர் வட்டார மருத்துவ அலுவலர் கவிதாராணி தலைமையில் நடை பெற்ற முகாமை, திமுக தெற்கு மாவட்ட ஒட்டுநர் அணியின் அமைப்பாளர் தங்க மாங்கனி, மாவட்ட அமைப்பாளர் அய்ய னார், பேரூர் கழக செயலாளர் உதயசூரி யன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர்.

முகாமில் சிவகாசி சுகாதார மாவட்ட அலுவலர் ஜெகவீரபாண்டியன், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சமுத்திரம், மம்சாபுரம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்து வர் கலா உள்ளிட்டோர் பங்கே ற்றனர்.

கண், பல், காது, மூக்கு, தொண்டை உள்ளிட்ட சிறப்பு பிரிவுகளின் மருத்து வர்கள் சிகிச்சை வழங்கினர்.

இசிஜி, ரத்த பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு பரி சோதனைகள் இலவசமாக மேற்கொள் ளப்பட்டன.

முகாமில் 1500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். கர்ப் பிணி பெண்களுக்கு நலம் பெட்டகங்கள் வழங்கப்பட்டன.

## க்ரைம் கார்னர்

# வேலூர் பேராசிரியரிடம் ரூ.80 லட்சம் ஏமாற்றிய இளம்பெண் கைது

**வேலூர், அக்.3:**

வேலூரில் புற்றுநோய்க்கு சிகிச்சை பெறுவதற்காகவும், ஐஏஎஸ் தேர்வுக்காகவும் தனியார் கல்லூரி பேராசிரியரிடம் ரூ.80 லட்சம் வரை ஏமாற்றிய இளம்பெண்ணை மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

சேலம் மாவட்டம் ஆத்தூரைச் சேர்ந்தவர் குணாதேவி என்ற கிளாடிஸ் குணா (24). இவர், கடந்த 2018 முதல் 2021 வரை வேலூரில் உள்ள தனியார் கல்லூரியில் பி.ஏ., ஆங்கிலம் படித்தார். அதே துறையில் காட்பாடியைச் சேர்ந்த ரூபேஷ் சதீஷ்குமார் (42) என்பவர் பேராசிரியராக பணியாற்றி வந்தார். இருவருக்கும் இடையில் பழக்கம் இருந்துள்ளது.

கடந்த 2024-ம் ஆண்டு தனக்கு புற்று நோய் இருப்பதால் சிகிச்சைக்கு பணம் அளிக்கும்படியும், தனது கனவான ஐஏஎஸ் ஆக உதவி செய்ய வேண்டும் என்றும் பேராசிரியர் ரூபேஷ் சதீஷ்குமாரிடம், குணாவதி கூறியுள்ளார். இதற்காக பல்வேறு கட்டங்களில் அவருக்கு ரூபேஷ் சதீஷ்குமார் பணம் அனுப்பியுள்ளார்.

மேலும், வாட்ஸ் - அப் குழு மூலம் நிதி திரட்டி சுமார் ரூ.54 லட்சம் தொகையை குணாவின் சிகிச்சைக்காக அவரது வங்கி கணக்குக்கு அனுப்பியுள்ளார். மேலும், விளம்பரங்கள் மூலமாக அவருக்கு ரூ.10 லட்சம் நிதியுதவி கிடைத்துள்ளது. கடந்த 2024-ம் ஆண்டு ஜனவரி முதல், அதே ஆண்டு ஜூலை மாதம் வரை குணாவதியின் வங்கி கணக்குக்கு சுமார் ரூ.80 லட்சம் பண பரிமாற்றம் நடந்துள்ளது. இதனைத்தொடர்ந்து, ஐஏஎஸ் தேர்வில் தான் வெற்றி பெற்று உத்தரகாண்ட் மாநிலம் முசோரியில் பயிற்சியில் இருப்பதாகவும் கூறி ரூபேஷ்குமாருக்கு அடையாள அட்டை மற்றும் புகைப்படங்களையும் குணா அனுப்பியுள்ளார்.

ஆனால், அந்த அடையாள அட்டை போலியானது என தெரியவந்துள்ளது. தொடர்ந்து படிப்பையும், உடல்நல குறைபாட்டை சுட்டிக்காட்டி தன்னிடம் இருந்து பணத்தை ஏமாற்றியதை ரூபேஷ் சதீஷ்குமார் தெரிந்துகொண்டார். இதுகுறித்து, வேலூர் மாவட்ட குற்றப்பிரிவில் ரூபேஷ் சதீஷ்குமார் அளித்த புகாரின்பேரில், டிஎஸ்பி திருநாவுக்கரசு தலைமையிலான போலீஸார் வழக்குப்பதிவு செய்து குணாவை நேற்று கைது செய்தனர்.

# மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் வெடிகுண்டு இருப்பதாக தவறான தகவல் அளித்த நபர் கைது

**மதுரை, அக்.3:**

மதுரை மாநகர் மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் வெடிகுண்டுகள் இருப்பதாக நேற்று காவல் துறை கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கிடைத்துள்ளது. அதனடிப்படையில் வெடிகுண்டு தடுப்பு நிபுணர்கள் மாட்டுத் தாவணி பேருந்து நிலையத்தில் சோதனை மேற்கொண்டனர். சோதனையில் வெடிகுண்டு இருப்பதாக கிடைத்த தகவல் போலியானது என்பது தெரியவந்தது.

இதுகுறித்து மாட்டுத்தாவணி காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், வெடிகுண்டு இருப்பதாக தவறான தகவலை பரப்பியவர் ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பகுதியை சேர்ந்த வெங்கடாச்சலம் (46) என்பது தெரியவந்தது. மேலும், தூத்துக்குடி மாவட்டம் பகுதியில் பதுங்கி இருந்த வெங்கடாச்சலத்தை மாட்டுத்தாவணி காவல் துறையினர் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்துள்ளனர்.

# தாம்பரத்தில் ஆட்டோ ஸ்டாண்டில் மோதல்; ஓட்டுநர் கொலை: 5 பேரை கைது செய்து போலீஸ் விசாரணை

**தாம்பரம், அக்.3:**

தாம்பரத்தை அடுத்த குறிஞ்சி நகர், வி.ஜி.என். குடியிருப்பில் நேற்று முன்தினம் இரவு காலி இடத்தில் தலை, முகம், கைகளில் பலத்த வெட்டு காயங்களுடன் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டு கிடப்பதாக தாம்பரம் போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. உடனே போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணை நடத்தினர்.

இளைஞரின் உடலை மீட்டு தாம்பரத்தில் உள்ள மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து அருகே நின்றிருந்த ஆட்டோவை சோதனை செய்ததில் அதில் ரத்தக்கரை இருந்தது தெரிந்தது. தொடர் விசாரணையில் கொலை செய்யப்பட்ட இளைஞர், குரோம்பேட்டை, துர்கா நகரை சேர்ந்த வினோத்குமார் என்கிற ஆத்தா வினோத் (28) என்பது தெரியவந்தது.

ஆட்டோ ஓட்டுநரான இவர் மீது, சங்கர் நகர், குரோம்பேட்டை, தாம்பரம் காவல் நிலையங்களில் அடிதடி வழக்குகள் இருப்பதும் தெரியவந்தது. அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்தபோது வினோத்தை பம்மல் நாகல்கேணி பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையில் இருந்து 5 பேர் கொண்ட கும்பல் ஆட்டோவில் கடத்தி வந்து கொலை செய்தது தெரியவந்தது. மேலும், வினோத் சமீபத்தில் புதியதாக ஆட்டோ வாங்கி தாம்பரத்தில் ரயில் நிலையத்தை ஒட்டியுள்ள ஸ்டாண்டில் போட்டு ஓட்டி வந்துள்ளார்.

ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோவை நிறுத்த வேண்டும் என்றால் சங்கத்துக்கு டெபாசிட் கட்ட வேண்டும். சங்கம் சொல்வதைத்தான் கேட்க வேண்டும் என்று நிர்வாகிகள் கூறியதாகவும் அதை வினோத் கேட்கவில்லை என்றும் கூறப்படுகிறது. இதனால் ஏற்பட்ட தகராறு, முன்விரோதமாக மாறி வினோத் கொலை செய்யப்பட்டது முதல் கட்ட விசாரணையில் தெரியவந்தது. தாம்பரம் போலீஸார் ஆட்டோ ஸ்டாண்டை சேர்ந்த 5 பேரை விசாரிக்கின்றனர்.

# டெல்லியில் நூற்றாண்டு நிறைவு விழாவில் அஞ்சல் தலை வெளியீடு: "ஆர்.எஸ்.எஸ். அமைப்பு உருவானது தற்செயல் நிகழ்வு அல்ல" : பிரதமர் மோடி

**புதுடெல்லி, அக்.3:**

டெல்லியில் இன்று நடந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூற்றாண்டு நிறைவு விழாவில் பங்கேற்ற பிரதமர் மோடி, சிறப்பு அஞ்சல் தலை மற்றும் நாணயத்தை வெளியிட்டார். அப்போது ஆர்.எஸ்.எஸ். அமைப்பு உருவானது தற்செயல் நிகழ்வு அல்ல என்று மோடி கூறினார்.



மகாராஷ்டிராவின் நாக்பூரில் டாக்டர் கேஷவ் பலிராம் ஹெட்கேவார், கடந்த 1925ம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். என்றழைக்கப்படும் ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்கத்தை துவங்கினார். இந்த நிலையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாட்டங்கள் நாடு முழுவதும் நடைபெற இருக்கின்றன.

டெல்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் ஆர்.எஸ்.எஸ். நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாட்டம் இன்று காலை 10.30 மணிக்கு கோலாகலமாக தொடங்கியது. இதில் தலைமை விருந்தினராக மோடி பங்கேற்றார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, நாட்டிற்கு அளித்த பங்களிப்பை எடுத்துக்காட்டும் வகையில்பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு அஞ்சல் தலை மற்றும் நினைவு நாணயத்தை பிரதமர் மோடி வெளியிட்டார்.

பின்னர் பிரதமர் மோடி பேசியதாவது: "ஆர்எஸ்எஸ் அமைப்பு 100 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டது தற்செயலான நிகழ்வு அல்ல. 100 ஆண்டுக்கால பயணம் முன்னோடியில்லாதது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடந்து வரும் ஒரு பாரம்பரியத்தின் மறுமலர்ச்சி இது. 100 ஆண்டு கால மகத்தானப் பயணம் தேசத்தின் வளர்ச்சியை கட்டியெழுப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. ஆர்எஸ்எஸ் நாட்டுக்கு பல சேவைகளை செய்துள்ளது. ஆர்எஸ்எஸ் என்பது தீமையை எதிர்த்து உண்மையை நிலைநாட்டிய இயக்கம்.

நானும் ஆர்எஸ்எஸ் அமைப்பை வேராகக் கொண்டவன் தான். பொய்க்கு எதிரான உண்மை; அநீதிக்கு எதிரான நீதி; இருளுக்கு எதிரான ஒளியின் வெற்றி நாள். நாளை விஜயதசமி பண்டிகை; தீமைக்கு எதிராக நன்மை வெற்றி பெற்ற நாள்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

## பாலியல் வன்கொடுமை வழக்கில் பிரஜ்வல் மேல்முறையீடு




**பெங்களூரு, அக்.3:**

முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் பேரனும் மஜத முன்னாள் எம்பியுமான பிரஜ்வல் ரேவண்ணா (33) தனது வீட்டு பணிப்பெண்ணுக்கு பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் பெங்களூரு சிறப்பு நீதிமன்றம், கடந்த மாதம் அவருக்கு சாகும் வரை சிறை தண்டனையும் ரூ.10 லட்சம் அபராதமும் விதித்து உத்தரவிட்டது. இந்த தீர்ப்பை எதிர்த்து பிரஜ்வல் ரேவண்ணா தரப்பில் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நேற்று மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில் கூறியிருப்பதாவது: எனது வீட்டு பணிப்பெண் போலீஸாரின் தூண்டுதலின்பேரில் என் மீது பாலியல் புகார் அளித்தார். சம்பந்தப்பட்ட பெண் 2021-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

இதையடுத்து போலீஸார் அந்த பெண்ணை 2024 மே 10-ம் தேதி எனது பண்ணை வீட்டுக்கு அழைத்து சென்று படுக்கையை காட்டினர். அதில் கறை இருந்ததால் குற்றம் உறுதி செய்யப்பட்டதாக போலீஸார் கூறியுள்ளனர். 3 ஆண்டுகளாக கறையிருக்க வாய்ப்பில்லை. எனவே கீழமை நீதிமன்றம் வழங்கிய சாகும் வரை சிறை தண்டனை, ரூ.10 லட்சம் அபராதம் ஆகியவற்றை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த மனு தசரா விடுமுறைக்கு பின்பு விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மலேசியாவில் ஆசியான் உச்சி மாநாடு: மோடி, ட்ரம்ப் சந்தித்து பேச வாய்ப்பு

**புதுடெல்லி, அக்.3:**

மலேசியாவில் அக்டோபர் 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் ஆசியான் உச்சி மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டின் போது பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஆகியோர் சந்தித்து பேச வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

47-வது ஆசியான் உச்சி மாநாடு மலேசியாவில் நடைபெற உள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க வாய்ப்பு உள்ளதாக தகவல். அதே நேரத்தில் இந்த நிகழ்வில் பங்கேற்க அமெரிக்க அதிபர் டொனல்டு ட்ரம்புக்கு மலேசியா அழைப்பு விடுத்துள்ளதாக தகவல். அதை ட்ரம்ப் உறுதி செய்தால் இந்த நிகழ்வின் போது பிரதமர் மோடி மற்றும் ட்ரம்ப் சந்தித்து பேச வாய்ப்பு உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா 50 சதவீதம் இறக்குமதி வரி விதித்துள்ளது. இந்த வரி விதிப்பு நடைமுறைக்கு அமலுக்கு வந்த பிறகு இரு நாட்டு தலைவர்களின் முதல் சந்திப்பாக ஆசியான் மாநாடு அமைய வாய்ப்புள்ளது.

இந்திய பொருட்களுக்கு 50% இறக்குமதி வரி: அமெரிக்க அதிபராக 2-வது முறையாக பொறுப்பேற்ற டொனால்டு ட்ரம்ப், இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் தங்கள் நாட்டு பொருட்களுக்கு அதிக வரி விதிப்பதாக குற்றம்சாட்டினார். இதையடுத்து, உலக நாடுகள் விதிக்கும் வரிக்கு ஏற்ப பதில் வரி விதிக்கப்படும் என்று கூறிய அவர், அதற்கான பட்டியலை வெளியிட்டார்.

இதற்கு 90 நாள் காலக்கெடு அறிவித்தார். காலக்கெடு முடிந்ததும், உலக நாடுகள் மீதான வரி விதிப்பு அமலுக்கு வந்தது. இந்தியா - அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்துவது தொடர்பாக 5 சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆனால், அமெரிக்காவின் மரபணு மாற்றப்பட்ட வேளாண் விளைபொருட்கள், பால் பொருட்களுக்கான சந்தையை திறக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை இந்தியா ஏற்கவில்லை. இதனால், உடன்பாடு ஏற்படுவதில் தாமதம் ஏற்பட்டது.

இதற்கிடையே, இந்திய பொருட்கள் மீது அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் 25% வரி விதித்தார். இது ஆகஸ்ட் 7-ம் தேதி அமலுக்கு வந்தது. அத்துடன், ரஷ்யாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதாக கூறி கூடுதலாக 25% வரி விதித்தார். இது ஆகஸ்ட் 27-ம் தேதி அமலுக்கு வந்தது.

## அயோத்தியில் உள்ள அனுமன்கிரி கோயில் பிரசாதத்தில் கலப்படம்: ஆய்வில் கண்டுபிடிப்பு




**அயோத்தி, அக்.3:**

அயோத்தியின் பிரபல அனுமன்கிரி கோயில் பிரசாதத்தில் கலப்படம் கண்டறியப்பட்டுள்ளது. உ.பி. உணவுப் பாதுகாப்புத் துறை ஆய்வில் இது தெரியவந்துள்ளது. அயோத்தி ராமர் கோயிலுக்கு அருகில் பழம்பெரும் அனுமன்கிரி கோயில் உள்ளது.

இங்கு அனுமருக்கு பிரசாதமாக நெய்யில் செய்த கடலை மாவு லட்டு படைக்கப்படுகிறது. இந்த பிரசாதத்தை உணவுப் பாதுகாப்புத் துறை துணை ஆணையர் மாணிக்சந்திர சிங் ஆய்வு செய்தார். இதில் பிரசாதத்தில் கலக்கப்படும் நெய் தூய்மையானதல்ல என்று தெரியவந்துள்ளது.

இதற்காக, உணவுப் பாதுகாப்புத் துறையால் எடுக்கப்பட்ட மூன்று மாதிரிகளில் இரண்டு அதன் தரத்தில் இல்லை எனத் தெரியவந்துள்ளது. அயோத்தியில் பிரசாதங்கள் விற்கும் கடைகளிலும் சோதனை நடத்தப்பட்டது. இதில் பல கடைகளில் கலப்படம் இருப்பது தெரியவந்துள்ளது. இக்கடைகளில் விற்கப்படும் ஒரு கிலோ லட்டுகளின் விலை ரூ.450 முதல் ரூ.500 வரை நிர்ணயிக்கப்பட்டது.

இது அதிக விலையாக இருந்தபோதிலும் கலப்படம் கண்டறியப்பட்டுள்ளது. அயோத்தியின் பிரபல தனியார் கடை ஒன்றில் பன்னீர் மற்றும் சீஸ் மாதிரியும் எடுத்து சோதனை செய்யப்பட்டது. இதிலும் கலப்படம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அயோத்திக்கு வருகை தரும் பக்தர்களில் சுமார் 99% பேர் ஹனுமன்கிரி கோயிலுக்கு செல்வது வழக்கம். ராமரை தரிசிப்பதற்கு அனுமரிடம் அனுமதி பெற வேண்டும் என்பது ஐதீகமாக உள்ளது.

முதல்வர் நடவடிக்கை: இச்சூழலில் அயோத்தியின் பல இடங்களில் வெளியான கலப்படம் புகார், ஒரு விவாதப் பொருளாகமாறியுள்ளது. இந்நிலையில் இந்த விவகாரத்தில் முதல்வர் யோகி ஆதித்யநாத் உரிய நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன் கடந்த ஆண்டு திருப்பதி லட்டு பிரசாதத்தில் கலப்படப் புகார் எழுந்து சர்ச்சையானது குறிப்பிடத்தக்கது.

## காங்கிரஸ் தலைவர் கார்கே மருத்துவமனையில் அனுமதி

**பெங்களூரு, அக்.3:**

உடல்நலக்குறைவு காரணமாக அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பெங்களூருவில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பெங்களூருவில் உள்ள எம்.எஸ். ராமையா மருத்துவமனையில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே (83) அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு சிகிச்சை அளித்து வருவதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக காங்கிரஸ் வட்டாரங்களில் வெளியான தகவல்களின்படி, "மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கேவுக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) காய்ச்சல் ஏற்பட்டு கால் வலி இருப்பதாக சொல்லப்பட்டதால் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் தற்போது நலமாக உள்ளார், மருத்துவர்கள் தொடர்ந்து அவரின் உடல்நிலையை கண்காணித்து சிகிச்சையளித்து வருகின்றனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### 'ஆசிய கோப்பையை கேப்டன் சூர்யகுமார் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்' - மோசின் நக்வி

**துபாய், அக்.3:**

நடப்பு ஆசிய கோப்பை தொடரில் சாம்பியன் பட்டம் வென்றது இந்திய கிரிக்கெட் அணி. இருப்பினும் இந்திய அணிக்கு ஆசிய கோப்பை வழங்கப்படவில்லை. இந்த சூழலில் இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவ், கோப்பையை நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவர் மோசின் நக்வி சொல்லி உள்ளதாக பாகிஸ்தான் ஊடக நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற ஆசிய கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை 5 விக்கெட்டுகளில் வீழ்த்தி வெற்றி பெற்றது இந்திய அணி. தொடர்ந்து இந்திய அணி வெற்றிக் கோப்பையை பாகிஸ்தான் நாட்டு அமைச்சரும், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் மற்றும் ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் தலைவருமான மோசின் நக்வி வசமிருந்து பெற முடியாது என தெரிவித்தது. 'நான்தான் கோப்பையை வழங்குவேன்' என மோசின் நக்வி தெரிவித்தார். அதை இந்திய அணி ஏற்க மறுத்தது. இதையடுத்து மோசின் நக்வியின் அறிவுறுத்தலின் படி, அலுவலர் ஒருவர் கோப்பையை கையோடு எடுத்துச் சென்றார். இது சர்ச்சையானது.

இந்திய அணி கோப்பையே இல்லாமல் வெற்றியை கொண்டாடியது. இதனையடுத்து பிசிசிஐ செயலர் தேவஜித் சைகியா செய்தி நிறுவனத்திடம் கூறும்போது, "மோசின் நக்வியிடமிருந்து கோப்பையைப் பெற மாட்டோம் என்று முடிவெடுத்தோம். அவர் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் முக்கியத் தலைவர்களுள் ஒருவர். அதனால் நாங்கள் அவரிடமிருந்து கோப்பையை வாங்க மறுத்தோம், இதனால் அந்தக் கோப்பையை அவர் எடுத்துக் கொள்ளட்டும் என்று அர்த்தமல்ல. அதனால் கோப்பையும் பதக்கங்களையும் அவர் எடுத்துச் செல்ல முடியாது. விரைவில் அது இந்திய அணியிடம் சேர்ப்பிக்கப்படும் என்று நம்புகிறோம்.

வரும் நவம்பர் மாதம் துபாயில் ஐசிசி மாநாடு நடைபெறவிருக்கிறது. இதில் நாங்கள் பாகிஸ்தானின் மோசின் நக்விக்கு எதிராக கடுமையான எதிர்ப்பை பதிவு செய்யப்போகிறோம்." என்றார்

இந்த சூழலில் ஆசிய கோப்பை இறுதிப் போட்டிக்கு பிறகு துபாயில் ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் வழக்கமான ஆலோசனை கூட்டம் நடந்துள்ளது. இதில் பிசிசிஐ துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா, இந்திய அணியின் வசம் கோப்பையை வழங்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார். இந்த கூட்டம் அது தொடர்பானது அல்ல என மோசின் நக்வி தெரிவித்துள்ளதாக தகவல். இந்திய அணிக்கு கோப்பை வேண்டுமானால் ஆசிய கிரிக்கெட் கவுன்சில் அலுவலகத்துக்கு நேரில் வந்து இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் பெற்றுக் கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார். இதை பாகிஸ்தான் ஊடக நிறுவனமான ஜியோ சூப்பர் தெரிவித்துள்ளது. இந்த கூட்டத்தில் பிசிசிஐ நிர்வாகிகள் விர்ச்சுவல் முறையில் பங்கேற்றதாக பிசிசிஐ வட்டாரத்தில் கூறப்படுகிறது.

### ஐசிசி டி20 கிரிக்கெட் பேட்டிங் தரவரிசை: அதிக புள்ளிகள் பெற்று அபிஷேக் சர்மா சாதனை!

**துபாய், அக்.3:**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) டி20 கிரிக்கெட் பேட்டிங் தரவரிசையில் அதிக புள்ளிகளை பெற்ற வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார் இந்திய வீரர் அபிஷேக் சர்மா.

25 வயதான இடது கை பேட்ஸ்மேனான அபிஷேக் சர்மா, அண்மையில் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற ஆசிய கோப்பை டி20 கிரிக்கெட் தொடரில் ஏழு இன்னிங்ஸில் 314 ரன்கள் எடுத்தார். இந்நிலையில், ஐசிசி டி20 கிரிக்கெட் பேட்ஸ்மேன்களுக்கான தரவரிசையில் அதிக புள்ளிகளை பெற்ற வீரர் என்ற வரலாற்று சாதனையை அவர் படைத்துள்ளார். இதற்கு முன்பு இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் டேவிட் மலான், ஐசிசி டி20 கிரிக்கெட் பேட்டிங் தரவரிசையில் அதிகபட்சமாக 919 புள்ளிகளை பெற்றதே சாதனையாக இருந்தது. இதை கடந்த 2020-ம் ஆண்டு மலான் எட்டியிருந்தார். இந்த சூழலில் தற்போது அதை தகர்த்துள்ளார் அபிஷேக். அவர் 926 புள்ளிகளுடன் ஐசிசி டி20 கிரிக்கெட் பேட்டிங் தரவரிசையில் இப்போது முதலிடத்தில் உள்ளார். இதே பிரிவில் மூன்றாவது இடத்தில் உள்ளார் மற்றொரு இந்திய வீரரான திலக் வர்மா.

## மும்பை தாக்குதலுக்கு பிறகு அமெரிக்காவின் அழுத்தத்தால் பாக். மீது போர் தொடுக்கவில்லை: ப.சிதம்பரம் ஒப்புதல்

**புதுடெல்லி, அக்.3:**

மும்பை தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தானுக்கு எதிராக போரை தொடங்க வேண்டாம் என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தடுத்ததாக முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார். காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில், கடந்த 2008, நவம்பர் 26-ம் தேதி மும்பையின் முக்கிய இடங்களில் பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் கொடூர தாக்குதல் நடத்தினர்.

இதில் 166 பேர் உயிரிழந்தனர். 300-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இதன் பிறகு மத்திய உள்துறை அமைச்சராக இருந்த சிவராஜ் பாட்டீல் பதவி விலகினார். அப்போதைய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் உள்துறை அமைச்சராக பொறுப்பேற்றார்.

இந்நிலையில் செய்தி சேனல் ஒன்றுக்கு ப.சிதம்பரம் அளித்த பேட்டியில் கூறியதாவது: மும்பை தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மீது ராணுவ நடவடிக்கை எடுக்க இந்தியா பரிசீலித்தது. ஆனால் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் அழுத்தம் மற்றும் மூத்த ராஜதந்திரிகளின் ஆலோசனை காரணமாக அந்த முடிவு கைவிடப்பட்டது. போரை தொடங்க வேண்டாம் என்று ஒட்டுமொத்த நாடுகளும் கூறின.

நான் உள்துறை அமைச்சராக பொறுப்பேற்ற 2, 3 நாட்களுக்கு பிறகு என்னையும் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கையும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் காண்டலீசா ரைஸ் சந்தித்தார். பதிலடி கொடுக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டார். இது அரசு எடுக்க வேண்டிய முடிவு என்று நான் கூறினேன். ஆனாலும் பதிலடி கொடுக்க வேண்டும் என்ற சிந்தனை என் மனதில் இருந்தது.

இவ்வாறு ப.சிதம்பரம் கூறினார்.

பாஜக விமர்சனம்: இதையடுத்து 'எக்ஸ்' தளத்தில் மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி வெளியிட்ட பதிவில், "தேசம் அறிந்ததை 17 ஆண்டுகளுக்குப் பிறகு ப.சிதம்பரம் ஒப்புக்கொள்கிறார். வெளிநாட்டு சக்திகளின் அழுத்தம் காரணமாக அப்போது இந்த விவகாரம் தவறாக கையாளப்பட்டது. இது மிகவும் தாமதமான ஒப்புதல்" என்று கூறியுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர்: பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை தனது தலையீட்டால் நிறுத்தப்பட்டதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியதை தொடர்ந்து மத்திய அரசை காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் கடுமையாக விமர்சித்த நிலையில் ப.சிதம்பரத்தின் இந்த ஒப்புதல் வெளியாகியுள்ளது.

# எச்1பி விசா கட்டண உயர்வால் இந்தியாவுக்கு பணிகளை மாற்ற அமெரிக்க நிறுவனங்கள் பரிசீலனை

**வாஷிங்டன், அக்.3:**

எச்1பி விசாவுக்கான புதிய விதிமுறைகளை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் செப்டம்பரில் வெளியிட்டார். அதில், எச்1பி விசாவுக்கான கட்டணத்தை 1 லட்சம் டாலராக அதிகரிப்பதாக (இந்திய மதிப்பில் சுமார் ரூ.88 லட்சம்) அறிவிப்பு வெளியிட்டார்.

ஏற்கெனவே 2,000 டாலர் என்பதிலிருந்து 5 ஆயிரம் டாலராக கட்டணத்தை அதிகரித்த ட்ரம்ப் தற்போது பன்மடங்கு உயர்த்தியது திறமையான வெளிநாட்டு தொழிலாளர்களை நம்பியிருக்கும் அமெரிக்க நிறுவனங்களுக்கு பேரிடியாக அமைந்தது.

இந்த நிலையில், அமெரிக்க செனட் சபையில் இதற்கான மசோதா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ட்ரம்பின் விசா கட்டுப்பாடுகள் காரணமாக, அமெரிக்க நிறுவனங்கள் ஏஐ, தயாரிப்பு மேம்பாடு, சைபர் பாதுகாப்பு, பகுப்பாய்வு ஆகியவற்றுடன் பிணைக்கப்பட்ட உயர்நிலை வேலைகளை இந்தியாவுக்கு மாற்றுவது குறித்து தீவிரமாக பரிசீலித்து வருகின்றன.

இது, உலகளாவிய திறன் மையங்களின் (ஜிசிசி) வளர்ச்சியை அதிகரிக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் மற்றும் தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 8% பங்களிப்பை 283 பில்லியன் டாலர் மதிப்பைக் கொண்ட ஐடி துறை வழங்குகிறது. ட்ரம்பின் இந்த முடிவு இந்த துறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றாலும் ஜிசிசி சேவைகளுக்கு அதிகரித்து வரும் தேவை அதனை குறைக்க உதவும் என்று இத்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்க அரசு நிர்வாகம் முடக்கம்: பணி இழக்கும் அபாயத்தில் ஊழியர்கள் - பின்னணி என்ன?



**வாஷிங்டன், அக்.3:**

அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிதி மசோதா தோல்வியடைந்ததை தொடர்ந்து, அந்த நாட்டு அரசு நிர்வாகம் ஆறு ஆண்டுகளில் முதன்முறையாக முடங்கியது. இதனால் பெரும்பாலான அரசு ஊழியர்கள் கட்டாய விடுப்பில் அனுப்பப்படும் சூழல் உருவாகியுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிதி மசோதாவுக்கு 60 சதவீத செனட் உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தால் மட்டுமே, அரசில் செலவீனங்களுக்கான நிதி விடுவிக்கப்படும். இந்த நிலையில், நிதி மசோதாவுக்கு ஆதரவாக குடியரசு கட்சி உறுப்பினர்கள் 53 சதவீதம் பேரும், ஜனநாயக கட்சியின் 47 சதவீத உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

நிதி மசோதாவுக்கு 60 சதவீதம் உறுப்பினர்கள் வாக்களிக்காத காரணத்தால் இந்திய நேரப்படி புதன்கிழமை நள்ளிரவு அமெரிக்க அரசாங்கம் முடங்கியதாக அறிவிக்கப்பட்டது. வெள்ளை மாளிகை சமூக ஊடகங்களில் வெளியிட்ட படத்தில் 'டெமாகிரட்டிக் ஷட் டவுன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அத்தியாவசிய பணிகளான விமான சேவை, அறிவியல் ஆராய்ச்சி, ராணுவம் ஆகியவற்றின் பணிகள் தொடர்ந்து இயங்கும். ஆனால், அந்த ஊழியர்களுக்கான ஊதியம் நிறுத்தி வைக்கப்படும். அதே நேரத்தில் அத்தியாவசியமற்ற பணிகளாக கருதப்படும் 7,50,000 அரசு ஊழியர்கள் கட்டாய விடுப்பில் அனுப்பப்படுவார்கள் அல்லது பணிநீக்கம் செய்யப்படுவார்கள். இந்த வகை அரசு ஊழியர்களுக்கு அமெரிக்க அரசு ஒவ்வொரு நாளும் 400 மில்லியன் டாலர் செலவு செய்கிறது. இதுகுறித்து பேசிய செனட் ஜனநாயகக் கட்சித் தலைவர் சக் ஷுமர், "குடியரசுக் கட்சியினர் மருத்துவ திட்டத்துக்கான மானியங்கள் மற்றும் பிற முன்னுரிமைகளை முறியடிப்பதன் மூலம் ஜனநாயகக் கட்சியினரை கொடுமைப்படுத்த முயற்சிக்கின்றனர்" எனக் குற்றம் சாட்டியுள்ளார். நிதி மசோதா வாக்கெடுப்புக்கு முன்னதாக பேசிய அமெரிக்க அதிபர் ட்ரம்ப், "நாங்கள் நிறைய பேரை பணிநீக்கம் செய்வோம். அவர்கள் ஜனநாயகக் கட்சியினராக இருக்கப் போகிறார்கள்" என்று எச்சரிக்கை விடுத்தார்.

# நோபல் பரிசு.. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீண்டும் குமுறல்!




**இஸ்லாமாபாத், அக்.3:**

"தனக்கு நோபல் பரிசு கிடைக்காவிட்டால் அது அமெரிக்காவுக்கே மிகப்பெரிய அவமானம்" என்று அந்நாட்டு அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உலகில் பல்வேறு துறைகளில் தலைசிறந்து விளங்கும் நபர்களைத் தேர்வுசெய்து அவர்களுக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டு வருகிறது. ஸ்வீடனைச் சேர்ந்த விஞ்ஞானி ஆல்பிரெட் நோபல் நினைவாக, ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் என 6 துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. அந்த வகையில் அமைதிக்கான நோபல் பரிசு அடுத்த மாதம் 10ஆம் தேதி அறிவிக்கப்பட இருக்கிறது. இதற்கிடையே, அமெரிக்க அதிபராக இரண்டாவது முறையாகப் பதவியேற்ற டொனால்டு ட்ரம்ப், அமைதிக்கான நோபல் தனக்குக் கிடைக்காது என ஆரம்பத்தில் கூறிவந்த ட்ரம்ப், தற்போது அதை தனக்குக் கொடுங்கள் என மறைமுகமாகக் கேட்கத் தொடங்கிவிட்டார். அதற்காக, தனக்கு வழங்கும்படி அவர் பல நாடுகளை வலியுறுத்துவதாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்க அதிபராக இரண்டாவது முறை பதவியேற்ற அவர், இந்தியா-பாகிஸ்தான், கம்போடியா-தாய்லாந்து, இஸ்ரேல்-ஈரான், கொசோவோ-செர்பியா, காங்கோ-ருவாண்டா, எகிப்து-எத்தியோப்பியா, ஆர்மீனியா-அஜர்பைஜான் நாடுகளுக்கு இடையிலான போர்களை நிறுத்தியதாகத் தொடர்ந்து கூறிவருகிறார். அதிலும் இந்தியா - பாகிஸ்தான் போரை தாமே நிறுத்தியதாக, இதுவரை 30க்கும் மேற்பட்ட முறை கூறியுள்ளார். மேலும், உக்ரைன் - ரஷ்யா மற்றும் காஸா - இஸ்ரேல் இடையே போரை நிறுத்துவதற்கு தாம் முயற்சிகள் மேற்கொண்டு வருவதன் காரணமாகவும் தனக்கு நோபல் பரிசு அளிக்கப்பட வேண்டும் என அவர் சமீபகாலமாகத் தெரிவித்து வருகிறார்.

7 போர்கள் தடுத்து நிறுத்தம்.. ஆதரவுக்கரம் நீட்டும் நாடுகள்.. ட்ரம்புக்கு நோபல் கிடைக்குமா?

இதையடுத்து, ட்ரம்புக்கு நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என பாகிஸ்தான், இஸ்ரேல், கம்போடியா, அர்மேனியா, அஜர்பைஜான் ஆகிய நாடுகள் வலியுறுத்தி வருவதுடன், அது தொடர்பாக நோபல்கமிட்டிக்கு பரிந்துரைக் கடிதங்களையும் அவர்கள் அனுப்பியுள்ளனர். விரைவில் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட இருக்கும் நிலையில், அது ட்ரம்ப்க்கு வழங்கப்படுமா என்கிற விவாதங்களும் நாளுக்கு நாள் வலுத்து வருகின்றன. ஆனால், அவருக்கு நோபல் பரிசு கிடைக்க வாய்ப்பில்லை என தகவல் உறுதியாகி உள்ளது.

இந்த நிலையில், காஸாவில் போர் நிறுத்தம் குறித்த தன் 20 அம்ச திட்டத்திற்கு ஹமாஸ் ஒப்புக்கொள்ளும் என நம்புவதாக தெரிவித்த ட்ரம்ப், இதுவும் நிறைவேறிவிட்டால் தான் நிறுத்திய போர்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற செயற்கரிய செயல்களை யாராலும் செய்ய முடியாது என்றும் இதற்காக தனக்கு நோபல் பரிசு தந்தே ஆகவேண்டும் என்றும் தெரிவித்தார். ஆனால் அந்த விருது வேறு யாராவது ஒருவருக்குத்தான் செல்லும் என்றும் அதுபோன்று நடந்தால் அமெரிக்காவுக்கே அவமானம் என்றும் ட்ரம்ப் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் குண்டு வெடிப்பில் 13 பேர் உயிரிழப்பு: படுகாயம் அடைந்த 32 பேர் மருத்துவமனையில் அனுமதி

**குவெட்டா, அக்.3:**



பாகிஸ்தானில் கார் குண்டு வெடித்துச் சிதறியதில் 13 பேர் உயிரிழந்தனர். 32 பேர் படுகாயம் அடைந்தனர். பாகிஸ்தானின் தென்மேற்கு பகுதியில் பலுசிஸ்தான் மாகாணம் அமைந்துள்ளது. அந்த நாட்டின் மொத்த பரப்பளவில் 44 சதவீதத்தை இந்த மாகாணம் கொண்டுள்ளது. கடந்த 1947-ம் ஆண்டில் இந்தியா, பாகிஸ்தான் தனி நாடுகளாக உதயமானபோது பலுசிஸ்தானும் தனி நாடாக உருவெடுத்தது. ஆனால் கடந்த 1948-ல் பாகிஸ்தான் ராணுவம், பலுசிஸ்தானை ஆக்கிரமித்தது.

அப்போதுமுதல் பாகிஸ்தான் அரசுக்கும் கிளர்ச்சி குழுக்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அந்த மாகாண மக்கள் மிக நீண்ட காலமாக தனி நாடு கோரி போராடி வருகின்றனர். பாகிஸ்தான் ராணுவ அடக்குமுறையில் இதுவரை லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு உள்ளனர். பலுசிஸ்தானின் அண்டை மாகாணமான கைபர் பக்துன்கவா பகுதி மக்களும் பாகிஸ்தான் அரசுக்கு எதிராக தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த மாகாணத்தின் மாட்ரே தாரா கிராமத்தின் மீது பாகிஸ்தான் விமானப் படை அண்மையில் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதில் பொது மக்களில் 30 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தான் ராணுவத்துக்கு தகுந்த பதிலடி கொடுப்போம் என்று தெஹ்ரிக் இ தலிபான் பாகிஸ்தான் (டிடிபி) எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்த சூழலில் பலுசிஸ்தான் மாகாண தலைநகர் குவெட்டாவில் துணை ராணுவப் படையின் தலைமை அலுவலகத்தை குறிவைத்து டிடிபி தற்கொலைப் படை தீவிரவாதிகள் நேற்று தாக்குதல் நடத்த முயற்சி செய்தனர்.

வெடிகுண்டுகள் நிரப்பிய காரில் டிடிபி அமைப்பை சேர்ந்த 4 தீவிரவாதிகள், துணை ராணுவ படை (எப்.சி.) தலைமை அலுவலகம் நோக்கி விரைந்து சென்றனர். இந்த கார் எப்.சி. அலுவலகம் அருகே உள்ள பிரதான சாலையில் வந்தபோது வெடித்துச் சிதறியது. இதில் 13 பேர் உயிரிழந்தனர். 32-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

# வெனிசுலாவில் ஆட்சிக்கவிழ்ப்பு நடத்த அமெரிக்கா திட்டம்

**நியூயார்க், அக்.3:**

வெனிசுலாவில் மதுரோ தலைமையிலான ஆட்சியை கவிழ்க்க அமெரிக்கா திட்டமிடுகிறது. வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ தலைமையில் சிஐஏ இயக்குநர் ஜான் ராட்க்ளிஃப், ஸ்டீபன் மில்லர் ஆகியோர் மூலம் இந்த திட்டம் அரங்கேற்றப் படுவதாகவும் மதுரோ பதவி நீக்கம் செய்யப்பட்ட முதல் 100 மணி நேரத்திற்குப் பிறகு என்ன செய்வது என்பது குறித்து அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர்களுடன் இவர்கள் திட்டங்களை வகுத்துள்ளனர் எனவும் நியூயார்க் டைம்ஸ் இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# டிரம்ப்பை சந்தித்த பிறகு பகிரங்க மன்னிப்பு கேட்ட நேதன்யாகு

செப்டம்பர் மாத துவக்கத்தில் கத்தார் மீது இஸ்ரேல் குண்டு வீசி தாக்கியது. இதில் ஒரு கத்தார் குடிமகன் பலியானார். போர் நிறுத்த பேச்சுவார்த்தைக்காக அங்கிருந்த ஹமாஸ் தலைவர்களை கொல்லவே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என இஸ்ரேல் கூறினாலும் இது கத்தாரின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கிய நிலையில் அரபு நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தன. இந்நிலையில் டிரம்ப்பை சந்தித்த பிறகு நேதன்யாகு கத்தாரிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்டுள்ளார்.

# தென் ஆப்பிரிக்க மருத்துவமனையில் ஆயிரம் கோடி ரூபாய் ஊழல்




தென்னாப்பிரிக்காவின் தெம்பிசா மருத்துவமனையில் சுமார் 1,029 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்துள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. இந்த பணத்தை குறைந்தபட்சம் மூன்று கும்பல்கள் கொள்ளையடித்துள்ளன என விசாரணை ஆணையம் குறிப்பிட்டுள்ளது. இது "படுபயங்கரமான நிதிக் கொள்ளை" தேசத்தின் நம்பிக்கைக்குச் செய்யப் பட்ட மன்னிக்க முடியாத துரோகம் என தெரிவிக் கப்பட்டுள்ளது. மேலும் பெரிய ஊழல் கூட்டம் இந்த விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானை மீண்டும் தாக்க இஸ்ரேல், அமெரிக்கா திட்டம்



ஈரானை மீண்டும் தாக்க இஸ்ரேலும் அமெரிக்காவும் திட்டமிடுவதாக செய்திகள் வெளியாகின்றன. ஈரான் மீது ஒரு தாக்குதல் நடந்தால் கூட, அது முழு அளவிலான போராக இருக்கும் என ஏற்கெனவே ஈரான் ஜனாதி பதி மசூத் பெசஸ்கியான் கடுமையான எச்ச ரிக்கையை விடுத்திருந்தார். மேலும் அது இஸ்ரேலுடன் மட்டுமல்லாது அமெரிக்காவுடனான போராக இருக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள் ளது. இந்நிலையில் மத்திய கிழக்கு பகுதியில் எப்போது வேண்டுமானாலும் ஒரு புதிய போர் வெடிக்கலாம் என்ற பதற்றம் உருவாகியுள்ளது.

# வியட்நாமில் 'புவாலாய்' புயல் பலி எண்ணிக்கை அதிகரிப்பு



பிலிப்பைன்சில் தோன்றிய புவாலாய் புயல் வியட்நாமில் கரையை கடந்த போது இரு நாட்டிலும் கடுமையான சேதத்தை உருவாக்கியது. இந்த புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளம் உள்ளிட்ட இடர்ப்பாடுகளால் வியட்நாமில் 11 நபர்கள் பலியாகியிருந்த நிலையில் தற்போது பலி எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 21 பேரைக் காணவில்லை எனவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# உள்நாட்டுப்போர் நடக்கும் சூடானில் இனப்படுகொலை, பஞ்சம், காலராவால் சூழப்பட்ட மக்கள்

**கார்டூம், அக்.3:**



சூடானில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரின் காரணமாக அந்நாட்டு மக்கள் இனப் படுகொலை, பஞ்சம், காலரா, பாலியல் வன்கொடுமைகளால் சூழப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

சூடானில் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக ராணுவத்திற்கும் துணை ராணுவத்திற்கும் இடையே அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான போர் நடந்து வருகிறது. இந்த போரில் அந்நாட்டின் பல மாநிலங்களில் விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டு விட்டன.

ஐ.நா. நிவாரண அமைப்புகளால் அனுப்பப்படும் உணவு குடிநீர் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களையும், சேமிப்புக் கிடங்குகளையும் ஆயுதப் படைகள் கொள்ளையடித்து விடுகின்றன அல்லது குண்டு வீசி அழித்து விடுகின்றன.

தண்ணீர் லாரிகளில் வரும் நீரையே மக்கள் நம்பியுள்ள நிலையில் அவற்றின் மீது குண்டு வீசப் படுகிறது. இதனால் அங்கு உணவு மற்றும் தண்ணீர் பஞ்சம் மிக தீவிரமாகியுள்ளது. மேலும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் மீது பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்துள்ளன.

குழந்தைகளை கடத்துவது, அவர்களை கட்டாயமாக தங்கள் ஆயுதக்குழுவில் இணைப்பது ஆகிய கொடுமைகளும் நடந்து வருகின்றன. அந்நாட்டின் டார்ஃபூர் மாநிலத் தலைநகரான எல் ஃபாஷரை துணை ராணுவம் ஆக்கிரமித்துள்ளது. 2024 ஆகஸ்ட் மாதம் இந்த நகரத்திற்கு வெளியே உள்ள உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் முதன்முதலில் பஞ்சம் உருவானதாக அறிவிக்கப்பட்டது.

இந்த பகுதியில் உள்ள மக்களுக்கு 500 நாட்களுக்கும் மேலாக வெளியில் இருந்து எந்த உணவுப் பொருட்களும் கொடுக்க செல்ல முடியவில்லை.

தற்போது அந்த நகரத்தில் உள்ள சந்தைகளும் துணை ராணுவத்தால் குண்டு வீசி அழிக்கப்பட்ட நிலையில் உணவுப் பொருட்களின் விநியோகம் முற்றிலும் தடைபட்டு பஞ்சம் மேலும் தீவிரமடைந்துள்ளது. இது குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டை அதிகரித்து வருகிறது. அதேபோல மருத்துவமனைகள் குறிவைத்து தாக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் உள்நாட்டுப் போரில் பாதிக்கப்படும் நபர்களுக்கு சிகிச்சை தர முடியாத சூழல் உருவாகியுள்ளது.

இந்த சூழலில் இப்போரை தூண்டி விட்டு ஆயுத உதவி செய்துவருகிற சவூதி அரேபியாவிற்கே பாதிக்கப்பட்ட மக்களை சிகிச்சைக்காக கொண்டு செல்ல வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. தற்போது சூடானின் அனைத்து மாநிலங்களிலும் காலரா நோய் பரவி வருகிறது.

இந்த மோசமான சூழல் போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கையை முழுமையாக அழித்துவருகிறது என சர்வதேச அமைப்புகள் தெரிவித்துள்ளன.